# பகுதி-2
# Part - II

## வைகுண்டர் முருகனுக்கு அருளல்

நடை

அன்றந்தத் தேவர்முனி எல்லோருந் தாங்கூடி
சென்றந்தக் கயிலை செகத்தூணி லேதரித்து
வைகுண்டர் பாதமதை வாழ்த்திக் குவித்துவர
மெய்கொண்ட நாதன் வேலவன்செந் தூரணுகி
நடக்க அறுமுகனும் நடுங்கி மிகப்பதறி
வடக்குமுக மாய்விழுந்து வைகுண்ட ரைப்போற்றி
அப்போது வேலவனை ஆதிவைகுண் டர்பார்த்துச்
செப்புகிறார் குண்ட சிவநாத கண்மணியும்
நாடுகேட் கப்போறேன் நாரணன் நான்தானும்
கேடு வருமுனக்குக் கேள்விகே ளாதிருந்தால்
இத்தனை நாளும் என்னைக் கெணியாமல்
புத்தியறி யாதவர்போல் புலம்பினீ ரித்தனைநாள்
இனிவைகுண் டம்பிறந்து ஏகமொரு குடைக்குள்
மனுவொரு சொல்லாள மகாதர்ம மேநினைத்து
மாய்கை யறுத்து மாற்றான் கருவறுத்துத்
தோயக் குழிமூடி தொல்புவியைத் தானாள
நல்லோர்க ளெடுக்க நான்போறேன் கண்டாயே
கல்லார் தமக்குக் கசப்பினிமேல் கண்டாயே
தர்மவை குண்டம் தான்பிறந்தேன் இப்போது
தர்மச் சிறப்புத் தானினிமேல் கண்டாயே
நன்மை யினிக்காணும் நாரணன்கண் ணல்லாது
தின்மையென்ற சொல்லு ஆகாது கண்டாயே
ஆனதா லுன்றனக்கு யானினிமேல் சொல்லும்புத்தி
வானஞ்சூழ் வையகங்கள் வாழுகின்ற மண்டபங்கள்
எத்தனையோ அத்தனையில் இருக்கின்ற தேவரெல்லாம்
அத்தனை பேரும் அறியும் படிசொல்லுவேன்
காணிக்கை வேண்டாதுங்கோ கைக்கூலி கேளாதுங்கோ
மாணிக்க வைகுண்டம் வல்லாத்தான் கண்டிருங்கோ
பூசையே ராதிருங்கோ பெலிதீப மேராதுங்கோ
ஆசைவை யாதிருங்கோ அவகடஞ் செய்யாதுங்கோ

ஞாயமுறை தப்பி நன்றி மறவாதுங்கோ
மாய நினைவு மனதில் நினையாதுங்கோ
வைகுண்டா வென்று மனதில் நினைத்திருங்கோ
பொய்கொண்ட தேரோட்டம் புனக்கார மேராதுங்கோ
தாதி கைகாட்டல் சப்பிரங்க ளேறாதுங்கோ
மோதிப்பே சாதிருங்கோ மோகம்பாராட் டாதுங்கோ
ஆலத்தி கைவிளக்கு ஆராட்டுப் பாராதுங்கோ
சாலத்தீ பாராதுங்கோ சகலபூ ஏராதுங்கோ
கொழுந்து மஞ்சணைமாலை குப்பையொடு சந்தனமும்
விழுந்து நமஸ்காரமுதல் வேண்டாமென்று சொல்லிடுங்கோ
கூவென் றுரையாதுங்கோ கொக்கரித்துப் பேசாதுங்கோ
ஒவென்றுரை யாதுங்கோ ஒமமுறை யேராதுங்கோ
தீபரணை காணாதுங்கோ திருநாளைப் பாராதுங்கோ
ஆபரணம் பூணாதுங்கோ அன்னீதஞ் செய்யாதுங்கோ
எல்லாம் வெறுத்திருங்கோ இத்தனைபோ லுள்ளதெல்லாம்
அல்லாமல் மீறி யாரொருவர் செய்ததுண்டால்
வல்லாத்த கோபம் வரும்வை குண்டருக்கே
நல்லோரே யாகவென்றால் நியாயமதி மேநில்லும்
என்று வைகுண்டம் இயம்பக்கந் தனுரைப்பான்
மன்று தனையளந்த வைகுண்ட நாரணரே .
நீருரைத்த சட்டமதில் நிலைதவறோம் நாங்கடியார்
காரும்நீ ரென்று கந்தன் அடிதொழுதான்
அப்போது வைகுண்ட ராசர்மிக வுரைப்பார்
இப்போது சொன்னதெல்லாம் எனக்குநிச மாகவென்றால்
உன்கோ புரத்தில் உயர்ந்தவட மேல்மூலையில்
பின்கோ புரங்காணப் பிளந்துபோ டென்றுரைத்தார்
அல்லாம லுன்னையென்று அவனியுண் டாக்கிவைத்த
செல்லாச் சிலையைத் திருப்பிவிடு தெற்குமுகம்
உலகோ ரறிய ஒருவாயி லுமடைத்துக்
கலகமாய்க் கண்மூடிக் கவிழ்ந்திருப்பா யோவென்றார்
அல்லா தெனைமறந்து அழிச்சாட்ட மாய்நடந்தால்
பொல்லா தவனே பெருவிலங்கு சிக்குமென்றார்
அப்போது கந்தன் ஆவி மிகக்கலங்கி
இப்போது சொன்னதெல்லாம் யானினி செய்வனென்று
ஆதி யுரைத்ததுபோல் அடியார்நடப்போ மென்றார்
சோதி வைகுண்டம் சொல்வா ரவரோடு
நிலையழி யாதிருங்கோ நீதியாய் நின்றிடுங்கோ

உலகறிய நானும் ஒருநெல் லுடைக்குமுன்னே
பலசோ தனையும் பார்த்துநடுத் தீர்ப்புசெய்வேன்
கலகமதுதானகற்றி கடலில்விஞ்சை பெற்றபடி
விடியும் பொழுது வேசம் பலதணிவேன்
பிடியு மனுவுடனே பெரியயுக மாளவைப்பேன்
வருவோ மொருநெல் மாறி யெடுக்குமுன்னே
கருதி யிருங்கோ கருத்தயர்ந்து போகாதுங்கோ
என்று வைகுண்டம் இத்தனையுங் கந்தனுக்கும்
மன்றுக்கு மென்றும் மறவாதுங் கோவெனவே
அதைவிட் டவர்நடக்க ஆகாயங் கொண்டனரே
இதைவிட் டவர்நடந்து ஏகாய மாகிவர

## பகுதி-2

**விளக்கம்:**

தேவர்கள் எல்லோரும் வைகுண்ட அவதாரம் நிகழ்ந்த செய்தியை கைலையில் பதித்து வைத்தார்கள். பின்னர் வைகுண்டர் பாதத்தில் விழுந்து வணங்கி நின்றார்கள். அவ்வாறு நிற்கின்ற போது ஆறுமுகனாகிய கந்தபெருமான் வடக்கு முகமாக வைகுண்டருடைய பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தார். அப்போது வைகுண்டர் கந்தப் பெருமானைப் பார்த்துச் சொல்லுகின்றார் நாடு கேட்கப் போறேன் நாராயணன் நான்தான். கேள்வி கேட்காமல் இருந்தால் கேடு வரும் உனக்கு என்று கந்தப் பெருமானிடம் கூறினார்.

மேலும் இவ்வளவு நாளும் என்னை கெணியாமல் புத்தி அறியாதவர் போல் நீங்கள் இருந்து விட்டீர்கள். நான் கூறிய திருவாசகத்தை அறியாதவர் போல் இருந்து விட்டீர்கள். இனி வைகுண்டம் பிறந்து உலகை ஒரு குடைக்குள் மக்கள் எல்லோரையும் ஒரு சொல்லுக்குள் மகா தர்மமே நினைத்து ஆள வருவதினால் எல்லாம் இனிமேல் நான் நிச்சயித்தப் படியே நடக்கும். மக்களுடைய மனதில் இருக்கின்ற மாய்கை அறுத்து, சான்றோர் மக்களுக்கு மாற்றானாக இருக்கின்ற கலிநீசர்களின் மனதில் தோன்றுகின்ற கலிமாய எண்ணத்திற்கு காரணமான கருவை அறுத்து நரகத்தில் வீழ வைப்பேன்.

மேலும் நல்ல மக்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு நல்வாழ்வு கொடுத்துத்து இந்த உலகை ஒரு குடைக்குள் ஆள நான் போகின்றேன். ஆகையால் நான் கூறிய ஞானஅறிவை உணராதவர்களுக்கு அவருடைய வாழ்க்கையில் கசப்புத்தான் தோன்ற போகின்றது. இனிமேல் தர்ம சிறப்புகள் தான் இந்த உலகில் நடக்க இருக்கின்றது. அந்த தர்ம சிறப்புகளை எல்லாம் கண்டுகொண்டு இருக்க வேண்டும். நன்மைதான் இனிமேல் தோன்றுமே அல்லாது தீமை என்று சொல்லு இந்த உலகில் இனிமேல் செல்லுபடி ஆகாது. ஆகையால் நான் சொல்லுகின்ற புத்தியை நீங்கள் கேட்டு அதன்படி நடக்க வேண்டும் என்று வையம் சூழ்ந்த வையக த்தில் வாழ்கின்ற எல்லா தேவதைகளுக்கும் அங்கே புத்தி உரைக்கின்றார்.

வானம் சூழ்ந்த வையகங்கள் வாழ்கின்ற மண்டபங்கள் எத்தனையோ அத்தனையில் இருக்கின்ற தேவர் எல்லாம் அத்தனை பேரும் அறியும்படி சொல்லுகின்றேன். காணிக்க வேண்டாதுங்கோ கைக்கூலி கேளாதுங்கோ மாணிக்க வைகுண்டம் வல்லாத்தான் கண்டிருங்கோ அதாவது இந்த உலகில் தெய்வங்கள் என்று சொல்லக்கூடிய பல நாமங்களில் இருக்கின்ற தெய்வச்சக்தியும் அறியும் படியாக சொல்லுகின்றேன் எப்படி என்றால், யாரும் இறைவனுடைய பெயரை சொல்லி காணிக்கை வாங்கக்கூடாது இறைவனை பார்க்க வேண்டும் என்பதற்காக கைக்கூலி கேட்கக் கூடாது மாணிக்க வைகுண்டமாகிய பரம்பொருளை தன்னுடைய உள்ளத்திலே கண்டு கொள்ள வேண்டும் புற வழிபாட்டு முறைகளை ஏற்கக் கூடாது என்றுக் கூறினார்.

இறைவனுடைய திரு உருவத்தை சிலையாக வடித்து அந்த சிலைக்கு பூசை செய்கின்ற முறை, அதற்கு தீபங்கள் ஏற்றி தீபாராதனை செய்கின்ற முறை, இறைவனுக்கு உயிரினங்களை பலி கொடுப்பது போன்ற வழிபாட்டு முறைகள் எதுவும் தேவையில்லை. அதன் மீது கருத்து வைக்கக்கூடாது. அதன் மீது எண்ணம் வைத்து அவ்வாறு இறைவழிபாடு செய்வதுதான் உண்மையான வழிபாடு என்று செய்வது பாவத்தை சேர்ப்பதற்கு சமம். ஏனென்றால் இந்த கலி உலகில் அப்படிப்பட்ட வழிபாட்டு முறைகள் தேவையில்லை. காரணம் அவ்வாறு புற வழிபாட்டு முறையில் மக்கள் கவனம் செலுத்துகின்ற போது தன்னில் இருக்கும் இறைவன் ஆகிய பரம்பொருளைக் கண்டுகொள்ள மாட்டார்கள்.

அவ்வாறு கண்டுகொள்ளாமல் தாங்கள் தேடுகின்ற செல்வத்தை எல்லாம் அந்த வழிபாட்டு முறைகளை செய்து தங்களுடைய வாழ்க்கையினுடைய உன்னத நோக்கத்தை அறிந்து கொள்ளாமல் இருந்து விடுவார்கள். நாம் அந்த பரம்பொருளோடு முகத்தோடு ஐக்கியமாக வேண்டிய நிலையை மறந்து விடுவார்கள். ஆகவே அதை செய்யக்கூடாது என்கின்றார். மேலும் நியாய முறை தப்பி நன்றி மறவாதீங்கோ என்று கூறுகின்றார். அதாவது கலியுகத்தில் எப்படி நாம் வாழ வேண்டும் என்ற நெறியை நாம் தெரிந்து அதன்படி வழிப் பாடுகளை செய்ய வேண்டும். அதை விடுத்து விட்டு பழைய வழிபாட்டு முறைகளை நாம் பின்பற்றி தவறுகளை இழைக்கக் கூடாது.

இந்த கலியுகத்தில் புகழுக்கும் பகட்டுக்கும் அடிமையாகி மக்கள் பல தவறுகளை செய்கின்றார்கள். அவ்வாறு செய்துவிட்டு நாம் இறைவனுக்கு வழிபாடுகளை செய்து விட்டோமேயானால் நாம் எல்லாவித நன்மைகளும் அடைந்து விடலாம் என்று சொல்லி கலிமாய எண்ணத்தை மனதிலே விதைத்து உண்மையான இறை தன்மையை உணராமல் வழிபாட்டு முறைகளை செய்கின்றார்கள். இவை எல்லாம் வேண்டாம் என்று கூறுகின்றார். எந்த விதமான புற வழிபாட்டு முறைகள் தேவையில்லை. ஆனால் உண்மையான தூய்மையான மனதோடு இருந்தாலே போதும். வைகுண்டாய் என்று மனதில் நினைத்திருந்தாலே போதும். இறைவன் நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்,

ஆகவே நன்மையை கடைபிடிக்க வேண்டும் தீமையை கைவிட வேண்டும் என்று எண்ணி வாழ்ந்தாலே போதும் இறைவனுடைய அருள் பரிபூரணமாக கிடைக்கும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் பொய் கொண்ட தேரோட்டமாகிய புனக்காரங்களைச் செய்யக்கூடாது. காரணம் என்னவென்றால் இன்றைக்கு தேரோட்டம் திருவிழாக்கள் ஆடம்பர மோகத்தின் காரணமாக நடைபெறுகின்றது. அவை நடத்துவதற்காக மக்களிடமிருந்து வரியை பிரித்து அங்கு ஒரு ஆடம்பரத்தோடும், மக்கள் தன்னை மதிக்க வேண்டும் என்ற ஒரு பெயருக்காகவும் புகழுக்காகவும் நடத்தப்படுகின்றது.

இதனால் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் நடைபெற போவதில்லை. ஆகவே இந்த தேரோட்டதினால் மக்கள் இறைவனை

உணர்ந்து கொள்ள போவது இல்லை. ஆகவே இப்படிப்பட்ட அந்த பொய் கொண்ட தேரோட்டமாகிய பூஜை முறைகளை எல்லாம் தவிர்க்க வேண்டும். மேலும் தாதிக்கைக்காட்டல் சப்பரங்கள் ஏறுவது அதாவது பெண்கள் ஆடி அசைந்து வர இறைவன் தெருவீதி வலம் வருகின்ற இந்த முறைகளை எல்லாம் கைவிட வேண்டும்.

மேலும் சொல்லுகின்றார், இந்த கலிவுலகில் யாருடனும்" மோதி பேசாதரங்கோ மோகம் பாராட்டாதீங்கோ" அதாவது இன்றைய திருவிழாக்கள் காலங்களில் தன்னுடைய பெயரை நிலை நிறுத்த வேண்டும் என்று மக்கள் பேருக்காகவும் புகழுக்காகவும் தாங்கள் சொல்வதை நிலை நிறுத்த வேண்டும் என்று பல பிரச்சனைகளை உருவாக்குகின்றார்கள். பேருக்காகவும் புகழுக்காகவும் மோகத்தில் அடிமையாக இருக்கின்றார்கள். அப்படி செய்யக்கூடிய வழிபாட்டு முறைகள் தவிர்க்கப்பட வேண்டும். மேலும் ஆலத்தி எடுப்பது கைவிளக்கு ஏந்தி இறைவனுக்கு வழிபாடு செய்யக்கூடிய முறைகள் இவை எல்லாம் தேவையில்லை.

இறைவனுடைய திரு உருவ சிலையை வைத்து ஆராட்டு பார்க்கின்ற அந்த முறை தேவையில்லை. பல விதங்களில் தீபாராதனை காட்டி இறைவனை வழிபடக்கூடிய முறையை தேவையில்லை. சகல விதமான பூக்களை வைத்து இறைவனுக்கு அலங்காரம் செய்து வழிபடுகின்ற பல அலங்கார நிகழ்வுகள் எல்லாம் தேவையில்லை. கொழுந்து மஞ்சணை மாலை குப்பையுடன் சந்தனமும் அதாவது கொழுந்து மஞ்சணைகளை பெட்டிகளில் வைத்து இறைவனுக்கு வழிபாடு செய்வது வழக்கம். ஆனால் அத்தகைய வழிபாட்டு முறைகள் எதுவும் தேவையில்லை என்பதை சொல்லுகின்றார். மேலும் இறைவனுடைய சன்னிதானத்திலே ஒரு திருவுருவ சிலையை வைத்து சிலையின் முன்பு அங்கு இறைவன் இருக்கின்றார் என்பதை நினைத்து விழுந்து நமஸ்காரம் செய்கின்ற முறை எல்லாம் தேவையில்லை என்று சொல்லுகின்றார்.

மேலும் அய்யா கூறுகின்றார், கூவென்று உரையாதீங்கோ, கொக்கரித்து பேசாதீங்கோ, இறைவனுடைய பெயரை ஆர்ப்பாட்டமாக பேசி ஓவென்று குரல் எழுப்பி வழிபாடு செய்யக்கூடிய முறைகள் எல்லாம் தேவையில்லை. எப்பொழுதும் அமைதியாக இறைவனை மனதில் நினைத்து ஒருநிலைப்பட்ட மனதோடு இறைவனை வணங்க வேண்டும். மேலும் இறைவழிபாடு செய்யுகின்ற அந்த நேரத்தில் ஓவென்று ஒலி எழுப்பி கூச்சலிடுவது

கூடாத ஒரு காரியமாகும். மேலும் ஓம முறை ஏறாதுங்கோ என்று கூறுகின்றார் . ஹோமங்கள் மூலம் வழிபாடு செய்கின்ற முறைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும் என்று சொல்லுகின்றார். தீபாரான காட்டக்கூடாது என்று சொல்லி அய்யா தீபாராதனை செய்யக்கூடிய இடங்களில் சென்று பார்க்க கூடாது என்பதையும் கூறுகின்றார்.

மேலும் ஆடம்பரத்திற்காகவும், மக்களைக் கூட்ட வேண்டும் என்ற நோக்கத்திலும், தங்களை முன்னிலைப்படுத்திக் காட்ட வேண்டும் என்று செய்யப்படுகின்ற திருநாள்களையும் காணக் கூடாது என்பதை சொல்லுகின்றார். உண்மையான இறை அருளை பெற வேண்டும் என்றால் பகட்டு என்பது தேவை இல்லை. ஆகவே தன்னுள் கண்டு கொள்ள வழிக்காட்டாத திருவிழாக்கள் தேவை இல்லை. சிலையை வைத்து அதற்கு ஆபரணங்கள் எல்லாம் அணிந்து அழகு பார்க்கக்கூடிய அந்த முறை வழிபாடு செய்யக்கூடாது.

இறைவனுடைய பெயரை சொல்லி மக்களிடமிருந்து பணத்தைப் பறித்து அதன் மூலம் பகட்டாக வழிபாடுச் செய்ய வேண்டும் என்று எண்ணக்கூடிய அந்த அநியாய பாவங்களை எல்லாம் செய்யக்கூடாது. இப்படி போல் உள்ள எல்லா வழிபாட்டு முறைகளையும் வெறுத்துருங்கோ என்று சொல்லுகின்றார். அல்லாமல் இதை வேறு யாராவது ஒருவர் செய்தது உண்டானால் வல்லாத்தக் கோபம் வரும் வைகுண்டருக்கு என்று எடுத்து கூறுகின்றார்.

மேலும் நல்லோராக வேண்டும் என்றால் நியாயம் அதிலே நிற்க வேண்டும் என்று வைகுண்டர் கந்தபெருமானிடம் எடுத்துக் கூறுகின்றார். இந்த கலியுகத்தில் நீதி, நேர்மை, நியாயம், அன்பு ,தூய்மை, பொறுமை, தர்ம போன்ற அறச் சிந்தனையோடு வாழ்ந்தாலே போதும். அதை விட்டுவிட்டு இந்த விதமான இறைவனுக்கு திருவிழாக்கள் நடத்துவது ஆடம்பரமான பூஜைகள் செய்வது இவை எல்லாம் தேவையில்லை. இவை இறைவனை அடைய எந்த வகையிலும் வழி காட்டாது.

இப்படிப்பட்ட ஆடம்பரமாக செலவு செய்வது கலிக்குள் அகப்பட வைத்து விடும். உண்மையான நேர்மையான வழியில் தர்மத்தை கடைபிடித்து வாழ்ந்தாலே இறைவனை நாம் சென்றடையலாம். அதற்கு எந்தவிதமான ஆடம்பரமோ காசு பணமோ பொருட்களோ தேவையில்லை. ஆகவே இவ்வாறு செய்யக்கூடிய வழிபாட்டு

முறைகளை தாங்கள் ஏற்க நீங்கள் ஏற்கவும் கூடாது, மக்களிடம் அதை மக்களும் அதை செய்யக்கூடாது என்பதை எடுத்துக் கூறுகின்றார். அவ்வாறு செய்தீர்களேயானால் வைகுண்டருடைய கோபத்திற்கு ஆளாக வேண்டும் என்று கந்தபெருமானிடம் எடுத்துரைக்கின்றார்.

இவ்வாறு வைகுண்டர் கந்தபெருமானிடம் கூறிய உடனே கந்தபெருமான் வைகுண்டரிடம் நீர் உரைத்த சட்டமதில் நாங்கள் நிலை தவற மாட்டோம் எங்களை காத்தருள வேண்டும் என்று படி பணிந்து நின்றார். உடனே வைகுண்டர் கந்தபெருமானிடம் இப்போது நான் சொன்னதெல்லாம் நிஷமாக செயல்படுத்த வேண்டும் என்றால் அல்லது நீ ஏற்றுக் கொண்டாய் என்றால் உன்னுடைய கோபுரத்தின் திருச்செந்தூர் கோயிலில் உள்ள உயர்ந்த வட மூலையில் உள்ள கோபுரத்தில் பின் கோபுரம் காண பிளந்து போட வேண்டும் என்று கூறினார் .

மேலும் இந்த உலக மக்கள் உன்னை வழிபடுவதற்காக வேண்டி உருவாக்கி வைத்திருக்கின்ற இந்த செல்லாச்சிலையை தெற்கு முகமாக திருப்பி விட வேண்டும். அவ்வாறு தெற்கு முகமாக திருப்புவதன் காரணமாக, இந்த உலக மக்கள் தருகின்ற எந்த ஒரு தீபாராதனையும் காணிக்கையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கு அடையாளமாக மாற்றி வைக்க வேண்டும் என்று கூறினார். அது மட்டுமல்ல உலகோர் அறியும்படியாக நீ வீற்றிருக்கும் கோயிலினுடைய முன் வாசலை அடைத்து கலகமாய் கண்மூடி கவிழ்ந்து இருக்க வேண்டும்.

அவ்வாறு நான் கூறியதை தவிர்த்து யாராவது அழிச்சாட்டமாக நடந்தால் வல்லாத்த கோபம் வைகுண்டருக்கு வரும். அதை மீறி செய்தாயானால் பொல்லாத பெருவிலங்கு சிக்குமென்று கூறினார். அப்போது கந்தபெருமான் பதறி ஆவி மறுகி தாங்கள் சொன்னது போல் அடியாராகிய நாங்கள் நடப்போம் என்று வைகுண்டரிடம் சொன்னார். அப்போது வைகுண்டர் சொல்லுகின்றார் நிலையழியாதிருங்கோ, நீதியாய் நின்றுடுங்கோ உலகறியே நானும் ஒரு நெல் எடுத்து உடைக்கும் முன்னே பல சோதனைகள் பார்த்து நடுதீர்ப்பு செய்வேன் என்றுக் கூறுகின்றார்.

இந்த உலகில் உள்ள சான்றோர் மக்களை தேர்ந்தெடுப்பதற்காக பல வேசங்களை நான் அணிவேன். நேரத்திற்கு நேரம் விதக் கோலம்

அணிந்து மக்கள் மனதில் இருக்கக்கூடிய தன்மைகளை அறிந்து தெரிந்து கொள்வேன். அவ்வாறு தெளிந்து எடுத்த மக்களை பெரிய யுகமாகிய தரும யுகத்தை ஆள வைப்பேன். ஒருநெல் மாறி எடுக்கும் முன்னே, கண்ணிமைக்கும் நேரத்தில் கனக் கோடி அற்புதங்களை எல்லாம் செய்து நாம் மக்களை ஆட்கொள்கின்ற தன்மையை இங்கு எடுத்துச் சொல்லுகின்றார்.

அவ்வாறு இறைவன் வருவதை கருதி இருக்க வேண்டும் கருத்தயர்ந்து போகாதீர்கள். எப்போதும் இறைவனை மனதில் நினைத்து வாழ வேண்டும். ஒரு நொடி கூட இறைவனுடைய எண்ணம் இல்லாது வாழ்வது கூடாது. இறை சிந்தனையை எப்போது நாம் மனதில் நினைத்து வாழுகின்றப் போது இறைவன் நம்மோடு இருந்து நம்மை வழி நடத்துவார். இவ்வாறு கந்தபெருமானுக்கு எடுத்து சொல்லி விட்டு , திருச்செந்தூர் கடற்கரையை விட்டு ஆகாயம் மார்க்கமாக அரு ரூபக் நிலையோடு தெட்சணம் நோக்கி வழி கொண்டார் எம்பெருமான்.

## **வினா விடை** :

1. வைகுண்ட அவதாரம் எடுத்து வந்தவுடன் கந்தபெருமானுடைய நிலையாது யாது?
   கந்தபெருமான் பதறி நடுங்கி வைகுண்டருடைய பாதத்தில் பணிந்து நின்றார்.

2. வைகுண்டருடைய பாதம் பணிந்து நிண்ட கந்தபெருமானுக்கு வைகுண்டர் இட்ட கட்டளை யாது?
   நாடு கேட்க போறேன் நாராயணர் நான்தான் கேடு வரும் உனக்கு கேள்வி கேளாதிருந்தால் இத்தனை நாளும் என்னை கெணியாமல் புத்தி அறியாதவர் புலம்பினீர் இத்தனை நாள் இனி வைகுண்டம் பிறந்து ஏகம் ஒரு குடைக்குள் மனு ஒரு சொல்லுக்குள்ளாக மகா தர்மமே நினைத்து மாய்கை அறுத்து மாத்தான் கருவறுத்து தோயக்குளி மூடி தொல்புவியை தானாள நல்லவர்களை தேர்ந்து எடுக்க நான் போறேன் கண்டாயா அதனால் கல்லார் தனக்கு கசப்பு இனிமேல் கண்டாயே என்று கூறினார்.

3. வைகுண்டர் கந்தபெருமானுக்கும் மற்றும் உள்ள தெய்வ சக்திகளுக்கு ம் இட்ட கட்டளை யாது?

வானஞ்சூழ் வையகங்கள் வாழுகின்ற மண்டபங்கள்
எத்தனையோ அத்தனையில் இருக்கின்ற தேவரெல்லாம்
அத்தனை பேரும் அறியும் படிசொல்லுவேன்
காணிக்கை வேண்டாதுங்கோ கைக்கூலி கேளாதுங்கோ
மாணிக்க வைகுண்டம் வல்லாத்தான் கண்டிருங்கோ
பூசையே ராதிருங்கோ பெலிதீப மேராதுங்கோ
ஆசைவை யாதிருங்கோ அவகடஞ் செய்யாதுங்கோ
ஞாயமுறை தப்பி நன்றி மறவாதுங்கோ
மாய நினைவு மனதில் நினையாதுங்கோ
வைகுண்டா வென்று மனதில் நினைத்திருங்கோ
பொய்கொண்ட தேரோட்டம் புனக்கார மேராதுங்கோ
தாதி கைகாட்டல் சப்பிரங்க ளேறாதுங்கோ
மோதிப்பே சாதிருங்கோ மோகம்பாராட் டாதுங்கோ
ஆலத்தி கைவிளக்கு ஆராட்டுப் பாராதுங்கோ
சாலத்தீ பாராதுங்கோ சகலபூ ஏராதுங்கோ
கொழுந்து மஞ்சணைமாலை குப்பையொடு சந்தனமும்
விழுந்து நமஸ்காரமுதல் வேண்டாமென்று சொல்லிடுங்கோ
கூவென் றுரையாதுங்கோ கொக்கரித்துப் பேசாதுங்கோ
ஓவென்றுரை யாதுங்கோ ஓமமுறை யேராதுங்கோ
தீபரணை காணாதுங்கோ திருநாளைப் பாராதுங்கோ
ஆபரணம் பூணாதுங்கோ அன்னீதஞ் செய்யாதுங்கோ
எல்லாம் வெறுத்திருங்கோ இத்தனைபோ லுள்ளதெல்லாம்
அல்லாமல் மீறி யாரொருவர் செய்ததுண்டால்
வல்லாத்த கோபம் வரும்வை குண்டருக்கே
நல்லோரே யாகவென்றால் நியாயமதி மேநில்லும்

4. இறைவனுக்கு உகந்த வாறு நல்லவர்களாக வாழ்வதற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டியது என்ன?
நியாயத்தை கடைப்பிடித்து வாழவேண்டும்.

5. "நீருரைத்த சட்டமதில் நிலைதவறோம் நாங்கடியார்
காரும்நீ ரென்று கந்தன் அடிதொழுதான்" - நீருரைத்த சட்டமதில் நிலை தவறோம் என்று கூறியவர் யார்?
கந்தப்பெருமான்

6. கந்தப்பெருமானுக்கு வைகுண்டர் இட்ட கட்டளை யாது?
உன்கோ புரத்தில் உயர்ந்தவட மேல்மூலையில்
பின்கோ புரங்காணப் பிளந்துபோ டென்றுரைத்தார்

அல்லாம லுன்னையென்று அவனியுண் டாக்கிவைத்த
செல்லாச் சிலையைத் திருப்பிவிடு தெற்குமுகம்
உலகோ ரறிய ஒருவாயி லுமடைத்துக்
கலகமாய்க் கண்மூடிக் கவிழ்ந்திருப்பா யோவென்றார்

7. வைகுண்டருடைய சட்டத்தை மீறினால் என்ன தண்டனை கிடைக்கும் என்று கந்தப்பெருமானுக்கு கூறினார்?
பெரும் விலங்கு சிக்கும் என்று கூறினார்.

8. “நிலையழி யாதிருங்கோ நீதியாய் நின்றிடுங்கோ” யார் யாரிடம் கூறியது.?
வைகுண்டர் கந்தபெருமானுக்கும் கூறியது

9. விடியும் பொழுது வேஷம் பல அணிபவர் யார்?
அய்யா வைகுண்டர்

10. பிடியும் மனு உடனே பெரிய யுகம் ஆழ வருபவர் யார்?
அய்யா வைகுண்டர்

11. ஒரு நெல் மாறி எடுக்கும் முன்னே இந்த கலிய அழிப்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

**வானோர்கள் வைகுண்டரைப் போற்றுதல்**

விருத்தம்

அண்டரொடு தெண்டனிட் டெண்டிசைகள்
நின்றுவரும் ஆதவனைச் சூழ் கணம்போல்
அரிஹரி அரஹரா சிவசிவா
என்றுசிலர் ஆடியே பாடி வரவே

தொண்டரவர் கண்டுவை குண்டரடி கண்டு
தொழ சூழவளைந் தேழியல் படர்தே
சூரர்பதி நாராயணர் வீரர்பத
மோதிவரச் சூராதி சூர ரெனவே

செண்டையொடு தண்டைமணி டண்டடம
டண்டமெனத் தேவர்சே வித்து வரவே

சிவநமசி வாயமெனும் ஓம்நம சிவாய
மென்னும் சேவித்திரு புறமும் வரவே

அண்டமுர செண்டுமணி டுண்டும டுண்டு
மென ஆகாய மீதில் வரவே
அனவரத கோலாக லாதிநாரா யணா
வென அமரரிசை கூறி வரவே

மத்தள முடுக்குபல வாத்திய
மடடென வானமதில் நின்ற திரவே
மலர்மாரி சலமாரி தினமாரி தூவியே
வானவர்க ளிசை கூறவே

தத்தளங் கிடகிட தொம்மெனத் தொம்
மெனச் சங்கீதக் காரர் வரவே
சகலகலைக் கியானவேத சாதிமுறை யோதி
மிகு சாஸ்திரக் காரர் வரவே

தித்தங்கிண தித்தங்கிண தித்தங்கிண
தித்தியெனச்சில தேவர் கூறி வரவே
சிவசிவ சிவசிவ சிவவென்று
சிலதேவர் சேவித் தியல்கூறி வரவே

நித்தங்கிண சித்தங்கிண உத்தங்கிண
தித்தியென நேரியர் சீரியல் கூறவே
நீலங்கிரி வாலங்குரு நீயென்குரு தாயென்குரு
நீதென் குருவெனப் போற்றினார்

பண்டைமுறை யின்றுவெனக் குண்டமெனக்
கண்டுவரும் பலவாங் கிரி குண்டமே
பசுவாமனே சிசுபாலனே பலமானனே
தலமானனே பசுவா கிய நிசமே

தொண்டர்தனக் கென்றுவரு குண்டவை
குண்டமனாய்த் தெச்ச ணாபதி பூபனே
துளபமணி களபமேனி யழகொழுகு கிருபைமிகு
துவாரகா பதிக் கரசேயென தொழுது

சண்டன்வலி துண்டப்பட கொண்டக்கணை
விண்டத்தொடு துச்சா வில்லு வீரா
சாமியுன் றாளோ எங்கள் தலையின்மீது
தலையின்வழி தானே நடவாயே

துண்டப்பட வண்டச்சரம் கண்டப்படி
பொண்டத்தொடு துச்சா வில்லு தீரா
சுத்தாவுனக்கேற்றார்தமை வித்தானதில்
வித்தாய்துவாரகாபதிக்கரசேயெனத் தொழுதார்

## விளக்கம்:

வானவர்கள் வைகுண்டரை போற்றுதல் எங்கும் நிறைந்த ஏகமயமாக இருக்கின்ற பரபிரம்மமாகிய வைகுண்டத்தை வானவர்கள் போற்றுகின்றார்கள். ஆதவனாகிய சூரியனை ஆதாரமாகக் கொண்டு கோள்கள் இயங்குவது போன்று வைகுண்ட மாமணியை ஆதாரமாகக் கொண்டு வானவர்கள் அவர்களை சூழ்ந்து அரிகரி ஹரஹரா சிவ சிவா என்று ஆடி பாடி மகிழ்ந்தவாறு தொண்டராகிய வானவர்கள் போற்றினார்கள். சூர சக்தியை அழித்து நன்மையை நிலை நாட்டும் பொருட்டு நாராயணரே வைகுண்டமாக அவதாரம் எடுத்து இருக்கும் பெருமானே! நாராயணருடைய வீரப்பதம் ஓதி சூரர்களை அழிக்க வந்தவா உம்மை போற்றுகிறோம். இந்த சூரர்களின் மாயையில் இருந்து விடுபடச் செய்து மெஞ்ஞானிகளைப் பாதுகாக்க வந்த தயாபரனே! ஓம் நமசிவாய என்றுப் போற்றித் துதித்தார்கள்.

ஓம் நமச்சிவாய என்று துதித்தவாறு மங்கல இசை பாடி மகிழ்ந்து அமரர் எல்லாம் அவரை சூழ்ந்து ஆகாயம் மீதில் வந்தனர். மத்தளம் உடுக்கு மற்றும் பல வாத்தியங்கள் மடமடென வானமதில் நின்றதிர மலர்மாரி சலமாரி தூவி வானவர்கள் மங்கல இசை எழுப்பி அவரை சூழ்ந்து வர, சங்கீதக்காரர்களும் வேத முறை ஓதி ஆகாயமீதில் வந்தனர். தித்தங்கிண தித்தங்கிண தித்தி என தேவியர்கள் இசை கூறிவர, சிவ சிவ சிவசிவா என்று தேவர்களெல்லாம் போற்றி வர தித்தங்கிண தித்தங்கிண தித்தங்கிண தெய்யென என நேரியல்

சீரியல் கூறி வர, நீலகிரி வாலங்குரு நீ என் குரு தாயன் குரு நீதன்குரு எனப் போற்றி வானவர்கள் மகிழ்ந்து வந்தனர்.

பண்டைய ஆகமப்படி உலக உயிர்களை உய்விக்கும் பொருட்டு வைகுண்டமாக வந்த சதாசிவமே! பசுவாகிய உயிர்களை உய்விக்கும் பசுவாமனே! எல்லையற்ற ஆற்றலாயுள்ள பல ராமனே! பிரபஞ்சமாய் விரிந்துள்ள தலமானவனே! ஞானபாலை ஊட்டுக்கின்ற மெய்பொருளே! பொன் மேனியில் மாலை அணிந்த ஆதி அற்புத அழகு அய்யாவே! துவாரகா பதியின்னுடைய அரசே! எங்கள் இதயத்தில் உள்ளிருந்து அருளாட்சி செய்பவனே! என்று வானவர்கள் வைகுண்டரை போற்றித் துதித்தனர்.

உலக உயிர்களை சண்டன் என்னும் எமனின் பிடியிலிருந்து விடுவிக்க சிவசிவா அரகரா என்று அருள் மந்திரத்தை தந்த வீரனே! சுவாமி உன் திருவடிகளை எங்கள் தலையில் பதித்து பிறவிப் பிணியில் இருந்து காத்தருள்வாய். அண்ட சராசரங்கள் அனைத்துமாய் இருப்பவனே! சுத்த திருமேனி உடையவனே! உனக்கு ஏற்ற வித்தாக சான்றோர்களைப் பிறவிச் செய்து அழியா வண்ணம் பேரருள் கொண்டு தூவாராகபதி ஆளும் அரசே உம்மைப் போற்றுகிறோம் என்று பணிந்து வணங்கி தொழுதார்கள்.

**வினா விடை** :

1. வைகுண்டர் கந்தபெருமானுக்கு சட்டம் சொல்லிவிட்டு எவ்வாறு வந்தார்?
   ஆகாய மார்க்கமாக வந்தார்.

2. தேவர்கள் எவ்வாறு நின்று வைகுண்டரை போற்றினார்கள்?
   ஆகாயம் மார்க்கமாக நின்று போற்றினார்கள்

3. வைகுண்ட ஆகாய மார்க்கமாக வருகின்ற போது சங்கீதம் பாடியவர்கள் யார்? வானவர்கள்
4. வைகுண்ட ஆகாய மார்க்கமாக வருகின்றபோது வேத கலை ஓதியவர்கள் யார்?
   வேதமறையோர்கள்

5. வைகுண்ட ஆகாய மார்க்கமாக வருகின்றபோது ஆலத்தி ஏந்திய வர்கள் யார்?
   அரம்பையர்கள்

6. வைகுண்ட ஆகாய மார்க்கமாக வருகின்றபோது மலர் மாரி தூவிய வர்கள் யார்?
மாதவர்கள்

7. வைகுண்ட ஆகாய மார்க்கமாக வருகின்றபோது வரிசை கூறிய வர்கள் யார்?
வரம்பகலா மாமுனிவர் கள்

8. வைகுண்ட ஆகாய மார்க்கமாக வருகின்றபோது குடைப்பிடித்து யார்?
சூரியன்

நடை

தேவர் தொழுது திக்கெங்கும் போற்றிவரத்
தாவமுள்ள வானோர் சங்கீதம் பாடிவர
வேத மறையோர்கள் வேதக்கலை யோதிவர
நாதமொடு சங்கு நகரா முழங்கிவர
மத்தள மேலோர் மடமடென் றேற்றிவரத்
தித்தி தித்தியெனத் தேவரெல்லாம் பாடிவரச்
சாத்திர வேத சாதிமுறை யோதிவர
நால்றிசையும் போற்றி நாற்சாதி யும்வரவே
அரம்பையர்க ளாடி ஆலத்தி யேந்திவர
வரம்பகலா மாமுனிவர் வரிசைமிகக் கூறிவர
நாதாந்த வேதம் நவில்வோர் நெருங்கிவர
மாதவர்க ளெல்லாம் மலர்மாரி தூவிவர
கண்டங் ககமகிழ்ந்து கண்ணான நாரணரும்
கொண்டாடித் தேவரொடு கூறுவா ரன்போரே
மனுக்கண் காண வரவேண்டீ ரென்பிறகே
தனுக்கான ஏகமதில் சகலத்தோ ருமறிய
வாருங்கோ என்னுடனே வானவரே தேவர்களே
பாருங்கோ தேவர்களே பாங்காக எப்போதும்
வானமதில் நின்று வாத்தியங்க ளேற்றிவர
தானவர்கள் முதலாய்ச் சங்க முதல்வரவே
ஆகாச மீதில்நின்று எல்லோரும் போற்றிவர
வாகான சூரியனும் வந்து குடைநிழற்ற

**விளக்கம்:**

இவ்வாறு தேவர்கள் தொழுது திக்கெங்கும் போற்றி வர, வானவர்கள் சங்கீதம் பாடிவர, வேதமறையோர்கள் வேதங்களை ஓதிவர, நாதமுட சங்கு நகராமல் விளங்கி வர, மத்தள மேலோர்கள் மடமட என்று ஏற்று வர, தித்தி என தேவர் எல்லாம் பாடிவர, சாஸ்திர வேத சாதிமுறை ஓதிவர, நான்கு திசையும் போற்றி நற் சாதியும் வர, அரம்பையர்கள் ஆடி ஆலத்தி ஏந்தி வர, வரம்பகலா மாமுனிவர் வரிசை மிகக் கூறி வர, வேதாந்த வேதம் நவில்வோர்கள் நெருங்கி வர, மாதவர்கள் எல்லாம் மலர்மாரி தூவி வர, வைகுண்டர் மகிழ்ந்து கொண்டாடி தேவர்களிடம் கூறுகின்றார். மனுக்கண் காணும்படியாக நீங்கள் வர வேண்டாம் நீங்கள் ஆகாய மார்க்கமாக வாருங்கள் என்றுக் கூறிவிட்டு அங்கிருந்து தெட்சணம் நோக்கி வருகின்றார்.

அப்போது வானவர்கள் முதலாய் சங்கம் முதல் எல்லோரும் ஆகாயமதில் நின்று போற்றினார்கள். சூரியனும் வந்து குடை நிகழ்த்தியது. அப்போது வைகுண்டர் செந்தூர் தலத்தை விட்டு வண்டாடும் சோலை வாய்த்த வனங்கள் விட்டு, சோலை தெருக்கள் விட்டு, ஆலை தெருக்கள் விட்டு, அந்தூர் பதிகள் விட்டு, மண்டப மேடை விட்டு, மடங்கள் மிக கடந்து தண்டமிழ் செந்தூர் தளத்தை விட்டு போவதற்கு தெட்சணம் நோக்கிச் செல்ல வைகுண்டர் தயாராக நிற்கின்றார்.

செந்தூர் விட்டு வைகுண்டர் தெச்சணம் எழுந்தருளல்

நன்றான வைகுண்டர் நல்லசெந்தூர் தானும்விட்டு
வண்டாடுஞ் சோலை வாய்த்த வனங்கள்விட்டு
சோலைத் தெருக்கள்விட்டுச் செந்தூர் தலங்கள்விட்டு
ஆலைத் தெருக்கள்விட்டு அந்தூர் பதிகள்விட்டு
மண்டப மேடைவிட்டு மடங்கள் மிகக்கடந்து
தண்டமிழ்சேர் செந்தூர் தலத்தைவிட்டுப் போவதற்கு
நிற்கின்ற போது நிலையுள்ள மாமுனிவர்
நக்கன் மருகனுட நல்லடி யில்வீழ்ந்து
செந்தூர் தலத்தைவிட்டுத் தெச்சணா பூமியிலே
இந்த வேளைதனிலே எழுந்தருள வேண்டியதேன்
இங்கே பகைத்ததென்ன என்னுடைய நாயகமே

சங்க மகிழ்வேந்தே தானுரைக்க வேணுமென்றார்
அப்போது நாரா யணர்மகிழ்ந் தேதுரைப்பார்
இப்போது கேட்டதற்கு இயல்புரைக்கக் கேளுமினி
கேள்விகே ளாநீசன் கெடுவ தறியாமல்
நாள்வழியாய்ச் சான்றோரை நியாயமில் லாதடித்தான்
சொன்னேன்புத்தி நீசனுக்குத் திருவனந்த மேயிருந்து
என்னையும் பாராமல் இளப்பமிட்டான் சான்றோரை
ஆனதால் நீசனுக்கு யானதிகக் கோபமிட்டு
நானவ் வூரும்விட்டு நாடிவந்தேன் செந்தூரு
இங்கே யிருந்தேன் யான்சிறிது காலமெல்லாம்
வெங்கப் பயல்சிலர்கள் வேசையுட னாசையினால் என்னைக்
கெணியாமல் என்கோவி லுள்ளேதான்
சன்னைசொல்லிப் பெண்களுடன் சரசமிட் டெச்சியிட்டான்
இருபேரு மொத்து இருந்தாலும் பழுதல்லவோ
ஒருவன் பெண்ணானை ஒருநம்பூ ரிபிடித்து
எனக்கேவல் பண்ணி ஏந்திழையாள் போகுகையில்
மனக்குழலி தன்னுடைய மார்பின் கலைபிடித்து
இழுத்து வலித்து இழிக்கேடு செய்யவென்று
பழுத்துச் சழிந்த பருநம் பூரியவன்
மேல்தலையி லிட்ட முத்திரி கழற்றாமல்
மால் மயக்கத்தாலே மனங்கலங்கி நம்பூரி
மங்கை மனங்கலங்க வாரிப் பிடித்திழுத்துக்
கொங்கைதனைப் பங்கமதாய்க் கூறழிய வேகிழித்து
வேதனைகள் செய்ய மெல்லியவள் கோபமுற்று
மோதி யென்பேரில் ஒருசாபங் கூறினளே
நாரணா கந்தா நானுனக்கு ஏவல்பண்ணிக்
காரணங்க ளாச்சு கடைசிநாள் தானாச்சு
உனக்குமிந் தப்பதிதான் உறவுகே டாச்சுதையா
எனக்கு மொருபிறவி இன்றுவந்து வாச்சுதென்று
செந்தூர் தலங்கள் சிலநாள் செல்லுமுன்னே
மண்தூர்ந்து போகுமென்று மாதுமிகச் சாபமிட்டாள்
சாபமிட்டு மங்கை தக்கென்று கீழ்விழுந்து
சீவ னதுவிடவே சிவனைக்கண் ணோக்கினளே
நம்பூரி பங்கத் தாலேயந்த நாயகியும்
உம்பர்கோ னூரில் உயிர்விட்டாள் மாமுனியே
தவறாத மங்கை தானுரைத்தச் சாபமதால்
இதறா யெனக்கங்கு இருக்கமனங் கூடாமல்

எங்கேயினிப் போவோமென்று இதைவிட் டெழுந்திருந்து
மங்கைசொன்ன நாள்முதலாய்த் தெற்குவாரியிலே
போயிருந்தேன்
அல்லா மலிங்கே அழிமதிகள் ரெம்பரெம்ப
வல்லாண்மை யாக வலுஞாயங் காணுதுகாண்
முன்னடப்பு மங்கையர்கள் முங்கிக் குளித்துமிக
என்னடையில் வந்து ஏந்திழையா ராடுவது
ஆட வரும்போது அசுத்தத்தோ டுவாறாள்
பாடவரும்போது பண்ணுறா ளசுத்தமது
கோவிலிலே பூசைசெய்யும் குறும்பர் மிகத்துணிந்து
தேவியருக் கீயத் திருடுகிறா ரென்முதலை
கணக்கன்முதல் நம்பூரி கள்ளப்பெண் ணார்களுக்கு
இணக்க மதாயிருந்து என்முதலைக் கொள்ளைகொண்டு
எடுக்கிறார் பெண்கள் எச்சியாட்டு மாடி
ஒடுக்கிறார் பெண்கள் ஒண்ணுக்கொண் ணொத்திருந்து
பம்பை பரத்தை பகட்டுக்கை காட்டலெல்லாம்
எம்பரனுக் கேற்ற இயல்பல்ல மாமுனியே
ஆனதா லிவ்வகைகள் யான்வேண் டாமெனவே
மான மழியுமுன்னே மாமுனியே தெச்சணத்தில்
பள்ளிகொண்டு நானிருந்து பார்த்துச்சில நாள்கழித்துக்
கள்ளியாட்டுக் காவடி கைக்கூலி தான்முதலாய்
நிறுத்தல்செய்ய வேண்டிய தெல்லா மிகநிறுத்திப்
பொறுத்தரசு தர்மப் புவியாளப் போறேனினி
மாமுனிக்குச் சொல்லி வழிகொண்டார் தெச்சணமே
தாமுனிந் தையா தவறாத மாமுனியும்
தெச்சணத்துக் கேகவென்று திருச்சம் பதியிருந்து
உச்சமது கொண்டு உகச்சாப முங்கூறி
நடந்து வரவே நல்லசெந்தூர் தானும்விட்டுக்
கடந்து தருவைக் கரைவழியே தேவரெல்லாம்
சங்கீதங் கூறித் தாமே யவர்வரவே
மங்கள நாதன் மனுச்சொரூப மேயெடுத்து
நருட்கள் மிகக்காண நாற்றிசைக்கு மேவிவந்தார்
மருட்கள் மிகவந்து வாசமிட்டுக் கூடிவர

## விளக்கம்:

வைகுண்டம் திருச்செந்தூர் தலத்தை விட்டு தெட்சணம் எழுந்தருள வேண்டும் என்று ஏகுகின்ற வேளையில் மாமுனிவர்கள் எல்லோரும் வைகுண்டருடைய பாதத்தை பணிந்து எம்பெருமானே! தாங்கள் இந்த திருச்செந்தூர் தலத்தில் இருந்து தெட்சணம் எழுந்தருள வேண்டிய காரணம் என்ன என்று கேட்டார்கள். இங்கே உங்களுக்கு பகையாக அப்படி என்ன நிகழ்ந்துவிட்டது? இங்கிருந்து நீங்கள் செல்வதற்கு காரணத்தை சொல்லுங்கள் என்று கேட்டார்கள் .அப்போது வைகுண்டர் அகம் மகிழ்ந்து அந்த முனிவர்களோடு கூறுவார் , கேள்வி கேளாத நீசன் கெடுவது அறியாமல் நாள் வழியாக சான்றோர் மக்களை நியாயம் இல்லாமல் அடித்தான். அந்த நீசனுக்கு புத்தி சொல்வதற்காக வேண்டி திருவனந்தபுரத்தில் நான் சில காலம் இருந்தேன். ஆனால் அவன் எவ்வளவு புத்தி சொல்லியும் கேளாமல் சான்றோர் மக்களை இழப்பமிட்டு அவர்களுக்கு துன்பமிட்டு வரிகளை விதித்து அவர்களை பல வாறு துன்பப்படுத்தினான்.

ஆகையால் அவனிடம் கோபம் கொண்டு நான் அங்கிருந்து திருச்செந்தூரில் வந்து அமர்ந்தேன். அவ்வாறு திருச்செந்தூரில் வந்து அமர்ந்து இருக்கின்ற அந்த நேரத்தில் வெங்கை பயல்கள் சிலர் வேசியினுடைய ஆசையினால் என்னை கெணியாமல் என் கோவிலுக்குள்ளே வந்து என் பெயரை சொல்லி பெண்களிடம் சரசமிட்டு எச்சில் இட்டார்கள். அதாவது பெண்களோடு கூடி உறவு கொண்டார்கள். இருவரும் ஒத்து இருந்ததால் பழுது இல்லை என்றுக் காரணம் சொல்லலாம். ஆனால் இறைவன் உறைந்திருக்கின்ற இடத்தில் எந்த ஒரு பணிவு இல்லாமல் அவர்கள் தவறான செயல்களில் ஈடுபட்டார்கள்.

அதுமட்டுமல்ல ஒருவன் பெண்ணாளை மற்றொருவன் பிடித்து மானபங்கம் செய்தான். மேலும் எனக்கு ஏவல் பண்ணி விட்டு ஒரு பெண் போகின்ற போது அவளுடைய மனம் குளறுபடி யாக அவளுடைய மார்பில் ஆடையைப் பிடித்து இழுத்து வலித்து இழிக்கேடுச் செய்தான். அப்படி அந்த வயது முதிர்ந்த நம்பூதிரி செய்த காரணத்தினால் அவள் கோபம் கொண்டு சாபமிட்டாள். அவன் அவ்வாறு செய்கின்றபோது மேல் தலையில் இட்டிருந்த முத்திரி கூட கழற்றவில்லை. இறைவனுக்கு தொண்டு செய்கின்றபோது இடப்பட்டிருந்த அந்த அடையாளங்களை கூடாகழற்றாமல் எள்ளவு கூட இறை பயம் என்பது இல்லாமல்

தன்னுடைய உடல் இச்சைக்காக வேண்டி அந்த பெண்ணை மானபங்க படுத்தினான்.

அப்போது அந்த பெண்ணானவள் மோதி என் பேரில் ஒரு சாபமிட்டாள். எப்படி என்றால், நாரணாக்கந்தா நான் உனக்கு ஏவல் பண்ணி காரணங்கள் ஆச்சே கடைசி நாள் இன்றாச்சு. உந்தன் இந்த பதிக்கும் உறவுக்கேடு ஆச்சுதையா என்று சொல்லி அங்கே சாபமிட்டாள். நான் உனக்கு ஏவல் வேலை செய்வது இன்றே கடைசி நாள் ஆகும். இந்த பதிக்கு அழிவு நெருங்கி விட்டது. அதாவது இறைவன் இருக்கின்ற இந்த தலத்திலே இப்படி ஒரு அழிமதியானது நடந்திருக்கின்றது. ஆகவே இந்த இடத்தில் இறைவன் இருந்து என்ன பலன். ஆகவே இறைவனுடைய அருள் இல்லாமல் போக கடவது என்று அவள் சாபமிட்டாள். அது மட்டுமல்ல இந்த திருச்செந்தூர் பதியானது சிறிது நாட்களில் மண்ணூர்ந்து போக வேண்டும் . அதாவது அழிந்து போக வேண்டும் என்று சாபம் இட்டு அவள் தன்னுடைய உயிரை மாய்த்துக் கொண்டாள்.

இவ்வாறு அவள் சாபமிட்டு உயர் விடுகின்ற போது சிவனை கண் நோக்கினாள். அதாவது இறை சிந்தனையோடு தனக்கு பிறவி ஏற்படக்கூடாது என்று அந்த உயிர் போகுகின்ற போது அந்த பெண்ணானவள் இறைவனை நினைத்து கொண்டே உயிர்விட்டாள். ஆகையால் அவர் வந்து முத்தி மோட்சத்தை அடைந்துவிட்டாள். இவ்வாறு அந்த சாபத்தின் காரணமாக எனக்கு இங்கு இருக்க மனம் கூட வில்லை. ஆகவே எங்காவது போவோம் என்று இந்த இடத்தை விட்டு நான் எழுந்தருளி, அந்த பெண்ணானவள் என்று சாபம் விட்டாலோ அந்த நாள் முதல் தெற்குவாரியிலே போய் இருந்தேன். அப்படி நான் கடற்கரையிலே இருக்கின்ற போது அங்கேயும் அழிமதிகள் அதிகமாக நடந்து கொண்டிருந்தது. அதாவது முன்னடப்பு மங்கையர்கள் முங்கி குளிப்பதற்கு வருகின்றார்கள். அப்படி வருகின்ற போது அவர்களுடைய மனதிலே எண்ணங்கள் சரியாக இல்லை. அவர்களுடைய மன ஓட்டங்கள் தவறுதலாக இருக்கின்றது.

அவ்வாறு நான் கடற்கரையில் இருக்கின்ற போது அங்கும் அதிகமான கேடுகள் நடந்து கொண்டிருந்தது. எப்படி என்றால் இறைவனுக்கு தொண்டு செய்வதற்காக வருகின்ற பெண்கள் இங்கே

குளிக்க வருகின்றபோது மனதில் தூய்மை இல்லாமல் அழுக்கான மாசு நிறைந்த எண்ணத்தோடு வருகின்றார்கள். அது மட்டுமல்ல என் நடையில் ஆட வருகின்ற போது அவர்கள் அசுத்தத்தோடு ஆடுகின்றார்கள். இறைவனுக்கு தொண்டு செய்து இறை உணர்வை மக்களுக்கு ஊட்ட வேண்டியவர்கள் தங்களுடைய பாடல்களின் மூலம் பிறருடைய மனதைக் கவர்ந்து அவருடைய மனம் வசியப்படுத்துகின்ற அளவுக்கு அங்கு கெடுதல்களை செய்கின்றார்கள்.

மேலும் இறைவனுடைய கருத்துக்களை பாடல்கள் மூலம் மக்களுக்கு பாடி புரிய வைக்க வேண்டியவர்கள் அந்த பாடலின் மூலம் தங்களுடைய அழகை சித்திகரிக்கின்ற வகையிலே அங்கு கேடுகளைச் செய்கின்றார்கள். அப்படி கோவிலிலே பூசை செய்யும் குறும்பர்கள் மிகத் துணிந்து இந்த பெண்களுக்காக வேண்டியதைக் கொடுப்பதற்காக மக்கள் கொண்டு வருகின்ற தர்ம காசுகளை எல்லாம் எடுத்து திருடி அந்த பெண்களுக்கு கொடுக்கின்றார்கள். கோயில் கணக்கன் முதல் நம்பூதிரி எல்லோரும் இந்த பெண்களின் மீது கருத்தாக இருக்கின்றார்கள். இப்படி இவர்கள் எல்லோரும் ஒன்றாக இருந்து என் முதலை கொள்ளை கொண்டு எடுக்கின்றார்கள்.

அந்தப் பெண்கள் எச்சி ஆட்டு ஆடுகின்றார்கள். அவர்களுடைய எண்ணத்தில் தூய்மை கிடையாது. உடல் சுத்தம் கிடையாது .இப்படி இவர்கள் வந்து கொண்டு ஒன்றாக இருந்து பல கெடுதல்களைச் செய்கின்றார்கள். பம்பை பரத்தை பகட்டுக்கை காட்டல் எல்லாம் எனக்கு ஏற்ற இயல்பு அல்ல மாமுனியே! ஆடல் பாடல்கள் மூலம் பிறரை வசியப்படுத்துகின்ற இந்த செயலானது எனக்கு ஏற்றதல்ல. என்னுடைய கருத்துக்களை மக்களுக்கு சொல்வதற்காக செய்ய வேண்டிய இடத்தில் இப்படி ஆடல் பாடல்கள் மூலம் பிறருடைய மனதை வசியப்படுத்துகின்ற வகையில், என்னுடைய பெயரைச் சொல்லிச் செய்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே இவ்வகைகள் எல்லாம் வேண்டாம் என்று மானம் அழியும் முன்னே இங்கிருந்து நாம் சென்று விடுவோம் என்று தெட்சணம் நோக்கி பள்ளி கொள்வதற்காக வேண்டி நான் காத்துக் கொண்டே இருந்தேன். அப்படி காத்துக் கொண்டிருக்கின்ற அந்த நேரம் இப்போது வந்து இருக்கிறது.

இவ்வாறு தெட்சணம் பள்ளிக்கொள்வதற்காகச் செல்கின்றேன் என்றுக் கூறிய எம்பெருமான், மேலும் கூறுகின்ற நான் தெட்சணத்தில் பள்ளி கொண்டே இருந்து இப்படிப்பட்ட இந்த ஆடல் பாடல்களை எல்லாம் நிறுத்தல் செய்ய வேண்டும் கள்ளியாட்டு, காவடி, கைக்கூலி இவற்றை நிறுத்தல் செய்ய வேண்டியும், அன்பு, பொறுமை, தர்மமாய் இந்த உலகை ஆள்வதற்காக வேண்டி அவதாரம் எடுத்து வந்திருக்கின்றேன். ஆகவே இதையெல்லாம் விரைவில் நிறுத்தல் ஆகிவிடும் என்று சொல்லி தெட்சணம் நோக்கி ஏகி வருகின்றார்.

அப்போது அந்த மாமுனிவர்கள் எல்லாம் அவரை பணிந்து நிற்கின்றார்கள். அந்த நேரத்தில் அவர்களிடம் சொல்லுகின்றார், உச்சமது கொண்டு உகச் சாபம் கூறி, இந்த கலியுகம் அழிந்து விரைவில் தர்மயுகம் தோன்றுவதற்குரிய வழிவகைகளை செய்வதற்காக வேண்டி நான் நல்ல திருச்செந்தூரை விட்டு தருவை கரை கடந்து தெட்சணம் நோக்கி செல்கின்றேன் என்று கூறினார். அப்போது சங்கீதக்காரர்கள் சங்கீதம் கூறி வர மங்களநாதன் தருவை கரையில் வைத்து மனுச் சொரூபம் எடுத்தார்.

அய்யா வைகுண்டர் தன்னுடைய அருரூப நிலையை மாற்றி உலக மக்கள் காணும் படி தருவைக்கரையில் வைத்து மனுச் சொரூபம் எடுத்தார். அந்த மனுச் சொரூபமானது பற்றற்ற நிலையில் பண்டாரக் கோலத்தில் அமைந்தது. காரணம் என்னவென்றால் கலியன் பண்டாரத்தோடு மோதிப்பகைத்தால் தான் தோற்று தான் பெற்ற வரம் தோற்று நரகில் வீழ்வேன் என்று சத்தியம் செய்து கொடுத்த பண்டாரக் கோலம் எடுத்தார். அவ்வாறு பண்டாரக் கோலம் எடுத்தவுடன் நான்கு திசையும் உள்ள மக்கள் எல்லோரும் அவரை சூழ்ந்து போற்றி பணிந்து நின்றார்கள்.

**வினா விடை** :

1. வைகுண்டர் திருச்செந்தூர் தலத்தை விட்டு தெட்சணம் நோக்கி வருகின்ற போது திருச்செந்தூரை விட்டு தாங்கள் செல்வதற்கு காரணம் என்ன என்று கேட்டவர் யார்?
   வரம்பகலா மாமுனிவர்

2. வைகுண்டர் திருச்செந்தூர் தலத்தை விட்டு தெட்சணம் நோக்கி வருகின்ற போது திருச்செந்தூரை விட்டு தாங்கள் செல்வதற்கு

காரணம் என்ன என்று கேட்ட முனிவரிடம் வைகுண்டர் கூறிய பதில் யாது?

அனந்தபுரத்தில் இருந்து கலிநீச மன்னனுக்கு பல புத்திமதிகளை சொன்னேன். சான்றோர் மக்களுக்கு கொடுக்கின்ற துன்பங்களை மாற்றி வை என்று கூறினேன். ஆனால் அவன் கேட்கவில்லை. அப்போது அனந்த புரத்தை விட்டு வந்து திருச்செந்தூரில் அமர்ந்திருந்தேன். ஆனால் திருச்செந்தூரில் பலவித அழிமதிகள் நடந்த காரணத்தினால் இங்கு இருக்க பிடிக்காமல் நான் இங்கிருந்து செல்கின்றேன் என்றார்.

3. வைகுண்டர் திருச்செந்தூர் தலத்தை விட்டு செல்வதற்கு காரணமான நிகழ்வு யாது? Or திருச்செந்தூரில் நடந்த அறியாயம் என்ன என்ன?

இறைவனுக்கு வருகின்ற காசை திருடுவது. பெண்களோடு கோயில்களுக்குள் எச்சமிட்டு சரசமிட்டனர். தூய உள்ளதோடு இறைவனை வணங்குவதற்கு வரவில்லை. அசுத்தமான மன எண்ணத்தோடு இறைவனை வணங்குகின்றார்கள். காணிக்கைகளை தங்களுடைய சொந்த செலவுக்காக திருடினார்கள். மேலும் ஆணும் பெண்ணும் ஒன்றாக கூடி இறைத்தொண்டு ஆற்றுவதற்கு பதிலாக இழிவான செயல்களில் ஈடுபட்டு இறை தொண்டு ஆற்றவில்லை.

4. திருச்செந்தூரில் நம்பூதிரிகள் செய்த அநியாயம் என்ன என்ன?

- இறைவனுக்கு தொண்டு செய்ய வில்லை.
- பெண்களை மானபங்கம் செய்தனர்.
- தான் விரும்பிய வண்ணம் வாழ இறைவனுக்கு மக்கள் கொடுக்கின்ற செல்வங்களை திருடினார்கள்

5. திருச்செந்தூர் பதியானது மண்ணோர்ந்து போவதற்கு காரணமான நிகழ்வு யாது?

இறைவனுக்கு தொண்டு செய்து கொண்டிருந்த ஒரு பெண்ணை அவளுடைய விருப்பம் இன்றி அவளை மானங்க படுத்தி துன்பப்படுத்திய காரணத்தினால் அந்தப் பெண்ணானவள் சாபம் இட்டு இறந்து விட்டாள். இதுவே திருச்செந்தூர் பதியானது அழிவதற்கு காரணமாக அமைந்த நிகழ்வு ஆகும்.

6. திருச்செந்தூர் கோயிலுக்கு வைத்து ஒரு பெண்ணானவள் மனவேதனையோடு இட்ட சாபம் யாது?

நாரணா கந்தா நான் உனக்கு ஏவல் பண்ணி காரணங்கள் ஆச்சி கடைசி நாள் தானாச்சு உனக்கு இந்த பதிதான் உறவு கேடு ஆச்சுதையா, எனக்கு ஒரு பிறவி இன்று வந்து வாய்த்ததென்றும் செந்தூர் தலங்கள் சில நாட்கள் செல்லும் முன்னே மண்ணூர்ந்து போகம் என்று அந்த பெண் சாபம் இட்டாள்.

7. திருச்செந்தூர் பதியானது மண்ணூர்ந்து போகும் என்று அந்த பெண்ணானவள் சாபமிட்ட உடன் நாராயண மூர்த்தி செய்தது யாது?
திருச்செந்தூர் பதியை விட்டு அலைவாய் கரையில் தெற்கு வாரியில் சென்று அமர்ந்திருந்தார்.

8. நாராயணமூர்த்தி தெற்கு வாரியில் அமர்ந்திருக்கின்ற போது நடந்த அழிமதிகள் என்னென்ன?

நான் கடற்கரையில் இருக்கின்ற போது அங்கும் அதிகமான கேடுகள் நடந்து கொண்டிருந்தது. எப்படி என்றால் இறைவனுக்கு தொண்டு செய்வதற்காக வருகின்ற பெண்கள் இங்கே குளிக்க வருகின்றபோது மனதில் தூய்மை இல்லாமல் அழுக்கான மாசு நிறைந்த எண்ணத்தோடு வருகின்றார்கள். அது மட்டுமல்ல என் நடையில் ஆட வருகின்ற போது அவர்கள் அசுத்தத்தோடு ஆடுகின்றார்கள். இறைவனுக்கு தொண்டு செய்து இறை உணர்வை மக்களுக்கு ஊட்ட வேண்டியவர்கள் தங்களுடைய பாடல்களின் மூலம் பிறருடைய மனதைக் கவர்ந்து அவருடைய மனம் வசியப்படுத்துகின்ற அளவுக்கு அங்கு கெடுதல்களை செய்கின்றார்கள்.

மேலும் இறைவனுடைய கருத்துக்களை பாடல்கள் மூலம் மக்களுக்கு பாடி புரிய வைக்க வேண்டியவர்கள் அந்த பாடலின் மூலம் தங்களுடைய அழகை சித்திகரிக்கின்ற வகையிலே அங்கு கேடுகளைச் செய்கின்றார்கள். அப்படி கோவிலிலே பூசை செய்யும் குறும்பர்கள் மிகத் துணிந்து இந்த பெண்களுக்காக வேண்டியதைக் கொடுப்பதற்காக மக்கள் கொண்டு வருகின்ற தர்ம காசுகளை எல்லாம் எடுத்து திருடி அந்த பெண்களுக்கு கொடுக்கின்றார்கள். கோயில் கணக்கன் முதல் நம்பூதிரி எல்லோரும் இந்த பெண்களின் மீது கருத்தாக இருக்கின்றார்கள். இப்படி இவர்கள் எல்லோரும் ஒன்றாக இருந்து என் முதலை கொள்ளை கொண்டு எடுக்கின்றார்கள்.

அந்தப் பெண்கள் எச்சி ஆட்டு ஆடுகின்றார்கள். அவர்களுடைய எண்ணத்தில் தூய்மை கிடையாது. உடல் சுத்தம் கிடையாது .இப்படி இவர்கள் வந்து கொண்டு ஒன்றாக இருந்து பல கெடுதல்களைச் செய்கின்றார்கள். பம்பை பரத்தை பகட்டுக்கை காட்டல் எல்லாம் எனக்கு ஏற்ற இயல்பு அல்ல மாமுனியே! ஆடல் பாடல்கள் மூலம் பிறரை வசியப்படுத்துகின்ற இந்த செயலானது எனக்கு ஏற்றதல்ல. என்னுடைய கருத்துக்களை மக்களுக்கு சொல்வதற்காக செய்ய வேண்டிய இடத்தில் இப்படி ஆடல் பாடல்கள் மூலம் பிறருடைய மனதை வசியப்படுத்துகின்ற வகையில், என்னுடைய பெயரைச் சொல்லிச் செய்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே இவ்வகைகள் எல்லாம் வேண்டாம் என்று மானம் அழியும் முன்னே இங்கிருந்து நாம் சென்று விடுவோம் என்று தெட்சணம் நோக்கி பள்ளி கொள்வதற்காக வேண்டி நான் காத்துக் கொண்டே இருந்தேன்.

9. இறைவனுக்கு ஏற்றுக் கொள்ள முடியாத இயல்பாக முனிவரிடம் நாராயணமூர்த்தி கூறியது யாது?
பம்பை பரத்தை பகட்டுக்கை காட்டல் எல்லாம் எம்பரனுக்கு ஏற்ற இயல்பு இல்லை என்று முனிவரிடம் கூறினார்.

10. வைகுண்டர் எங்கு வைத்து மனு சொரூபம் எடுத்தார்?
தருவை கரை

பிசாசுகளின் பணிவிடையை மறுத்தல்

கீழநடை விடாமல் கிருபையுள்ள வைகுண்டரைத்
தாழநடை விடாமல் சற்பூத மேந்திவர
அப்போது பூதமதை அல்லகா ணென்றுசொல்லி
மைப்போடுங் கண்ணர் மாபூத மதைவிலக்கி
நீங்களெனைச் சுமந்தால் நீணிலத்துச் சோதனையில்
தாங்கள் மீறிநடந்தால் தகுமோநான் கேட்பதற்கு
வேண்டாங்காண் நாரணர்க்கு வேதாளா வுன்வேலை
பாண்டவர்க ளானப் பஞ்சவர்க ளுண்டெனக்கு
என்று வைகுண்டர் இசையத் திசைநடந்தார்
தொண்டு செய்யாமல் சூல்பூத மாடிவரப்
பூக்கொண்டு வந்து போட்டுத் தொழுவாரும்

தீக்கொண்டு வந்து தீபரணை காட்டுவாரும்
மலர்வீசிக் காற்று மறைவீசி நிற்பதுவும்
சிலம்பொன் துளிபோல் சிறப்புடனே தூவிவர
மதியுங் குடைபிடிக்க வாயு மறைவீசத்
துதியும் வழிதீய்க்கத் தேவர்மிக வோலமிட
இத்தனை நற்சிறப்பும் இயல்பாய் முழங்கிவரப்
புத்தியள்ள நாரணரும் புறப்பட்டார் தெச்சணமே
நதியிற் பிறந்த நாரா யணமூர்த்தி
பதியி னலங்காரம் பார்த்து வழிநடந்தார்
கெங்கை தனிற்பிறந்த கிருஷ்ண மகாநாதன்
கங்கை வழிநோக்கிக் கண்ணோன் வழிநடந்தார்

**விளக்கம்:**

அப்போது பூதக்கணங்கள் எல்லாம் அய்யாவை தூக்கி சுமந்து ஏந்தி வருவதற்கு தயாராகின. அப்போது அந்த பூதங்களிடம் அய்யா சொல்லுகின்றார், மாபூதங்களே நீங்கள் இப்போது என்னை சுமக்க வேண்டாம். காரணம் நீங்கள் என்னை சுமந்தீங்களேயானால் நீ நிலத்தை சோதனையில் தாங்கள் தவறு செய்கின்றபோது அந்த தவறை நான் கேட்பதற்கு அங்கே தகாமல் போய்விடும். ஆகவே உங்களுடைய பூஜை மற்றும் சேவைகள் எனக்கு தேவையில்லை. எனக்கு அன்பான பஞ்சபாண்டவர்கள் இருக்கின்றார்கள்.

ஆகவே அவர்கள் எனக்கு வேண்டிய உதவிகளை அவர்கள் செய்வார்கள். நீங்கள் எல்லோரும் விலகி நில்லுங்கள் என்று அந்த பூதமதை எல்லாம் விலக்கிவிட்டு எம்பெருமான் அங்கிருந்து தெட்சணம் வருகின்றார் .அப்படி வருகின்ற போது பூக்களை போட்டு தொழுது நிற்கின்ற மக்களும், தீபங்களை கொண்டு வந்து தீபாராதனை காட்டுகின்றவர்களும், பூக்களை போட்டுத் தொழுது நிற்பவர்களும், வாயுமறை வீச, சூரியன் குடைப்பிடிக்க , தேவர்கள் எல்லோரும் ஓலமிட இவ்வளவு சிறப்புகள் முழங்கி நிற்கின்ற போது வைகுண்டர் தெட்சணம் நோக்கி புறப்படுகின்றார். அப்படி வரும் வழியில் முந்தைய அவதாரத்தின் போது அமைக்க பட்டிருந்தை பதியின் அலங்காரம்,பதியினுடைய சிறப்பு எல்லாவற்றையும் பார்த்து நெஞ்சம் நோக்கி வழி நடந்தார்.

**வினா விடை** :

1. வைகுண்ட பூதக்கணங்களின் னுடைய பணிவிடைகளை ஏற்றுக் கொண்டாரா?
இல்லை
வைகுண்ட பேய் மற்றும் பூதக்கணங்களின் உடைய பணிவிடையை மறுப்பதற்குரிய காரணம் என்ன நடுதீர்ப்பு செய்கின்றபோது அவர்களுடைய பணிவிடைகளை ஏற்றுக்கொண்டால் அவர்களுடைய தப்புக்கு தண்டனை கொடுக்க முடியாது என்ற காரணத்தினால் ஆகும் வைகுண்ட பேய் மற்றும் பூதக்கணங்களிடம் தான் உங்களுடைய பணிவிடை ஏற்கவில்லை எனக்கு வேண்டாம் என்று எதனால் கூறினார் பஞ்சபாண்டவர்கள் எனக்கு உதவி செய்வதற்காக இருக்கின்றார்கள் ஆகவே வேதாளம் உங்களுடைய பூஜை எனக்கு வேண்டாம் என்று கூறினார்

வெண்மை உயிரினங்கள் வைகுண்டரைப் பணிதல்

நடந்து வருகும் நல்லவை குண்டர்முன்னே
கடந்து முன்போன காண்டா மிருகமொடு
சிங்கமி யாளி செங்கருட னங்கனுமன்
பங்கமிலா றாஞ்சி பால்நிறப் பட்சிகளும்
ஐந்தலை நாகம் அஞ்சுபஞ் சாச்சாரை
செந்தலைக் கருடன் செய்யகாண் டாமிருகம்
கலியன்கண் காணாதே காடோடி வாழ்ந்திருந்த
சலிவில்லா மாமிருகம் சந்தவர்ணப் பட்சிமுதல்
தரும வைகுண்டர் தான்வந்தா ரென்றுசொல்லிப்
பொறுமைக் குலங்களெல்லாம் புறப்பட் டகமகிழ்ந்து
வந்து வைகுண்டர் மலரடியைப் பூண்டுகொண்டு
சிந்தர் குலமன்னர் தெய்வப் பெருமாளே
வைகுண்ட ரெப்போ வருவீர் வருவீரென்று
கைகண்ட நிதியும் காணாதார் போலிருந்தோம்
கப்பல்கரை கண்டாற்போல் கண்டோமே யும்மையும்நாம்
செப்பத் தொலையாத திருவடியைப் போற்றிசெய்ய
வாறோங்கா ணும்முடனே வைகுண்டப் பெம்மானே
தாறோங்கா ணெம்முதுகு சாமியுன் பாதமதுள்
என்றிவைக ளெல்லாம் இரங்கித் தொழுதிடவே
நன்றென் றுஅந்த நாரா யணருரைப்பார்
ஒருவிளி பொறுங்கோ உண்மையிது தப்பாது

இருவிளிக் குள்ளே என்னிடத்தில் வந்திடுங்கோ
இருங்கோ முன்னயச்ச இடத்திலே போயிருங்கோ
கருதி யிருங்கோ கருத்தயர்ந்து போகாதுங்கோ
அலைய விடாதிருங்கோ அஞ்சுபஞ் சமதையும்
குலைய விடாதிருங்கோ குருநினைவை யுள்ளேற்றம்
என்று அவைகளுக்கு எம்பெருமான் சட்டமிட்டு
அன்று அவைகளையும் அனுப்பி மிக நடந்தார்
நடந்துபல திக்கும்விட்டு நல்லவன வாசம்விட்டுக்
கடந்துசில ஊரும்விட்டுக் கடல்வழியே தானடந்தார்
வரகுண வைகுண்டர் வாரிசுனை பார்த்து
இரசகனிக ளேற்று இரவும் பகல்கடந்தார்
விசைகொண்ட ராசர் விசயா பதிகடந்தார்
வாரிக் கரைவழியே வரவேணு மென்றுசொல்லி
சூரிய புஸ்பத் துலங்கும்க் குறிபார்த்து
வீரிய நாதன் விரைவாய் வழிநடந்தார்
கடலுட் பதிகள் கண்டுகண் டேநடந்தார்
மடமடென அட்டவணை வாரிதீர்த் தாமாடி
கடற்பெம்மான் வாறார் காணுவோ மென்றுசொல்லித்
திடமுடனே வாரி சென்றுகண்டு தான்தொழவே
கடல் விளைவெல்லாம் வைகுண்டர் பதம்பணிதல்
முத்துக்கள் சங்கு முன்வந்து தெண்டனிட்டு
வத்துப் பெரிய வைகுண்ட மன்னவரே
இத்தனை நாளும் இயல்கலிய னேதுவினால்
சற்றும் வெளிகாணாதே சமுத்திரத்தி னுள்ளிருந்தோம்
தர்மப் பெருமானே சாமிநீர் வந்ததினால்
நன்மை யுடனாங்கள் நாட்டிலே வாறோங்காண்
ஒருசொல் வரைக்கும் உவரியிலே வாழ்ந்திருங்கோ
இருசொல் லாகுமட்டும் இங்கிருங்கோ என்றுரைத்து
நடந்து வைகுண்டர் நாடி மிகவரவே
கிடந்த நிதியும் கீழ்க்கிடந்த காசுகளும்
ஒக்க உயரவந்து உளமகிழ்ந்து தானிருக்கும்
திக்கென்று நாதன் சேடன் தனையழைத்து
கயிலாசந் தன்னைக் கட்டாய் வரவழைத்து
ஒயிலாக இத்தனையும் உள்ளேநீ கொண்டுசென்று
காவல்செய்து கொள்ளு கயிலாச மென்றுரைத்தார்
தேவன் சட்டமிட்டுத் தெச்சணம் போகவென்று
நடந்தார் துரிதமுடன் நாரணனார் தெச்சணத்தில்

நல்லநா ராயணரும் நாடி வழிநடக்க
வல்ல பெலமான மாமுனிவ ருங்கூடி
எல்லோருங் கூடி இயல்வா ரிக்கரையே
நல்லோர்க ளாக நடந்தார்கா ணம்மானை
வாதையே யானதெல்லாம் வைகுண்டர் பாதமதை
சீதமுடன் போற்றித் தீபரணைக் காட்டிவரக்
காட்டுகின்ற தீபமெல்லாம் காணாத வர்போலே
நாட்டுக் குடைய நாரா யணர்நடந்தார்

**விளக்கம்:**

இவ்வாறு வைகுண்டர் மனுச்சொரூபம் எடுத்து தெட்சணம் நோக்கி வருகின்ற போது நல்ல தன்மையுடைய காண்டாமிருகம், சிங்கமும், யாழி, செங்கருடன், அனுமன், பங்கம் இல்லா ராஞ்சி, பால் நிற பச்சிகளும் ,ஐந்து தலை நாகம் , பஞ்சாசாரை, செந்தலை கருடன், செய்ய காண்டாமிருதம் முதலிய நல்ல தன்மையுடைய விலங்கினமும், பட்சிப் பறவைகளும் கலியன் கண்காணாமல் காடுகளில் மறைந்து வாழ்ந்திருந்தனர். வைகுண்ட ர் வருவதை மிருகங்களும், பட்சிகளும் பார்த்து, வைகுண்டர் வந்துவிட்டார் என்று சொல்லி பெருமை குலங்கள் எல்லாம் சந்தோசத்தில் வைகுண்டருடைய மலர் அடியை வந்து பணிந்து நின்றார்கள். தெய்வப் பெருமானே! தாங்கள் எப்போது வருவீர்கள் என்று நாங்கள் காத்திருந்தோம். இப்போது கைகண்ட நிதியும் கண் காணாத போல் இருந்தார். எங்களிடம் எல்லா சிறப்புகளை இருந்தும் நாங்கள் இந்த கலிக்குள் அகப்பட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருந்தோம்.

இப்போது தங்களைப் பார்த்தவுடனே கப்பல் கரை கண்டார் போல் கண்டோமே உம்மையும் தான் என்று ம் பணிந்து நின்றன. புயல் காற்றினால் அகப்பட்ட கப்பலானது கரை வந்து சேருகின்ற போது எவ்வளவு சந்தோஷத்தோடு மக்களவைகளெள வரவேற்பார்களோ அதுபோல நாங்களும் இப்போது மன சந்தோஷத்தில் இருக்கின்றோம். எங்களுடைய சந்தோஷத்தின் தன்மையை வெளிப்படுத்தினார் கள். மேலும் நாங்கள் உம்மை தூக்கி சுமப்பதற்கு எங்களுடைய முதுகை நாங்கள் உங்களுக்கு தருகிறோம் என்று அவரை தூக்கி சுமப்பதற்கு தயாராக இருந்தார்கள். இப்படி அவர்கள் தொழுது நிற்கின்ற போது நாராயணர் வைகுண்டர் அவர்களிடம் கூறுகின்றார், ஒருவிளி

பொறுங்கோ உண்மையிது தப்பாது. இருவிளிக்குள்ளே என்னிடத்தில் வந்திடுங்கோ! இருங்கோ முன் அயச்ச இடத்தில் என்றுக் கூறினார்.

மேலும் நீங்கள் அங்கு போய் இருந்து கருதி இருங்கோ, கருத்தயர்ந்து போகாதீங்கோ! அலைய விடாதீங்கோ அஞ்சு பஞ்சமதையும் அதாவது பஞ்சப் பூதசக்திகளினால் ஆக்கப்பட்ட இந்த உடம்பில் இருக்கும் ஆன்மாவின் நன்மைக்காக கருதி இருக்க வேண்டும் . இந்த உலகியல் இன்பங்களில் ஆசை வைத்து துன்பங்களை அனுபவிக்க கூடாது. எப்போதுமே இறைவனை நாடி இறைச்சிந்தனையை மனதில் ஏற்று வாழ்ந்து வாருங்கள். மெய்,வாய், கண், மூக்கு, செவி என்றுச் சொல்லக்கூடிய பஞ்சப்பூதச் சக்திகளைக் குலைய விடாதீங்கோ! குரு நினைவை உள்ளேற்று வாழ்ந்து வாருங்கள் என்று அவைகளுக்கு சட்டமிட்டு அனுப்பிவிட்டு எம்பெருமான் தெட்சணம் நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

இவ்வாறு இறை சிந்தனையை எப்போதும் மனதிலேயே ஏற்று உங்களுடைய மனதை அவர் எதிலும் அலையவிடாமல் இருக்க வேண்டும் என்று கூறிவிட்டு எம்பெருமான் அங்கே நடந்து வந்து கொண்டிருக்கின்றார் அப்படி வருகின்ற வழியில் பல வனங்களை கடந்து பல ஊர்களை விட்டு அங்குள்ள மக்களையும் பார்த்து அருள் உபதேசங்களை கூறி கடற்கரை வழியே நடந்து வருகின்றார். அப்படி இருக்கின்ற போது அன்பான மக்கள் கொடுக்கின்ற பல கனி வகைகளை எல்லாம் ஏற்று இரவு பகலாக நடந்து வந்து கொண்டிருக்கின்றார். அப்படி நடந்து வருகின்றபோது கடற்கரையின் சிறப்பையும், கடலுக்குள் இருக்கின்ற பதியி னுடைய அழகையும் பார்த்து வருகின்றார். சூரிய புஷ்ப துற்பக்குறிப் பார்த்து வீரிய நாதன் விரைவாக வழிநடந்தார்.

இவ்வாறு கடலினுள் இருக்கும் பதியின் சிறப்பை எல்லாம் கண்டு எம்பெருமான் வழி நடந்து கொண்டிருக்கின்ற அந்த நேரத்தில் கடலுக்குள் இருக்கின்ற முத்துக்கள், சங்கு கடல் விளைந்த பொருட்கள் எல்லாம் மடமடென வந்து அங்கே வைகுண்டருடைய பாதத்தில் விழுகின்றது. கடற்பெம்மான்வரார் காணுவோம் என்று சொல்லி திடமுடனே வைகுண்டருடைய பாதத்தை பணிந்து நின்றன. வைகுண்ட மன்னவரே இத்தனை நாளும் இந்த கலியுனுடைய ஏதுவினால் நாங்கள் வெளியில் காணாமல்

சமுத்திரத்தின் உள்ளே இருந்தோம். தர்ம பெருமானே! தாங்கள் இப்போது வைகுண்ட அவதாரம் எடுத்து வந்த காரணத்தினால் நன்மையுடன் நாங்கள் நாட்டிலே வாரோம் காண் என்று அங்கு அவைகள் எல்லாம் அய்யா வைகுண்டருடைய பாதத்தை பணிந்து நின்றன.

காரணம் கலியன் வரம் பெற்று பூலோகம் நோக்கி வருகின்ற போது கலியன் கண் காணாது மறைந்து இருக்கோ , வைகுண்ட அவதாரம் எடுக்கின்ற போது உங்களுக்கு நற்பேறு அருளுவேன் என்றுக் கூறியிருந்தார். அதன்படி கடலுக்குள் மறைந்து இருந்த கடல் விளைப் பொருட்கள் எல்லாம் இப்போது வைகுண்ட அவதாரம் நிகழ்ந்து விட்ட காரணத்தினால் வைகுண்டரிடம் பணிந்து வணங்கி வெளியே வருவதற்கு அனுமதி கேட்கின்றன. அப்போது அந்த கடல் விடை பொருட்களிடம் அய்யா கூறுகின்றார், ஒரு சொல் வரைக்கும் நீங்கள் உவரிலே வாழ்ந்திருந்தோ இரு சொல்லாகும் மட்டும் இங்கிருங்கோ என்று சொல்லிவிட்டு வைகுண்டர் அங்கிருந்து மீண்டும் நடந்து வந்து கொண்டிருக்கின்றார். அப்படி அவர் நடந்து வருகின்றபோது கீழ் கிடந்த நிதியும் காசுகளையும் , செல்வ வளம் தரும் பொருள் வைகுண்டருடைய காலடியில் இருந்து அதை கண்டு கொள்ளாமல் வருகின்றார்.

வைகுண்டரை பார்த்தவுடன் கடலில் இருந்த பொருட்கள் எல்லாம் கடற்கரையிலே வந்து அங்கே மகிழ்ந்து வைகுண்ட அவதார நிகழ்ந்துவிட்டது என்ற சந்தோஷத்தில் அவை கடற்கரையிலே வந்து குவிந்து இருந்தன. வைகுண்டருடைய காலடியில் அவை இருந்தாலும் அவற்றை கண்டு கொள்ளாதவர் போல் அவன் நடந்து வருகின்றார். அப்படி வருகின்றபோது வைகுண்டம் பெருமான் சேடனை அழைக்கின்றார். சேடனை அழைத்து அந்த சேடனிடம் ஒரு கட்டளை இடுகின்றார். என்னவென்றால் இங்கே ஒயிலாக கூடி இருக்கின்ற இந்த செல்வங்களை எல்லாம் முன்னே நீர் சென்று எடுத்துக்கொண்டு காவல் செய்து கொள்ள வேண்டும் என்று சேடனுக்கு கட்டளை இடுகின்றார்.

அவ்வாறு சட்டம் இட்டுக்கொண்டு தெட்சணம் நோக்கி வருகின்ற போது வைகுண்ட ரோடு நல்ல முனிமார்களும் நடந்து வருகின்றார்கள். எல்லோருமாக கடற்கரை வழியாக வருகின்ற அந்த வேளையிலே வாதை பேய்கள் எல்லாம் வைகுண்டர் பாதத்தை

பணிந்து போற்றி தீபாராதனை காட்டி நிற்கின்றன. அந்த வாதை பேய்கள் காட்டுகின்ற தீபாராதனை எல்லாவற்றையும் காணாதவர் போலே வைகுண்டர் வழி நடந்து கொண்டிருக்கின்றார். அந்த நேரத்தில் நல்ல குல தெய்வங்கள் வைகுண்ட அவதாரத்தினுடைய மகிமையை அறிந்து சந்தோஷம் கொண்டன.

## வினா விடை :

1. வைகுண்டர் தெட்சணம் நோக்கி வருகின்ற போது அவரை பணிந்து நின்ற வெள்ளை உயிரினங்கள் எவை எவை?
சிங்கம் யாழி செங்கருடன் அனுமன் பால்நிற பட்சிகள் ஐந்து தலை நாகம் அஞ்சு பஞ்சா சாரை, செந்தலை கருடன் காண்டாமிருகம் மற்றும் சந்தவர்ண பட்சிகள்.

2. “கைகண்ட நிதியம் காணாதவர் போல் இருந்தோம்.
கப்பல் கரை கண்டார் போல் கண்டோமே உமையும்தான்” யார் யாரிடம் கூறியது?
வெள்ளை உள்ளம் கொண்ட உயிரினங்கள் வைகுண்டரிடம்

3. வைகுண்ட திருச்செந்தூரில் இருந்து தெட்சணம் நோக்கி வருகின்றபோது நாங்கள் எங்களுடைய முதுகை உங்களுக்கு தருகின்றோம் உங்களை நாங்கள் தூக்கி சுமக்குகின்றோம் என்று வைகுண்டரிடம் பணிந்து நின்றவை எவை?

   வெள்ளை உள்ளம் கொண்ட உயிரினங்கள்

4. அய்யா எங்கள் முதுகை தாங்கள் அமர்வதற்கு தருகிறோம் என்று கூறிய வெள்ளை உள்ளம் கொண்ட உயிரினங்களிடம் கூறிய மறுமொழி யாது?
ஒரு விழி பொருத்திருங்கோ உண்மையிது தப்பாது இருவிழிகுள்ளே என்னிடத்தில் வந்திடுங்கோ என்று கூறினார்.

5. “ஒருவிழி பொருத்திருங்கோ உண்மையிது தப்பாது இரு விழிக்குள்ளே என்னிடத்தில் வந்திடுங்க என்று வைகுண்டர்” யார் யாரிடம் கூறினார்? வெள்ளை உள்ளம் கொண்ட உயிரினங்களிடம் கூறினார்.

6. “கருதி இருங்கோ கருத்தயர்ந்து போகாதீங்கோ

அலைய விடாதீர்கள் ஐந்து பஞ்ச மதையும்
குலைய விடாதீர்கள் குருநினைவை உள் ஏற்று" என்று வைகுண்டர் யார் யாரிடம் கூறினார்?.
வெள்ளை உள்ளம் கொண்ட உயிரினங்களிடம்

7. "அலைய விடாதிருங்கோ ஐந்து பஞ்சமதை" இந்த ஐந்து பஞ்சம் என்பது எதைக் குறிக்கிறது?
மெய், வாய், கண், மூக்கு, செவி என்பதை குறிக்கிறது.

8. கடல் பெம்மான் வரார் கண்டு நாம் தொழுவோம் என்று கூறி வைகுண்டருடைய பாதம் பணிந்தவை எவை எவை?
சங்குகள் முத்துக்கள் மற்றும் கடல் விளை பொருட்கள் எல்லாம்

9. ஒரு சொல் வரைக்கும் உவரிலே காத்திருந்தோ என்று அய்யா யாருக்கு கட்டளையிட்டார்?
கடல் வாழ் உயிரினங்களுக்கு

10. வைகுண்டார் நடந்து வருகின்றபோது சந்தோஷமாக வைகுண்டருடைய பாதம் பணிந்தவை எவை?
கீழ்கிடந்த நிதியும், காசுகளையும்

11. வைகுண்டர் கைலாசம் தன்னை கட்டாய் வரவழைத்து நீ உள்ளே கொண்டு காவல் செய்து கொள்ளூ என்று யாரிடம் சட்டம் இட்டார்?
சேடனிடம்

12. கீழ்கிடந்த நிதியும், காசுகளையும் யாருடைய காவலில் வைத்து பாதுகாக்க படுகிறது?
சேடனுடன் வாழ்ந்த கைலாசத்தில்

13. வைகுண்டரி யார் காட்டுகின்ற தீபத்தை காணாதவர் போலே நடந்து வந்தார் ?
வாதை பேய்கள் எல்லாம் காட்டுகின்ற தீபத்தை

14. வைகுண்ட அவதாரத்திற்கு பிற்பாடு நன்மை யாருக்கு விளைந்தது?
நல்ல மன எண்ணம் உடையவர்களுக்கு நன்மை விளைந்தது.

15. வைகுண்ட அவதாரத்திற்கு பிற்பாடு யாருக்கு பகை சூழ்ந்து கொண்டது?

வம்பான எண்ணமுடைய கலிநீசர்களுக்கு பகை சூழ்ந்து கொண்டது.

நல்ல குலதெய்வங்கள் மறைதல்

நல்ல குலதெய்வம் நாட்ட மதையறிந்து
எல்லைக் குடையை ஈசர்வந் தாரெனவே
இன்றுமுதல் வம்பருக்கு இயல்பகைதான் சூழ்ந்துதென்றும்
நன்று மனத்தோர்க்கு நல்லநாள் வந்துதென்றும்
முற்கலியன் சட்டம் முதன்மையின் றுமுதலாய்த்
துற்கலிபோ லாகிச் சுற்றுக் குலைந்துதென்றும்
கொண்டாடி நல்ல கூளி கணங்கள்சொல்லிக்
கண்டா ருடனேயும் கைதொழுத மனுவோடும்
இன்றுமுத லெங்களுக்கு எற்கும்வகை யில்லையேகாண்
கண்டுகொள்ளுங் கோவெனவே கண்காட்டிப் போய்மறைந்தார்

**விளக்கம்:**

நல்ல குல தேவதைகள் எல்லாம் சந்தோஷம் கொண்டு எல்லைக்குடைய வைகுண்டர் எப்போது எடுத்து வந்திருக்கின்ற காரணத்தினால் இன்று முதல் வம்பருக்கு இயல்பகை தான் சூழ்ந்தது என்றும்,நன்று மனதோர்க்கு நல்ல நாள் வந்தது என்றும் முற்கலியன் சட்டம் முதன்மையின்று முதலாய் துர்க்கலி போல் ஆக காரணம் இன்று ஆச்சுதென்று எடுத்து கூறினர். அதாவது தீய எண்ணங்களோடு இருக்கின்றவர்களுக்கு அழிவு இன்று முதல் துவங்கிவிட்டது என்றும், நல்ல சிந்தனையோடு வாழுகின்றவர்கள் சிறப்பாகப் போகின்றார்கள் என்றும் நல்ல குல தேவதைகள் எல்லாம் அங்கே நாடி அகம் மகிழ்ந்து இருந்தன.

அப்படி இருக்கின்ற அந்த நேரத்திலே குக்கூணிப்பேய்கணங்கள் பூதங்கள் இன்று முதல் எங்களுக்கு எதுவும் ஏற்றுக் கொள்ள முடியாதே என்று ஏக்கமாக ஏங்கி நின்றன. ஏனென்றால் வைகுண்ட அவதாரம் நிகழ்ந்த பிற்பாடு எந்த சிறு தெய்வங்களுக்கும் அதிகாரம் இல்லை. மக்கள் அவைகளுக்கு பயந்து அவை கேட்கின்ற பலி பூஜை எதுவும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இதை பூதங்கள்,சிறுதெய்வங்கள் உணர்ந்து கொண்ட காரணத்தால் அந்த சிறுதெய்வங்களிடம் இதை உணர்ந்து கண்டுகொள்ளுங்கள் என்றுக் கண்காட்டிப் போய் மறைந்தார்.

விருத்தம்

நானில மரசு ஆள நாரணர் பெற்று வாறார்
தானித மான அன்பாய்ச் சகலருங் கேட்டுக் கொள்ளும்
மாநிலத் தோரே யென்னை வருந்தியே தேவ வேண்டாம்
நானினிச் செய்ய ஆகா நவின்றவர் தெய்வம் போனார்

விருத்தம்

தேயவங்க ளுலகி லெல்லாம் தெரிசனங் காட்டிக் காட்டி
மெய்வரம் புள்ளோ ரெல்லாம் மேதினி விட்டுப் போந்தார்
பொய்வரம் பசாசு எல்லாம் பொன்றிய வகையா ராமல்
மெய்மறந் துரைகள் சொல்லி மேதினி யொழித்தா ரென்றே

**விளக்கம்:**

மும்மூர்த்ததியும் ஒருமூர்த்தியாகி நாராயணரே வைகுண்டமாக இந்த உலகை ஒரு சொல்லுக்குள் ஆள்வதற்காக வைகுண்டர் அவதாரம் எடுத்து வந்திருக்கின்றார். ஆகவே அன்பான சான்றோர் மக்களே அனைவரும் தெரிந்து கொள்ளுங்கள் இதற்கு முன்பு நான் எடுத்திருந்த அவதாரங்களைப் பற்றி நீங்கள் என்னை தேடி அலைய வேண்டிய அவசியம் இல்லை. வைகுண்டார் இப்போது இருந்த உலகை ஒரு சொல்லுக்குள் ஆள வந்திருக்கின்றதனால் அவர் காட்டிய வழியில் நீங்கள் நின்று எல்லாரும் வைகுண்டத்தை அடைந்து பரபிரம்மத்தோடு ஐயக்கமாக கூடிய நிலையை தேடி கொள்ளுங்கள். ஆகவே நான் செய்யக்கூடிய வழிமுறைகளை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் என்று கூறினார் .

மேலும் தெய்வங்கள் உலகில் எல்லாம் தரிசனம் காட்டிக் காட்டி, அதாவது இறைவன் அதர்மத்தை அழிக்க பலவிதமான அவதாரங்களை இந்த உலகில் நிகழ்த்தி இருக்கின்றார். இறைவனுடைய அவதார சூட்சமங்களை உணர்ந்து அவர் காட்டிய வழியில் வாழ்ந்து வந்த ஜீவாத்மாக்கள் இறைவனோடு அதாவது பரபிரம்மத்தோடு ஐக்கியமாகி விட்டது. ஆகையால் அவையெல்லாம் இப்போது இந்த உலகத்தை விட்டு விலகி விட்டது.

மேலும் இப்போது கலியன் தோன்றுவிட்ட காரணத்தினால் கலியை அழிப்பதற்காக இந்த வைகுண்ட அவதாரம் நிகழ்ந்திருக்கின்றது. ஆகவே முந்தைய அவதாரத்தின் போது நான் காட்டியிருந்த அந்த அவதார சூட்சமங்களை எல்லாம் மறந்து இப்போது வைகுண்ட அவதாரத்தின் உண்மை நிலையை உணர்ந்து அதன்படி வாழ்ந்து வாருங்கள்.

அப்படி கலியுகத்தில் நாம் வாழவேண்டிய உண்மை நெறிகளை கடைபிடித்து வருகின்ற மக்கள் நீங்கள் தர்மக வாழ்வை பெறுவீர்கள். இப்போது இங்கு நடப்பெற்றிருக்கிற வைகுண்ட அவதாரத்தின் மூலம் பொய் புரட்டு பிசாசு வஞ்சகம் சூனியம் அனைத்தையும் அழித்து, நேர்மையை கடைப்பிடித்து அன்பு, பொறுமை, தர்மத்தை நிலைநாட்டி மாக்களுக்கு நல்வாழ்வு அருள்வதற்காக நான் வைகுண்டமாக தோன்றியிருக்கின்றேன். ஆகவே வைகுண்ட அவதார சூட்சுமத்தை உணர்ந்து வைகுண்டர் அருளிய நெறிகளைக் கடைபிடித்து வாருங்கள் தீமைகளை எல்லாம் அழிந்து விடும் என்று கூறினார்.

வைகுண்டர் பகவதிக்கு அருளல்

நடை

கண்ணான நாதன் கமலக் குருநாதன்
வண்ணமுள்ள நாதன் வழிநடந்தா ரம்மானை
நடந்து பகவதியாள் நல்லகட லும்பார்த்துக்
கடந்து பகவதியைக் கண்காட்டித் தானழைத்து
நன்மை யுடைய நாயகியே சுந்தரியே
பொன்மோ கினியே பிள்ளாய்நான் சொல்வதுகேள்
வைகுண்டம் பிறந்து வார்த்தையொன்றுக் குள்ளான
உய்கொண்டோர் குலத்தை உருவேற்ற வந்தேனென
எந்தன் திருச்சம் பதியு மிதுமுதலாய்
எந்தெந்த நாட்கும் இனிக்காணிக் கைநிறுத்தல்
ஆனதினால் நீயும் ஆதியி லென்னோடு
தேனினியத் தங்கையராய்த் திட்டித்த ஏதுவினால்
உன்னோடு இத்தனையும் உபதேச மாயுரைத்தேன்
பொன்னாடு தெச்சணத்தில் போறேன் தவசிருக்க

என்று பகவதிக்கு இயம்பி வழிநடந்தார்
அன்று பகவதியாள் அறைக்குள் ளடைத்திருந்தாள்

**விளக்கம்:**

வைகுண்டர் திருச்செந்தூரிலிருந்து மணவை பதி நோக்கி வருகின்ற வழியில் கன்னியாகுமரியில் வீற்றிருக்கின்ற அம்மை பகவதியை பார்த்து வருகின்றார்.அப்போது அம்மைப்பகவதி தேவியிடம் ஒரு சட்டம் கூறுகின்றார், என்னவென்றால் பகவதி தாயே! என்னுடைய தங்கை யே! நன்மையுடைய நாயகியே! சுந்தரியே! பொன்மோகனியே பிள்ளாய் நான் சொல்வதைக் கேள், வைகுண்டமாக நான் அவதாரம் எடுத்து வார்த்தை ஒன்றுக்குள்ளாக இந்த உலகத்தை ஆளவும், சான்றோர் மக்களுக்கு தர்மயுக வாழ்வு அளிப்பதற்காகவும் இப்போது வைகுண்டமாக அவதாரம் எடுத்து வந்திருக்கின்றேன்.

ஆகையால் எந்தன் திருச்செம்பதி முதலாய், காணிக்கை வேண்டுவது, காவடி எடுப்பது இவை எல்லாம் நிறுத்தல் செய்து வைத்திருக்கிறேன். தர்மயுகத்தை நிலைநாட்டுகின்ற நாள் வரையிலும் நிறுத்தல் செய்து வைத்திருக்கின்றேன். ஆதலால் நீயும் என்னோடு தங்கையாக பிறந்திருக்கின்ற காரணத்தினால் உன்னோடு நான் இப்போது உபதேசமாக சொல்லுகின்றேன். அதை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்.
[29/08, 6:09 pm] Seetha: மேலும் பகவதி தேவியிடம் கூறுகின்றார், நான் பொன்னாடாகிய தெட்சணத்தில் நான் தவசி இருக்க போகிறேன். ஆகையால் இவை எல்லாம் நிறுத்தல் செய்வதற்கு மக்களிடம் உபதேசமாக எடுத்துரைக்க வேண்டும்.

ஆகையால் நீயும் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றுச் சொல்லிக்கொண்டு அங்கிருந்து நடந்து வந்தார். அப்போது பகவதி அம்மை அங்கு அறைக்குள் சென்று அடைந்திருந்தார்கள். காரணம் மக்கள் கொடுக்கின்ற எந்த வழிபாட்டு முறைகளையும், பூஜை புனஸ்காரங்கள், தேரோட்டம், காணிக்கைப் போன்ற எந்த வழிபாட்டு முறையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கு அடையாளமாக அடைக்குள்ளே அங்கு அடைந்திருந்தார்கள். நாராயணரும் நல்ல சங்கத்தார்களுடனே மணவைப் பதியை நோக்கி அங்கே சென்று கொண்டிருந்தார். அப்படி சென்று கொண்டிருக்கும் போது தென்காசி என்ற தெட்சணா பூமியினுடைய

கண்காட்சிகளை எல்லாம் கண்டு களித்தும், அங்குள்ள இயற்கை வளங்களையும் அதனுடைய சிறப்புகளையும் தெட்சிணா பூமியினுடைய பெருமைகளையும் பார்த்து கண்ணோக்கி தெட்சணம் நோக்கி வழி நடந்தார்.

**வினா விடை** :

1. வைகுண்டர் கன்னியாகுமரி பகவதி அம்மையை அழைத்து இட்ட கட்டளை யாது?
   பகவதி தேவியிடம் நீ இன்று முதல் காணிக்கை நிறுத்தல் செய்ய வேண்டும் என்றுக் கூறினார்.

2. வைகுண்டர் பகவதி தேவியிடம் ஏன் காணிக்கையை நிறுத்தல் செய்ய வேண்டும் என்று கூறினார்?
   வைகுண்ட உய் கொண்ட குலமாகிய சான்றோர் மக்களை உருவேற்ற வந்திருக்கின்ற காரணத்தினால் நீயும் என்னோடு தங்கையாக திட்டித்த ஏதுவினால் இப்போது நான் பொன்னாடு தெட்சணத்தில் தவம் இருக்கப் போகின்றேன். ஆகவே இந்த கலி அழிகிறது வரையிலும் நீ பூசை புனக்காரம் காணிக்கை தேரோட்டம் என்று இதற்கு முன்பு நடைபெற்ற அத்தனை வழிபாட்டு முறைகளையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றுக் கூறினார். உடனே பகவதி தேவி அறைக்குள் அடைந்து இருந்தாள்.

வைகுண்டர் மணவைப்பதி ஏகல்

நாரா யணரும் நல்லசங்கத் தாருடனே
சீராய் மணவைப் பதிநோக்கித் தான்நடந்தார்
தென்காசி யென்ற தெச்சணா பூமியிலே
கண்காட்சி சூழக் கண்ணர் மிகநடந்தார்
நடந்தெம் பெருமாள் நல்ல கடல்வழியே
திடந்தெளிந்த தேவர்களும் செயசெ யெனநடக்க
கண்டார் துவரம் பதியின்கண் ணோட்டமெல்லாம்
பண்டைப் பதியின் பவிசொல்லா மேபார்த்து
ஆன பதியின் அகலநீ ளம்பார்த்து
மான பதியின் வாசலெல்லாம் பார்த்தவரும்
நாடுகுற்றங் கேட்க நல்லதவஞ் செய்வதற்குத்
தேடும் வடவாசல் சீவிவளர் மலையின்
நேரும்வா சல்தனக்கு நிகரில்லை யாமெனவே

தவசுக் குகந்த தலங்களிது நன்றெனவே
உபசீ வனம்வளரும் உகந்தபுவி யீதெனவே
என்று மனதிலெண்ணி என்றன்பெரு மானும்
அன்றுவே தமுனியை அழைத்துமொழி கேட்கவென்று
வாநீ முனியே வல்லகலைக் கியானமொழி
தானீ கரமாய்ச் சத்தியாய்க் கற்றவனே
மான முனியே மறைநாலுங் கற்றவனே
ஓநமோ வேதம் ஓயாம லோதுவோனே
பின்முன் நின்று இயம்புரைகேட் டேயுரைநீ
நான்தவ சிருக்க நாடுரைநீ மாமுனியே
மான்தவ சுக்குகந்த மாமுனியே என்றுரைத்தார்
கலைமுனி தவசுக்குகந்த இடத்தின் சிறப்புக் கூறல்

விருத்தம்

வெள்ளா சனத்தில் விரைவா சியைநிறுத்திக்
கள்ளமா னதையகலக் காடகற்றி–விள்ளரிய
வெள்ளமாங் கருணைபெறு வேதமுக மாமுனியே
உள்ளதெனக் கின்னதென் றுரை

விருத்தம்

பூரணத்தி னாடி புகழ்ந்துமுனி கொண்டாடி
வாரணத்தின் கோடுவரை தேர்ந்து–காரணத்தின்
கட்டுரைத்து நாடுவளம் விட்டுரைப்பே னென்றுமுனி
தொட்டுப் பதங்குவித்துச் சொல்லுவான்

**விளக்கம்:**

மணவை பதியை நோக்கி வைகுண்டர் வருகின்றபோது தெட்சணபூமியில் முன்னாள் அமைந்திருந்த துவரையும் பதியுனுடைய சிறப்பையும் கண்ணோட்டமாக கண்டு எம்பெருமான் அந்த கடற்கரை வழியே வருகின்றார். இப்படி வருகின்றபோது தேவர்கள் எல்லோரும் செயசெய எனவே போற்றி நிற்கின்றார்கள். அப்படி போற்றி நிற்கின்றபோது துவரம் பதிவினுடைய அகல நீளங்களை எல்லாம் பார்த்தும் இதற்கு முன்பு என்ன என்ன சிறப்புகள் இருந்தது இப்போது அந்த பதிவினுடைய

சிறப்பு எவ்வாறு இருக்கிறது என்பதை எல்லாம் தன் உள்ளத்தில் அறிந்து அந்த பதியின் வடவாசல்களை எல்லாம் பார்த்தவாறு வழி நடந்தார்.

இப்போது நாடு குற்றம் கேட்டு நல்ல தவம் செய்வதற்கு வடவாசல் ஆன சஞ்சீவி வளரும் மலையின் நேர் வாசல் தன்னில் தவம் இருக்க வேண்டும். இந்த பூமிக்கு நிகரான இடம் தவம் இருப்பதற்கு வேறில்லை என்றும் தவசுக்குந்த தலங்களிலே இது நன்றான பூமி தெட்சிணாமப் பூமி என்று தெட்சணா பூமியை தேர்ந்தெடுக்கின்றார். உப சீவனம் வளருகின்ற உகந்த பூமி இது எனவே மனதில் எண்ணிய எம்பெருமான், இந்த பூமிக்கு இருக்கின்ற சிறப்பை வேதமுனியை அழைத்துக் கேட்க வேண்டும் என்று நினைத்து அங்கு வேத முனியாகிய வியாசரை அழைக்கின்றார்.

அய்யா வைகுண்டர் வேதமுனியாகிய வியாசமுனிவரை அழைக்கின்றார். எப்படி என்றால் வா நீ முனியே! வல்ல கலைக்கையான மொழி தானீகரமாய் சக்தியாய் கற்றவனே! ஓநமோ வேதம் ஓயாமல் ஓதுவோனே! பின் முன் பார்த்துப் பேணி உரைப்போனே! என் முன் நின்று இயம்புரைகேட்டேயுரைநீ! அதாவது முக்கால செய்திகளையும் உணர்ந்தவர் ஒருவர் உண்டு என்றால் அவர் வியாச முனிவர் ஆவார். அது மட்டுமல்ல எல்லா வேத ஞானங்களையும் மறைகளையும் கற்றவர் வியாச முனிவரே.

இவ்வாறு முக்கால செய்திகளையும் உணர்ந்து இறைவனுடைய அவதாரங்களினுடைய சிறப்பை எல்லாம் கற்று உணர்ந்து, யுகா யுகங்கள்தோறும் இறை அவதாரத்தை உணர்ந்தவர், வர இருக்கின்ற தர்மயுகத்தின் சிறப்பை அறிந்தவர், நிகழ்காலமாகிய கலியுகம் எப்படி இருக்கும் என்பதை உணர்ந்தவர், ஒவ்வொரு யுக சிறப்பையும், யுகங்கள் தோறும் தோன்றிய வேதங்களை எல்லாம் கற்று தேர்ந்தவர் எப்போதும் இறைவனுடைய நாமத்தை ஓயாது மனதிலே எண்ணி உரைத்துக் கொண்டிருப்பவர் இந்த வியாச முனிவர். இவ்வாறு இவ்வளவு சிறப்புகளை பெற்ற அந்த வியாசம் முனிவரை அழைத்து நான் தவசி இருப்பதற்கு ஏற்ற இடம் எது என்று நீ உரைக்க வேண்டும் என்று எம்பெருமான் வியாச முனிவரிடம் கேட்கின்றார்

அதாவது இறைவனுக்கு தெரியும் எந்த இடம் சிறப்பு வாய்ந்தது என்று, ஆனால் அங்கே வியாச முனிவரை அழைத்து கேட்பதிலிருந்து

நாம் உணர்ந்து கொள்ளக்கூடிய ஒரு செய்தி என்னவென்றால், ஆகம நெறிமுறையின் படி நன்கு கற்றுணர்ந்து இந்த உலக மக்களால் போற்றப்படுகின்ற ஒருவர் இருக்கின்றபோது அவரிடம் கேட்டு தெரிந்து கொள்வது சிறப்பு என்பதை மனு அவதாரம் எடுத்து வந்திருக்கின்ற எம்பெருமான் மக்களுக்கு ஒரு நெறியைப் போதிப்பதற்காக இங்கு வியாச முனிவரை அழைத்து கேட்கின்றார்.

வைகுண்டர் வியாச முனிவரை அழைத்து மா முனியே நான் தவம் இருப்பதற்கு சிறந்த இடம் எது என்பதை எனக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று, தன்னுடைய மனதை ஒருநிலைப்படுத்தி பிரபஞ்ச சக்திகளை எல்லாம் ஒன்றுக்குள் அடக்கி தூய்மையான மன எண்ணங்களை மட்டுமே தன் சிந்தனையில் கொண்டு எப்போதும் இறைவனை நாடி தீய எண்ணங்கள் மனதில் புகாதவாறு மனதைக் கட்டுப்படுத்தி , வெள்ளை உள்ளத்தில் குடிக்கொண்டு அருள் புரியும் இறைவனுடைய கருணையைப் பெற்ற மாமுனியே நான் தவம் செய்வதற்கு சிறந்த இடம் எது என்பதை தன்னுடைய முன்னே சொல்ல வேண்டும் என்று வியாசமுனிவரிடம் கேட்கின்றார்.

அப்போது வியாச முனிவர் இந்த பரந்து விரிந்த இந்த உலகில் பரபிரம்மமாக இருக்கின்ற அந்த வைகுண்டரை நாடி புகழ்ந்து கொண்டாடி அவரை பணிந்து இந்த உலகம் தோன்றியது முதல் இப்போது நடைபெறும் கலியுக நிகழ்வு களையும் அடுத்த நிகழ இருக்கின்ற தர்ம யுக சிறப்பையும் எடுத்து கூறினார். வைகுண்டர் தவம் இருப்பதற்குரிய பூமியாகிய தெட்சிணா பூமியினுடைய சிறப்பையும் வைகுண்டருடைய பதம் பணிந்து எடுத்து கூறுகின்றார்.

## **வினா விடை** :

1. வேதமுனி என்பவர் யார்?
   வியாசர்

2. வெள்ளை ஆசனம் என்பதை எது?
   தூய உள்ளம்

3. வேதவியாசரின் தந்தையினுடைய பெயர் என்ன?
   பராசர முனிவர்

4. ஏன் வேத வியாசர் வேதங்களை தொகுத்தார் என்றுக் கூறப்படுகிறது? வேதவியாசர் முக்காலமும் உணர்ந்தவர் ஆகையால் வேதங்களை தொகுத்தார் என்றுக் கூறப்படுகிறது.

நடை

கலைமுனி வேதவியாசர் பிறப்புரைத்தல்
அய்யாவே வேத ஆதிநா ராயணரே
மெய்யா யுருவாய் விளங்குவோ னேகேளும்
பரராச மாமுனிவன் பாலனென முனிவன்
விரைவாக வேபிறந்து வெள்ளிமலை நாதனிடம்
தாதா வுடனே தான்வரக்கண் டீசுரரும்
வாராய் முனியே மதலையுனக் கிங்கேது
அப்போ முனியும் அரனடியைத் தான்பூண்டு
இப்போ திவ்வாண்டு இம்மாத மிந்நாளில்
பஞ்சகரு ணாதி பன்னிரண் டொன்பதுவும்
வஞ்சக மில்லாமல் வந்தா ரொருவீட்டில்
பூரண நாளும் பிரிந்துறையும் நேரமதும்
நாரணம் பிறந்த நல்ல நட்சேத்திரமும்
யோக பலன்கள் ஒத்திருக்கும் நேரமதும்
ஆகமக் கூட்டம் அடங்கிருக்கும் நேரமதும்
மதிசுழி போலாகி வந்துரத மேறுகையில்
துதிமுக வன்சர சோதி பிறந்ததன்றும்
இவ்வாறு கூட்டம் எல்லா மெழுந்தொருநாள்
அவ்வாறு தான்கண்ட அந்நா ழிகைதனிலே
துற்கந்த முலாவும் தோகையொரு பெண்ணிடமே
நற்கந் தமுலாவி நான்சேர்ந்தே னப்பொழுது
சேர்ந்த பொழுது திரண்டுநா தம்வளர்ந்து
காந்தற் றழுப்பாய்க் கன்னி யுடலாகிப்
பெற்றா ளிவனைப் பேரு வியாகரெனக்
கர்த்தா அறியக் கண்டே னிவன்தனையும்
ஆசு மதுரம் சித்திரம் விஸ்தாரமுதல்
வாசு நெறிதேசு வழியறிந்த மன்னவன்காண்
ஏகச் சுழிமுனையும் இகமுகி வாம்வரையும்
ஆக முடம்பறிவும் அண்டபிண் டத்தறிவும்
முன்பின் னாராய்ந்து மூதுண ராகமங்கள்

தன்னன் பிறப்பும் சாற்றத் திறவான்காண்
கல்லாத கல்வி கலைக்கியா னக்காண்டம்
எல்லா மறிந்த இயல்முனிவ னென்றுரைக்க
நல்லதுதா னென்று நன்முனிவனை ஈசர்
வல்லமையா மென்று மாமுனியைக் கொண்டாடி
என்பிறப்பு என்மாது இதுமுன் பிறப்புமுதல்
பின்பிறப்பு முதலாய்ப் பேசென்றா ரீசரும்

வேதவியாசர் முக்காலம் உரைத்தல்

அப்போது வேத வியாச ரகமகிழ்ந்து
செப்புகிறோ மென்று சிவனை மிகத்தொழுது
மூல முதலை முத்தி முகந்துகொண்டு
காலமே நின்ற கடவுளே தஞ்சமென்று
ஆதிமுத லந்தம் அடங்கல் மிகவுணர்ந்து
சோதி பதம்போற்றிச் சொல்லுவான் மாமுனியும்
மும்மூர்த்தி யான முதல்மூர்த்தி தோன்றியதும்
அம்மூர்த்தி தன்னில் ஆயிளையாள் தோன்றியதும்
சத்தியிலே நாதம் தான்தோன்றி வந்ததுவும்
வித்தியாய் நாதமதில் விந்துமிகத் தோன்றியதும்
விந்திலே விட்டிணுவும் விரைவாகத் தோன்றியதும்
அந்த முறைமுதலாய் அண்டபிண் டம்வரையும்
சொல்லி யுகமதுதான் தோன்றும்வகை கூறலுற்றான்
சல்லிக் கொடிய சண்டக் குறோணிமுதல்
நீசன் பிறப்புவரை நிகழ்த்தினான் மாமுனியும்
பாசனீ சன்வரைக்கும் பாருலக வாறதையும்
சொல்லி விரித்து சுத்தஏ ழாம்யுகந்தான்
நல்ல யுகமதுதான் நாடுவதுஞ் சொல்லிமிக
வல்ல யுகத்தில் வளரும் மனுவளமும்
எல்லாமே சொல்லி எற்றவை குண்டமுதல்
அந்நாட்டைச் சொல் ஒன்றுள் ளரசாளப்
பொன்னான நாரா யணர்ம கேந்திரனும்
நல்ல வைகுண்டம் நற்பிறவி யாய்வளர்ந்து
வல்ல கலியுகத்தில் வாய்த்ததெச்ச ணாபுவியில்
புதுமை மிகச்செய்து பொல்லாத வம்பர்கையால்
அடிகல் லெறிகள் அவர்பட் டம்புவியில்
குடிதாழ்ந்த பேர்க்காய்க் கோப மதையடக்கி

நல்லோர்க்காய்ப் பாடுபட்டு நல்லஉப தேசமதாய்ப்
பொல்லாரை மோட்ச புகழாகதவமிருக்க
பஞ்சகரு ணாதிகளைப் பம்மலாய்த் தானடத்திக்
கொஞ்சநா ளுங்கழித்து குதித்துதித் தேவளர்ந்து
ஆடவராய்ச் சமைந்து ஆண்பெண்போ லேயிருந்து
தேவ அறிவார்க்குத் திரவியம்போ லேயிருந்து
பச்சைக் குழந்தை பருவமுன் னாகியவர்
மெச்சக் கொடியாட்கு மேவும்பரு வம்போலும்
சுத்தக் கிழவரைப்போல் சூரப்பி ராயமுமாய்
மெத்தப் புலம்பி விழலும்பிரா யம்போலும்
நாலு பிராயம் நாளதுக்குள் ளேயெடுத்துக்
கோலு கையேந்திக் குன்னும்பிரா யம்போலும்
பார்க்கப் பிராயமுமாய்ப் படுக்கக் கிழவனுமாய்த்
தார்க்கத் திறவனுமாய்ச் சந்திக்கிசைந் தவனுமாய்க்
காக்கக் கருத்தனுமாய்க் கர்த்தனின் கர்த்தனுமாய்
ஏக்கத் திருத்தனுமாய் இவர்சமைந் திவ்வுகத்தில்
தர்மத்தால் கலியைத் தன்னந்தன்னால் கரைத்துக்
கர்மத்தை யீடழித்துக் காந்தக்கோ லுமெடுத்து
நேரோரைக் காத்து நிசமாக வேயெழுப்பி
ஏராரைக் கொன்று ஏழ்நரகத்தும் பூத்தி
உகத்துக் குகம்வழக்கு எல்லா மொருதலத்தில்
தொகுத்து நடுத்தீர்ப்புச் செய்து மிகத்தெளித்து
ஆகாத்த பேரை எல்லாம் நரகமதில்
வாகாகத் தள்ளி வாசல்தனைப் பூட்டிச்
சித்தத்துக் கேற்ற செடத்தோரைத் தானெழுப்பிப்
பத்தரைமாத் துற்றப் பைம்பொன்னிறப் பொற்பதியில்
சாகா வரங்கள் சனங்களுக் கேகொடுத்து
வாகாக நல்ல வரிசை மிகக்கொடுத்து
ஆண்பெண் ணுடனே அதிகவாழ் வுங்கொடுத்துக்
காணக் காணக்காட்சிக் கனமாய் மிகக்கொடுத்துச்
செல்ல வைகுண்டர் சீமையைம்பத் தாறதையும்
அல்ல லகற்றி அரசாள்வா ரீசுரரே
மும்மூர்த்தி யெல்லாம் ஒருமூர்த்தி யாயிருக்கும்
எம்மூர்த்தி யெல்லாம் இயல்மூர்த்தி போலிருக்கும்
வைகுண்டப் பெம்மான் வாய்த்தசெந் தூர்க்கடலில்
மைகொண்ட நாதன் வந்து பிறப்பதுதான்
வளர்ந்துதவம் செய்வதுவும் வாய்த்தபுவி தெச்சணமே

குழந்தை வைகுண்டர் குமாரப் பிராயமட்டும்
கோலா கலனாய்க் குருவாய்ச் சமையுமட்டும்
நாலாஞ் சொரூபம் நடத்தும்வரை தெச்சணமே
பொல்லாதெல் லாமழிந்து பூவர்கொலு வாகுமட்டும்
எல்லா வழக்கும் இருப்புந்தெச்ச ணாபதயே

விருத்தம்

ஆதியி லுதித்த வாறும் அரன்சிவன் பிறவி வாறும்
ஓதிய யுகங்கள் வாறும் ஒவ்வொரு அசுரன் வாறும்
நீதிய மனுக்கள் வாறும் நீதமாங் குண்டர் வாறும்
தீதிலாத் தர்ம ஞாயச் சிறப்புட வாறுஞ் சொன்னான்

**விளக்கம்:**

ஒரு சமயம் பராச மாமுனிக்கு ரிசி கர்ப்பம் இராத் தங்காது என்பதற்கு இணங்க மிக விரைவாக ஒரு பாலன் பிறந்தான். அவன் தன் தந்தையுடன் வெள்ளிமலை நாதனாகிய சிவபெருமானிடம் திருவடி தொழுது நின்றான். அப்போது இதனை பார்த்த சிவபெருமான் மாமுனியே உனக்கு இந்த குழந்தை எப்படி கிடைத்தது என கேட்டார். அதற்கு அவர் அந்த குழந்தையின் பெயர் வியாசர் என்றும் அவர் முக்காலங்களையும் அறிந்து கொள்ளும் சக்தி வாய்ந்த ஞானி என்றும் கூறினார். மேலும் வியாசருடைய பிறப்பு எவ்வாறு அமைந்து என்பதை அங்கே சிவபெருமானிடம் எடுத்து உரைக்கின்றார் பராசரமாமுனிவர்.

எப்படி என்றால், பராசர முனிவர் மகா தவசி . அவர் தன் தந்தை சக்தியைக் கொன்று தின்ற இராஷசனையும் அவனைச் சார்ந்த ஏனைய அசுரர்களையும் தான் செய்த யாகத்தால் அழித்தார். அதன் பின்னர் யமுனையைக் கடைந்து செல்ல ஓடத்திற்காகக் காத்திருந்தார். அப்போது பேரழகியான ஒரு கன்னிப்பெண் அந்த கங்கை கரையில் ஓடத்தை ஓட்டி வந்தாள். அவர் ஒரு சாபத்தினால் மீனுருக்கொண்டு யமுனை கரையில் வாழ்ந்த ஒரு அப்சரஸ் பெண்ணுக்கும் உபரிசுரவசு என்பானுக்கும் புத்திரியாக பிறந்தாள். அதன் பிறகு தாசராசன் என்ற செம்படவத் தலைவனால் எடுத்து வளர்க்கப்பட்டவள்.

பேரழகியான அவள் மீன் வயிற்றில் பிறந்த காரணத்தினால் மீன்வாடை வீசும் உடலுடையவர்களாக இருந்தாள். எனவே அவளுக்கு மச்சகந்தி என்னும் காரணப் பெயரும் உண்டு. அவளுடைய ஓடத்தில் பராசரர் ஏறினார். வேறு யாரும் இல்லை. எனவே அப்பெண் ஓடத்திற்கு வேண்டிய பாரத்திற்காக இன்னும் சிலர் வரட்டும் என்று காத்திருந்தாள். பராசரர் அவளிடம் என்னுடைய தவ சக்தியால் உன்னுடைய ஓடத்திற்கு தேவையான பாரத்தை நான் தருகிறேன். நீ பயமின்றி ஓடத்தை ஓட்டுவாயாக என்றார். அவளும் ஓடத்தை செலுத்தினாள். அச்சமயம் பராசரர் ஓடத்தில் இருந்தப் படியே பஞ்சேந்திரியங்களையும் ஒடுக்கித் தியானத்தில் ஆழ்ந்தார்.

இதனைப் பார்த்த அந்த பெண், சுவாமி! ஏன் இவ்விதம் கவலையாக இருக்கிறீர்கள் என வினவினாள். அதற்கு அவர் யோக பலன்கள் ஒத்திருக்கும் இந்த நேரத்தில் என் தவ வலிமையால் ஒரு குழந்தை பிறந்தால் அது முக்காலங்களையும் உணரும் மகா ஞானியாக இருக்கும். உலக நன்மை கருதி அவ்விதம் ஒரு மகா ஞானியை உருவாக்க நான் பல காலமாக தவசி இருக்கிறேன். அதற்கு ஏற்ற காலமும் நேரமும் இதுவே. ஆனால் என் தவ ஒளியை ஏற்று அம் மகனை பெற்றுத்தர இப்பொழுது இந்த இடத்தில் ஒரு பெண் இல்லையே என்பதை என்னுடைய இந்த நிலைக்கு காரணம் என்றார். உடனே அவள் என்னால் தங்களுக்கு உதவ முடியுமானால் நான் உதவி செய்வேன்.

ஆனால் மச்ச வாடை வீசும் நான் அதற்கு தகுதி உடையவளாக இல்லை என்று வருந்தினாள். அவர் அவளிடம் நீ இதற்கு உடன்பட்டால் என்னுடைய தவ சித்தியால் உன் உடலில் வீசும் துர்கந்தத்தை மாற்றி என்றும் பரிமள கந்தம் வீச செய்வதோடு உன் கன்னித்தன்மையும் மாறாது இருக்க வரமருள்வேன் என்றார். இதனை கேட்டு அவள் மகிழ்ச்சியுடன் அவருடைய நற்கருமும் நிறைவேற உடன்பட்டாள். அவர் அவளுக்குத் தன் தவ ஒளியைத் தாங்கி ஒரு குழந்தையை பெற அருளினார்.

உடனே அந்த இடத்தில் விஷ்ணு அம்சத்தில் கையில் மாத்திரைக் கோலுடன் கமண்டலத்துடன் வியாச முனிவர் உதயமானார். மச்ச கன்னி அன்று முதல் பரிமள கந்தியாகிக் கன்னித்தன்மை மாறாமல் வாழ்ந்து, பின்னர் சத்தியவதி என்னும் நாமத்துடன் சந்தனு மகாராஜாவுக்கு மனைவியாகி, கௌரவ பாண்டவர்களின் மூதாதையர்களுக்கு தாயானாள். இவ்வாறு உதயமானவர் வியாசர்

என்பதை ஈசரிடம் பராசர முனிவர் கூறினார். மேலும் அவருடையச் சிறப்பு என்னவென்றால் முக்காலத்தையும் உணர்ந்து கூறும் வல்லமை உடையவர் என்பதையும் கூறினார்.

வியாச பிறந்த அந்த தருணம் எப்படி இருந்தது என்பதையும் எடுத்துக் கூறுகின்றார், எப்படி என்றால் பஞ்ச கருணாதி பன்னிரெண்டு ஒன்பதவும் ஒன்றாக ஒரே நேரத்தில் ஒன்று சேருகின்ற அந்த நேரத்தில், பூரண நாளும் பிதிர்ந்துறையும் நேரமதும், நாரணர் பிறந்த நல் நட்சேத்திரமதுவும், யோக பலன்கள் ஒத்து இருக்கும் நேரமதில் ஆகமக் கூட்டம் அடங்கி இருக்கும் நேரமதும், மதி சுழி போலாகி வந்து ரதம் ஏறுகையில், துதிமுகன் சரஸ்வதி பிறந்த தினநாள் என்றும், அவ்வாறு கண்ட அந்த நாழிகை தன்னில் முக்கந்த முல்லாவும் தோகை ஒரு பெண்ணுடனே நற்கந்தமுலாவி நான் சேர்ந்தேன் அப்பொழுது, இவ்வாறு நான் சேர்ந்த பொழுது திரண்டு நாதம் வளர்ந்து, காந்தற் தழுப்பாய் கன்னி உடலாகி பெற்றாள் இவனை பெயர் வியாகர் எல்லோரும் அறிய அங்கு எடுத்துக் கூறினார்.

மேலும் ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் முதல் வாசு நெறி தேசு வழி அறிந்த மன்னவன் தான் என்றும், ஏகச் சுழி முனையும்,இகமுகிவரம்வரையும், ஆக உடம்பறிவும், அண்ட பிண்டத்தறிவும் முன்பின் ஆராய்ந்து மூதுணர் ஆகமங்கள் ஆராய்ந்து கூறும் வல்லமை உடையவன் என்று கூறினார். மேலும் கல்லாத கல்வி கலைக்கையான காண்டம் எல்லாம் அறிந்த இயல் முனிவன் என்று உரைத்தார். உடனே சிவபெருமான் அந்த வியாச முனிவரிடம் என் பிறப்பும் என் மாது இது முன் பிறப்பு முதலாய் பின் பிறப்பு முதலாய் பேசு என்று எடுத்துக் கூறினார்.

உடனே வியாச முனைவர் சிவனாரின் திருவடியைத் தொழுது, முதலில் ஏதும் ஒரு பரமாக இருந்ததும், அதிலிருந்து ஓங்காரம் வெளிப்பட்டதுவும், அதிலிருந்து சத்து வளைந்ததும், சத்தில் சிவனும், சிவத்தில் சக்தியும், சக்தியில் நாதம் தோன்றியதும், நாதத்தில் விஷ்ணு தோன்றியதும், அதன் பிறகு ருத்திரன், மயேஷ்வரன் தோன்றியதும், அதன் பிறகு அண்ட பிண்டங்கள் தோன்றியதும், புவனசராசரங்கள் தோன்றியதும், பிண்டத்தில் குறோணி முதலாய் கலிநீசன் வரையினான அசுரர்கள் தோன்றியதும், அவ்வசுர சக்திகளை முறியடி வேரில்லாமல் முழுதும் அழித்து நரகத்தில்

தள்ளிவிட்டு, நல்ல யுகமான தர்மயுகத்தை ஒரு சொல் ஒரு குடைக்குள் வைகுண்டர் ஆள்வதும் தெளிவாக சொன்னார்.

பொன்னான நாராயணருக்கு நல்ல வைகுண்டம் நற்பிறவியாய் வளர்ந்து கலியுகத்தில் தெட்சணதில் பள்ளிக்கொண்டு இருந்து புதுமைகள் செய்தததுவும், பொல்லாத வம்பர் கையால் அடிகள் மற்றும் கல்லெறிகள் பட்டு, குடி தாழ்ந்த பேருக்காய் அதாவது சான்றோர் மக்களுக்காக கோபத்தை அடக்கி நல்லவர்களுக்காகப் பாடுபட்டு பஞ்சகர்ணாதிகளை எல்லாம் பம்மலாய் நடத்தி எந்தவித அற்புதமும் காட்டாமல் பொறுமையாக இருந்த செய்தியையும் எடுத்து கூறினார்.

## **வினா விடை** :

1. வேதவியாசர் முக்காலமும் அறிந்து கொள்வதற்கு காரணமாக அமைந்த நிகழ்வு எது?
பராசர முனிவர் பஞ்சகர்ணாதிகள் எல்லாம் ஒரே நேர்கோட்டில் வருகின்ற போது வியாசரைப் பெற்றெடுத்தார். அந்த குழந்தை முக்காலமும் உணர்ந்த குழந்தையாக இருந்த காரணத்தினால் வேதங்களை தொகுக்கும் தன்மையை வேதவியாசர் பெற்றார்.

2. வியாசர் பிறந்தது போல் பஞ்சகருணாதிகள் ஒத்திருக்கின்ற போது பிறந்தவர்கள் யார் யார்?
நாராயணர், கணபதி, சரஸ்வதி

3. வியாசர் பெற்றிருந்த அறிவு ஞானம் எவை எவை?
ஆசுமதுரம் சித்திரம் வித்தாரம் முதல் வாசுநெறி, தேசுவழி, ஏகச் சுழிமுனையும், யுக முடிவும், உடம்பு அறிவும், அண்ட பிண்டத்து அறிவும், முன்பின் ஆராய்ந்த மூதுணர் ஆகமங்கள் தன்னின் பிறப்பும், கல்லாத கல்வி கலைக்கியான காண்டம் எல்லாம் அறிந்தவர் ஆவார்.

4. வியாசருடைய முக்கால அறிவையும் சோதிக்கும் விதமாக சிவபெருமான் கூறியது யாது?
சிவ பெருமானுடைய பிறப்பையும், அம்மை உமையவள் பிறப்பையும், யுகத்தோற்றத்தையும் எடுத்துக்கூறி யுகாயுகங்கள் தோறும் அசுரர்கள் தோற்றத்தை யும் நாராயண மூர்த்தி யின்

அவதாரத்தையும் கலியுகத்தில் வைகுண்ட அவதாரம் எடுத்து கலி அழிப்பதையும் எடுத்துக் கூறினார்.

5. வைகுண்ட அவதாரத்தினுடைய நோக்கம் எது என்று வியாசர் கூறினார்?. நல்லோர்கள் ஆகிய சான்றோர் மக்களை தேர்ந்தெடுத்து தர்மயுக வாழ்வு கொடுப்பதும் தீயவர்களை அழித்து நரகில் தள்ளுவதும் ஆகும்.

6. வைகுண்டர் ஒரு நாளைக்குள் எத்தனை பிராயம் எடுப்பதாக கூறினார்.?
நாலு பிராயம்

7. வைகுண்டர் ஒரு நாளில் எடுக்கக்கூடிய நாலு பிராயங்கள் எவை எவை?
பச்சை குழந்தை பருவமும் மிச்ச கொடியாளுக்கு மேவும் பருவமும் சுத்த கிழவனாகவும் , மெத்த புலம்பி உழலும் பிராயம்

8. வைகுண்டர் யாருக்கு நல்வாழ்வு அளிப்பதாக கூறப்படுகிறது?
நேரோரை காத்து நிஜமாகவே எழுப்பி சித்தத்துக்கு ஏற்ற ஜடத்தோரை எழுப்பி சாகாவரங்கள் சனங்களுக்கு கொடுக்க படுவதாகக் கூறப்படுகிறது.

தெச்சணாபூமி வளம்

நடை

இவ்வாறு எல்லாம் எடுத்துமிக மாமுனிவன்
அவ்வாறெல் லாமுரைத்து அகன்றனன்காண் மாமுனிவன்
துதிகொடு தன்னால் சிவகோ வேங்கிரியில்
பதியச் சிவமும் பதியென்றா ரன்போரே
நந்தீ சுரரும் நாட்டினா ரவ்வுரையை
இந்தப் பழமொழிபோல் இசைந்தப் புவிமகிமை
தெச்சணா பூமி சிவபூமி நல்லதுதான்
மிச்சம் வியாகர் முன்மொழிந்த துவுமிது
ஆனதா லிப்பூமி ஆகுந் தவசிருக்க
கோனாங் குமரி குடியிருக்கு மிந்நகரு
சங்குத் துறைமுகத்து சதாகோடி யற்புதங்கள்
எங்கு மகிழ இயல்புபெற்ற திந்நகரு

மங்கைப் பதிநகரு மணவைப் பதிநகரு
கங்கைக் குலநகரு கண்ணாளர் தன்னகரு
பஞ்சவர்க ளஞ்சு பார்மன்னர் தன்னகரு
சஞ்சீவி தன்னகரு தவத்தோர்க் குருநகரு
தெய்வகுல மன்னர் சிறந்தக் குருநகரு
சைவ முனிமார் தவத்துக் கிதுநகரு
மேலோகக் காட்சி விளங்கிருக்கு மிந்நகரு
சாலோக சாமி சார்ந்திருக்கு மிந்நகரு
அரம்பை ஸ்திரீமார் ஆராடுஞ் சுனைநகரு
பரம்பெரிய சேடன் பவிசுக் குருநகரு
வாவி யுறைநகரு வைகைக் குருநகரு
வாவிக் குலாவும் சந்தப்பட்சி தன்னகரு
சொல்லளி தல்லகாண் தெச்சணா பூமிவளம்
நல்லதிந்த நாடு நமக்குகந்த நன்னாடு
பசுவும் புலியும் பாவித்திருந் தநகரு
கசுவு மெந்நேரம் கரைபுரளும் நன்னாடு
அந்நாடு நாடு அரனாட்டுக் கொப்பிடலாம்
பொன்னாடு நாடு புரந்தரநாட் டுக்கீடாம்
தவம்பெற்றோர் வாழ்ந்த தண்மைக் குருநாடு
பவமற்றோ ராகி பாவித்த தின்னாடு
நல்ல மலைவளரும் நாஞ்சி வளநாடு
சொல்லுருசி யானச் சிறந்த குருநாடு
ஒருநாடு மிந்நாட்டுக் கொவ்வாது வுத்தமரே
திருநாடு ஈசர் தினமுறையும் நன்னாடு
தீராவினையைத் தீர்த்தறுக்கு மின்னாடு
நீராளமான நிராதன மின்னாடு
சம்பத்துக் கேற்ற சகல குருநாடு
இன்பம் வளரும் இசைந்த குருநாடு
ஆதி யொருமுனிவன் அடவில் தவசிருக்க
நீதி யறியவென்று நிலமலனுந் தேவியுமாய்
கற்றாவுங் கன்றதுபோல் கறைக்கண்டர் வேசமிட்டுப்
பற்றாண்மை பார்க்கப் பாரில் மிகமேய்ந்து
அந்த முனியடுக்கல் அன்றிராப் போயடைந்தார்
சிந்த னருளால் சீறி யொருகடுவாய்
பசுவையுங் கன்றதையும் பார்த்து மனமகிழ்ந்து
இசுவாகவே வந்தீர் இரையாய் நமக்கெனவே
என்று கடுவாய் இயல்பசுவின் கன்றதையும்

தின்றுவிட வென்று சென்றுப் பிடித்திடவே
அப்போ பசுவும் அந்த முனியடுக்கல்
இப்போ தென்கன்றை இந்தக்கடு வாய்பிடிக்கு
மாமுனியே நீயும் வந்தொரு சத்தமிட்டால்
தாம்பயந்து கடுவாய் தன்னா லொதுங்கிவிடும்
வந்துசொல் லாதாலும் மாமுனியே யிங்கிருந்து
உந்தித் தொனியால் ஒருசத்தங் கூறினையால்
என்பிள்ளை யென்றனக்கு இப்போ துதவுமென்றார்
உன்னுள்ள முமேற்று உடையோன் பதம்பெறுவாய்
என்று பசுவும் ஈதுரைக்க மாமுனியும்
ஒன்றுமுரை யாடாது உள்ளங் கவிழ்ந்திருந்தான்
கடுவாயுங் கன்றைக் கயிலையங் கிரிதனிலே
வெடுவாகக் கொண்டு விட்டதுகா ணம்மானை
பசுவும் வனமறைந்து பார்முனிவன் காணாமல்
விசுவாச மாக மேலோகஞ் சேர்ந்ததுவே
பின்னுஞ்சில நாள்கழித்துப் பேர்முனிவன் சிந்தையிலே
முன்னும் பசுமுறையால் முகுந்தன்பதங் காணாமல்
இத்தோசங் கழிக்க இன்னுஞ்சில நாள்வரையும்
சித்தத்தோ டொத்தத் தெச்சணா பூமியிலே
இரந்து குடித்து இத்தவ மேபுரிந்தால்
பரந்தணியும் வேதன் பதமடைய லாமெனவே
உத்தரித்து மாமுனிவன் ஒருநொடியி லேயிறங்கித்
திர்ப்தியுட னேகித் தெச்சணா பூமிவந்தான்
வந்து இரந்து வருசமொன் றானதின்பின்
முந்துநின்ற காவில் உவந்து தவசுநின்று
பரமன் பாதாரப் பவிசு மிகவடைந்து
வரமருளப் பேறுபெற்று வாழ்ந்திருந் தானம்மானை
அப்படியே தோசம் அகன்று அறம்வளரும்
உற்பனம்போ லொத்த உகந்ததெச்ச ணாபதியே

விருத்தம்

தெச்சணா புரியி னீதம் செப்பிடத் தொலையா தையா
மிச்சமாம் புவியி தாகும் மேவலர்க் குகந்த நாடு
பச்சமால் மகனே நீரும் பண்ணுறத் தவசு ஏறும்
அச்சமும் வாரா தையா என்றடிமிசைப் பணிந்து நின்றான்

நல்லது தானே யென்று நாரணர் தயவு கூர்ந்து
வெல்லமர் மணவை வாரி மேன்முக மதிலே நின்று
அல்லல்நோய் பிணிகட் கெல்லாம் அறமதால் தண்ணீர்தன்னால்
தொல்லைநோய்த் தீர்ப்போ மென்று தெச்சணா புவியில் வந்தார்

வந்தவர் தலமும் பார்த்து வழியி னற்குலமும் பார்த்துச்
சந்தமாய் மகிழ்ச்சை கூர்ந்து சாமியும் முனியைப் பார்த்து
இந்தமா நகரில் வாழும் இராசனு மறிய வென்றே
விந்தையா யறிவு வொன்று விதித்தெழுதி யனுப்பு மென்றார்

**விளக்கம்:**

தெட்சணா பூமியில் தவமாக இருக்கின்ற போது தன்னை நாடி வருகின்ற மக்களுக்கு பல அற்புதங்களை எல்லாம் செய்து அவர்களுக்கு இறை நம்பிக்கை உருவாகும்படி செய்து அந்த ஆத்மாக்களை தன்னோடு ஐக்கிய படுத்திக் கொள்ளுகின்றார். மேலும் தன்னை எப்படி நினைக்கின்றார்களோ அவர் அதற்கு ஏற்றவாறு காட்சி கொடுக்கின்றார் எப்படி என்றால் ஆண்டவராக சமைந்து ஆண் பெண் போலே இருந்து தேடாதையார்க்கு திரவியம் போல அதான் இறைவன் பரப்பிரம புருஷன் பரப்பிரம்மாவாக ஆடவராக இருக்கின்றார்.

மேலும் ஆண் பெண் போலவும் காட்சிக் கொடுக்கின்றார். அதாவது ஒவ்வொரு ஜீவாத் மக்களுக்குள்ளும் இறைவன் ஜோதி சொரூமாக இருந்து ஜீவாத்மாக்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்றார். அப்படி இருக்கின்ற அந்த இறைவன் அந்த ஜீவாத்மாக்களை வழிநடத்தி தன்னோடு ஐக்கிய படுத்தி கொள்ளுகின்றார். ஒவ்வொரு ஜீவராசிகளுக்குள்ளும் ஜீவனாக இருக்கும் போது பெண்ணாகவும், கலி அழிக்கப்பட்டு பரம புருஷன் ஆகிய பரமாத்மாவோடு சேருகின்றப்போது ஆணாகவும் இருந்து தன்னோடு ஐக்கிய ப்படுத்திக் கொள்ளுகின்ற அந்த நிலையை இங்கே எடுத்து சொல்லுகின்றார். இவ்வாறு ஒவ்வொரு ஜீவாத்மாக்களும் இறைவனை அடைவதற்கு தன்னை ஒரு ஜீவாத்மா போலவும் ஒரு பரமாத்மாவாகவும் அவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்றவாறு காட்சிக் கொடுக்கின்றார்.

மேலும் "தேட அறிவா ர்க்கு திரவியம் போல இருந்து" எப்படி என்றால், இந்த உலக இன்பங்கள் தான் முக்கியம் என்று அதைத் தேடி ஓடுபவர்கள் மீண்டும் மீண்டும் பிறவி பிணியில் சிக்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இந்த உலக இன்பம் நிரந்தரம் ஆனது அல்ல நிரந்தரமான இன்பம் என்பது பரமாத்மாவோடு நாம் ஐக்கியமாகுகின்ற நிலை என்பதை உணர்ந்த மக்களுக்கு, அதைப் பெரும் பாக்கியம் என்று எண்ணுகின்ற மக்களுக்கு திரவியமாக காட்சி கொடுக்கிறார். அதுமட்டுமல்ல பச்சை குழந்தை பருவம் முன் ஆகியவர் என்றுக் கூறி இருப்பதின் மூலம் எந்த வித கபட குணங்களும் இல்லாமல் அப்பழுக்கற்ற எண்ணத்தோடு இருப்பவர்கள் சிறு குழந்தைகள்.

அப்படிப்பட்ட அந்த தூய உள்ளதோடு இருப்பவர்களுக்கு அங்கே ஒரு உண்மையான நிலையில் இருந்து காட்சிக் கொடுத்து அவர்களையும் தன்னோடு ஐயிக்கப்படுத்துகின்றார். மெச்சக் கொடியாளுக்கு மேவும் பருவம் போலும் என்றுக் கூறியிருப்பதன் மூலம் வாலிப வயதை எட்டியவர்களுடைய எண்ணங்கள் எல்லாம் எந்த நிலையிலே இருக்குமோ அப்படிப்பட்ட நிலையில் இருந்து தன்னை அடைய வேண்டும் என்று எண்ணுகின்றவர்களுக்கு அந்த நிலையிலே இருந்து காட்சி கொடுக்கின்றார். மேலும் சுத்த கிழவரை போலும் சூரப்பிராயம் போலும் காட்சி கொடுக்கின்றார். வயோதிக நிலையிலிருந்து இறைவனை அடைய வேண்டும் என்று நினைக்கின்றவர்களுக்கு அந்த வயோதிக நிலையிலிருந்து அவர்களுக்கு கட்சி கொடுத்து அவர்களையும் தன்னோடு ஐக்கியப்படுத்துகின்றார்.

இவ்வாறு யார் யார் தன்னை எந்த நிலையில் இருந்து நாடுகிறார்களோ அந்த நிலையில் இறைவன் அவர்களுக்கு காட்சிக் கொடுக்கின்றார். ஒரு நாளதுக்குள்ளே பலவிதமான சொரூபங்களை எடுத்து, அதாவது குழந்தையாகவும் வாலிப பருவமாகவும் வயோதிக பருவமாகவும் விடலை பருவம் வயோதிக பருவம் வாலிப பருவம் என்று பல பருவங்களை ஒரு நாளுக்குள் எடுத்துகின்றார்.

ஒரு வயோதிக பருவநிலையிலும் பார்க்க இளைஞர்களை போன்று ஒரு பிராயமாக இருக்கின்ற நிலையையும், படுக்கின்ற போது ஒரு வயோதிக பருவத்தில் இருக்கின்ற வயதான முதிய நிலையையும்,

தார்க்கத் திறவனுமாய் ஒரு நல்ல திடமான திடகாத்திரமான மனிதன் எப்படி தன்னுடைய வேலைகளைச் செய்கின்ற போது திடகாத்திரமாக செயல் படுகின்றாரோ அதுபோலவும், பல பேர் முன்னிலையில் ஒரு செயலை செய்கின்ற போது அவர்கள் எல்லோரும் அந்த செயலை விரும்புகின்ற வண்ணம் அதை ஏற்றுக்கொள்ளுகின்ற வண்ணம், அங்கே சந்திக்கு இசைந்தவனாகவும் காக்க **கர்த்த**னா**கவும்,** ஆபத்து நேரத்தில் மக்களை ஆபத்திலிருந்து காத்தருள்பவனாகவும், ஒரு நிலையான எண்ணத்திற்குள் இருப்பவர் முன்பு உறுதி உள்ளவர்களாகவும், மக்களிடையே முன்னிலையில் ஒரு மனிதனாக இருந்தாலும் இறைவனைப் போன்று எண்ணுபவர்களுக்கு இறைவனைப் போன்று காட்சிப்கொடுத்தும், ஏகத்திருத்தனமாக எங்கும் நிறைந்து ஏகமயமாக இருந்து எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலே இவர் இந்த உலகிலே சமைந்திருக்கின்றார் என்று கூறுகின்றார்.

மேலும் தர்மத்தால் கலியை தன்னந்தன்னாலே கரைப்பதற்கும், தர்ம சிந்தனையால் கலியென்ற அந்த மாய்கையை மக்களுடைய மனதை விட்டு அகற்வதற்குரிய வழிகளை எல்லாம் மக்களுக்குச் சொல்லிக் கொடுத்து அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுகின்றார். மேலும் நல்லோரை காத்து நிஜமாக ஆன்ம விழிப்பு பெறச் செய்து தேர்ந்து எடுப்பேன் என்றும், சான்றோர் குல மக்களாகிய நல்ல மக்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தர்மயுக வாழ்வை கொடுப்பதற்காகவும் தீய எண்ணமுடைய பொல்லாத நீசர்களை எல்லாம் அழித்து ஏழு நரகம் பூத்தி இந்த கலியுகத்தினுடைய வழக்குகளை எல்லாம் அறுத்து நடுத் தீர்ப்பு செய்வார்.

இவ்வாறு தீயவருக்கு நடுத்தீர்ப்பை அளித்து, ஆகாத பேரையெல்லாம் நரகத்தில் தள்ளி நரகவாசலை பூட்டி அடைத்து விடுவார் என்றும் அவருடைய சித்தத்திற்கு அதாவது, அவருடைய மனதிற்கு ஏற்றவாறு நடந்து கொண்டிருக்கின்ற நல்ல குல சான்றோர் மக்களை எல்லாம் ஜடத்தோடே தான் எழுப்பி பத்தரை மாத்து உற்ற பைம்பொன் நிற பொன்பதியில் அவர்களுக்கு வாழ்வு அருளியும், சாகா வரங்களாகிய இறப்பு பிறப்பில்லாத பேரின்ப வாழ்வாகிய அந்த பரமாத்மாவோடு ஐக்கியமாகி இருக்கின்ற அந்த வரங்களை மக்களுக்கு கொடுத்து அருள் புரிவார்.

மேலும் உலகில் என்ன என்ன சிறப்புகள் எல்லாம் இருக்கின்றதோ அத்தனை சிறப்புகளையும் சான்றோர் குல மக்களுக்கு கொடுத்து ஆண் பெண்ணுடனே அதிக வாழ்வு கொடுத்து என்று காணக் கண்காட்சி அதிகமாக மக்களுக்கு கொடுத்தும், இந்த உலகை அதாவது ஐம்பத்து ஆறு சீமையையும் ஒரு சொல்லுக்குள் ஆள்வார் வைகுண்டர். மேலும் இந்த உலகில் இருக்கின்ற அத்தனை துன்பங்களை துயரங்களை எல்லாம் மாற்றி ஒரு குடைக்குள் அரசு ஆள்வார். மும்மூர்த்தி எல்லாம் ஒரு மூர்த்தியாகி எம்மூர்த்திக்குள்ளும் முதல் மூர்த்தியாக அதாவது கலியுகத்தில் எல்லா தெய்வீக சக்திகளும் வைகுண்டருக்குள்ளே அடக்கம், அவர் இன்றி வேறு எந்த சக்திகளும் தனித்து இயங்க முடியாது என்ற ஒரு நிலையிலே வைகுண்ட பொம்மன் திருச்செந்தூரில் அவதரித்து வந்திருக்கின்றார்.

அவர் தெட்சணா பூமியிலிருந்து ஆறு ஆண்டுகள் தவம் செய்த பிற்பாடு எல்லாம் அவர் நினைத்தது போதே நடைபெறும். ஆகவே வைகுண்டர் பலவித கோலங்களை எடுத்து கோலாக்கலனாய் தானே எல்லோருக்கும் குருவாகவும் எல்லோருக்கும் அறிவு காட்டுகின்ற ஞான ஒளி கொடுக்கின்ற ஜோதி சொரூபனாகவும் பலவாறு சூட்சமங்களை எல்லாம் நடத்தி பொல்லாததெல்லாம் அழித்து நல்லோருக்கு வாழ்வு கொடுப்பதற்காக தெட்சணாபூமியில் வந்து இருக்கின்றார். அவருடைய தவம் நிறைவேறிய பிறகு அவர் நினைத்ததை படி எல்லாம் நடக்கும் என்று வைகுண்டருடைய சிறப்பையும் அவதார நோக்கத்தினை எடுத்து சொல்லுகின்றார்.

வியாச முனிவர் ஆதியில் உலகம் தோன்றியதிலிருந்து அதன் பிறகு பர பிரம்மத்திலிருந்து இறை சக்திகள் பல நாமங்களோடு பிரிந்து, அதர்மத்தை அளித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காக அவதரித்த செய்தியையும், யுகா யுகங்கள் தோறும் அசுரர்கள் தோன்றிய செய்தியையும், அந்த அசுரர்களை அழிப்பதற்காக இறைவன் அதற்கு ஏற்றவாறு அவதாரம் மேற்கொண்டு நல்ல மக்களை பாதுகாத்து அவர்களுக்கு நல்வாழ்வு அருள்வதற்காக யுகா யுகங்கள் தோறும் அவதாரம் எடுத்த செய்திகளையும், இப்போது கலியகத்தில் கலியை அழித்து தர்மத்தை நிலை நாட்டி சான்றோர் குல மக்களை பாதுகாத்து தர்மயுக வாழ்வளிப்பதற்காக வைகுண்ட அவதாரம் நிகழ்ந்திருக்கின்ற செய்தியையும் எடுத்து கூறினார்.

வியாச முனிவர் கூறிய செய்திகளை சிவபெருமான் நந்தீஸ்வரரை அழைத்து நீங்கள் இதைக் கையிலைல் சில கோவேங்கிரியில் பதித்து வையுங்கள் என்று சொல்லுகின்றார். அதன்படி நந்தீஸ்வரரும் வியாசர் கூறிய முக்கால செய்திகளையும் அங்கே கைலையில் எழுதி வைக்கின்றார். அவ்வாறு எழுதி வைத்துவிட்டு வைகுண்ட தவம் இருப்பதற்குரிய சிறந்த பூமி எது என்று வியாச முனிவரிடம் கேட்க வியாச முனிவர் தவம் இருப்பதற்கு சிறந்த பூமி தெட்சணபூமி என்று எடுத்துரைக்கின்றார்.

ஏன் தெட்சிணா பூமியை தவம் இருப்பதற்குரிய சிறந்த பூமி என்றும் அதனுடைய சிறப்பு என்ன என்ன என்பதையும் எடுத்துக் கூறுகின்றார். எப்படி என்றால் கோனாங் குமரி என்றுச் சொல்லக் கூடிய கன்னியாகுமரி பகவதி தேவி குடியிருக்க கூடிய நகரு இந்த தெட்சிணாபூமி ஆகும். சங்கு துறைமுகத்தையுடைய பூமி மற்றும் அற்புதமான கடல் விளை பொருட்கள் எல்லாம் அதிகமாக கிடைக்கின்ற பூமி இந்த தெட்சணா பூமி ஆகும். சதாகோடி அற்புதங்கள் எங்கும் மகிழ இயல்பு பெற்ற பூமியாக தெட்சணா பூமி விளங்குகிறது .

இறை சக்திகளும் இயற்கை வளங்களும் நிறைந்த பூமி எந்த தெட்சணா பூமியாகும் கங்கைக் குலநகர் கண்ணாளர் தன்னகரு ஆகும். மேலும் பஞ்ச பாண்டவர்கள் வாழ்ந்த பூமி இந்த தெட்சணா பூமி ஆகும். சஞ்சீவி என்று சொல்லக்கூடிய இறந்தோரை எழுப்புகின்ற சாகா மருந்தாகிய மூலிகை வளரக்கூடிய சூழ்நிலையை பெற்ற பூமி தெட்சணாம பூமி ஆகும். தவமிருந்து இறைவனை அடைய வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள் தவத்தை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு அருள்புரிகின்ற பூமி இந்த தெட்சணா பூமி ஆகும்.

தெய்வகுல மன்னவர்கள் சிறந்து விளங்குகின்ற பூமி இந்த தெட்சணா பூமி ஆகும். சைவம் முனிமார்கள் தவமிருந்து தவத்தை நிறைவேற்றிய பூமி இந்த பூமி. மேலோகத்தில் எப்படி காட்சிகள் சிறப்பாக இருக்கின்றதோ அத்தகைய காட்சிகள் தெட்சணத்திலும் விளங்கி இருக்கின்றது . இந்த தெட்சிணாபூமியின் உடைய அழகு மேலோகத்திற்கு ஒத்ததாக இருக்கிறது. சாலோக சாமி சாந்திருக்கின்ற பூமி இந்த தெட்சணா பூமி ஆகும். அரம்பை ஸ்ரீமார்கள் ஆராடுகின்ற பூமி இந்த தெட்சிணா பூமி ஆகும்.

சேடன் என்று சொல்லக்கூடிய கடலரசன் உறைந்து இருக்கக்கூடிய பூமி இந்த தெட்சணா பூமி. நீர்நிலைகள் நிறைந்த பூமி தெட்சணா பூமி ஆகும். சந்தமிகு பட்சிகள் எல்லாம் சிறப்பாக ஒன்றோடு ஒன்று கூடி குலாவி இருக்கக்கூடிய பூமி இந்த தெட்சணா பூமி ஆகும். இந்த தெட்சணா பூமியினுடைய சிறப்பை எடுத்துச் சொல்வது என்பது இயலாத காரியமாகும். நான்கு நில (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்) அமைப்புகளையும் இயற்கை வளங்களையும் கொண்ட பூமி ஆகும். மேலும் பசுவும் புலியும் வந்து பாவித்து இருக்கக்கூடிய பூமி ஆகும். இந்த தெட்சணா பூமியில் எப்போதும் நீர் ஊற்று கசிந்து ஓடிக் கொண்டே இருக்கும்.இதனால் மக்களுக்கு நீர் பற்றாக்குறை இல்லாமல் அருளக்கூடிய பூமி இந்த தெட்சணா பூமி ஆகும்.

இந்த தெட்சிணா பூமியினுடைய சிறப்பானது மேலோகத்திற்கு ஒப்பிடலாம். மேலும் தவம் பெற்ற பொன்னாடு ஆகும். இதை புரந்தர நாட்டாகிய மேலோகத்திற்கு இது ஈடாக இருக்கிறது. தவம் பெற்றவர்கள் வாழ்ந்த தன்மை பொருந்திய பூமி இந்த தெட்சணா பூமி ஆகும். மேலும் எந்தவித பாவ வினைகளும் இல்லாமல் பாவம் அற்றவர்கள் வாழுகின்ற பூமி இந்த தெட்சணா பூமி ஆகும். நல்ல மழை வளம் தரக்கூடிய நாஞ்சில் வள நாடு ஆகும்.

சிவப்பெருமான் உறைந்திருக்கின்ற கையிலைக்கு ஒப்பானதாக தெட்சணா பூமி சொல்லப்படுகின்றது. மேலும் தீராத வினையை தீர்க்கக் கூடிய தன்மை பெற்ற பூமி இந்த தெட்சணா பூமி ஆகும். நீராமான நீராதன நாடு இந்த தெட்சணா பூமி. இன்பம் வளரும் இசைந்த குருநாடு ஆகும். ஆதியில் ஒரு சமயம் காட்டில் ஒரு முனிவன் தவம் செய்து கொண்டிருந்தான். அப்போது அந்த முனிவருடைய தவத்தை அறிய வேண்டும் அவனுடைய தவத்தின் வலிமையை சோதிப்பதற்காக சிவபெருமானும் பார்வதி தேவியும் ஒரு பசுவாகவும் கன்றாகவும் வடிவெடுத்து வந்தார்கள். அப்போது அந்த முனிவரிடம் பசுவாகிய சிவபெருமான் சென்று முனிவரே! என்னுடைய கன்றை கடுவாய் பிடிப்பதற்காக வருகின்றது. ஆகவே என்னுடைய கன்றை காப்பாற்றுங்கள் என்று கூறினார்.

அப்போது அந்த முனிவர் எந்தவித அசைவும் என்று அப்படியே இருந்தார். உடனே அந்த முனிவரிடம் மேலும் அந்த பசுவாகிய சிவ பெருமான் கூறுகின்றார் ,ஏ முனிவரே! நீ இங்கிருந்து எழும்பி வராவிட்டாலும் பரவாயில்லை இங்கிருந்து உரத்த குரலில் ஒரு சத்தமிட்டால் கூட போதும் அந்த கடுவாய் ஆனது என்னுடைய

கன்றை விட்டுவிடும் என்னுடைய கன்றை காப்பாற்றுவதற்கு இந்த ஒரு உதவியும் எனக்கு செய்வாயாக என்றுக் கூறினார். ஆனால் தவநிலையில் இருந்த அந்த முனிவரானவர் எதுவும் பேசாமல் தன்னுடைய தவத்தில் அப்படியே அவரை ஆழ்ந்திருந்தார்.

உடனே கடுவாயானது அந்த கன்றை பிடித்துக் கொண்டு சென்றுவிட்டது. கடுவாயாக வந்திருந்த எமன் கன்றாகிய அம்மை உமையவளைப் பிடித்து சென்று கையிலையில் கொண்டு விட்டது. அப்போது அங்கே பசுவாக உரு கொண்டு இருந்த சிவபெருமான் அந்த முனிவரின் முன்பு காட்சிக் கொடுத்து, முனிவரே உன்னுடைய தவத்தின் வலிமையை சோதிப்பதற்காக வேண்டி இங்கே நாங்கள் மாற்றுரு கொண்டு பசு மற்றும் கன்றாக வந்தோம்.

சிவபெருமான் அந்த முனிவரிடம் என் முனிவரே ஒரு உயிரை காப்பாற்றுவதை விட தவம் செய்வது என்பது உயர்வானது அல்ல. ஒரு உயிரை காப்பாற்றுவது தவத்தை விடவும் மேலானது. இதை உனக்கு உணர்த்துவதற்காக வேண்டி நாங்கள் இவ்வாறு அதனை சோதித்தோம். ஆகையால் உன்னுடைய தவம் இப்போது குளறிவிட்டது .இந்த தவத்தினுடைய குறையை நிறைவு செய்ய வேண்டும் என்றால் சிறிது காலம் இந்த தெட்சணா பூமிக்கு சென்று அங்கே பிச்சை எடுத்து உண்டு குடித்து வாழ்ந்து வர வேண்டும். ஒரு வருட காலம் இந்த நிலையில் நீ வாழ்ந்து வருகின்ற போது இப்போது இந்த தவம் குளறுபடி ஆன நிலை சரியாகிவிடும் . ஆகவே அங்கு சென்று வாழ்ந்து வா என்று தெட்சணா பூமிக்கு அனுப்பி வைக்கின்றார். இத்தகைய பெருமை மிகுந்த பூமி தெட்சணா பூமி ஆகும்.

இத்தகைய சிறப்பு பொருந்திய பூமி தெட்சணா பூமியாகும். தெட்சணா பூமியினுடைய சிறப்பை சொல்லி அந்த முனிவரை அங்கே அனுப்பி வைக்கின்றார்கள். இவ்வாறு எப்படிப்பட்ட தோஷங்கள் இருந்தாலும் அந்த தோஷங்கள் அகல வேண்டும் என்றால் தெட்சணாபூமிக்கு சென்றாலே போதும். பாவனைகள் தீர வேண்டுமென்றாலும் அந்த பாவ வினைகளை அறுக்கும் தன்மை உடையதாகவும் தோஷங்கள் அகன்று சிறப்பு பெறுகின்ற பூமியாகவும் தெட்சணா பூமி விளங்குகின்றது. இவ்வாறு தெட்சணா பூமியினுடைய சிறப்பை யாராலும் செப்பிட துலையாது என்று கூறுகின்றார்.

மேலும் இந்த தெட்சிணா பூமி என்பது மேவலர் ஆகிய மேலோகத்தார்கள் தனக்கு உகந்த நாடாக இருக்கின்றது. ஆகவே வைகுண்டரிடம் நீ இந்த இடத்தில் சென்று தவம் இருந்தாயானால் உன்னுடைய தவம் வந்து சிறப்பாக நிறைவேற்றப்படும் என்றும், அங்கே எந்த விதமான அச்சமும் துன்பமோ தவம் நிறைவேறுகிற வரையிலும் வராது. ஆகவே தெட்சணா பூமிக்கு சென்று தவத்தை நிறைவேற்றுவாயாக என்றுப் பணிந்து நிற்கின்றார்.

தெட்சிணா பூமியில் செயல் படுவது போல் மனுநீதம், ராஜநீதம், தேவநீதம் மூன்று நீதங்கள் சிறப்பாக செயல்படுவது வேறு எங்கும் இல்லை. இவ்வாறு சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கின்ற தெட்சிணா பூமியினுடைய சிறப்பை எடுத்து சொல்வது என்பது இயலாத காரியம். மேலும் மேவலர்குகந்த நாடு ஆகும். ஜீவ முக்தி அடைய வேண்டும் பிறவி பிணியில் இருந்து விடுபட வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு ஏற்ற இடமாக இந்த தெட்சணா பூமி திகழுகின்றது. ஆகவே இந்த இடத்தில் இப்போ சென்றிருந்து பச்சைமால் மகனே அதாவது நாராயணருடைய மகனாகிய வைகுண்டமே நீர் பண்ணுகின்ற தவசு என்பது எந்த வித இடரும் இல்லாமல் நிறைவேற்றுவதற்கு உகந்த பூமியாக இது இருக்கிறது என்று அந்த வியாகர முனிவர் சொல்லி அவருடைய பாதத்தை பணிந்து நின்றார்.

இவ்வாறு வியாகர முனிவர் கூறியதை கேட்டு மகிழ்ந்த வைகுண்டர், சீவர்களின் மீது கொண்ட பரம கருணையினால், பரபிரம்மமாக இருந்து மக்களுக்கு ஜீவமுக்தி அருளுவதற்காகவும், தன் அறக்கருணையால் தண்ணீர் மண்ணால் சஞ்சல நோய் பிணிகளை எல்லாம் தீர்த்து தர்மத்தால் முத்தி அருள்வதற்குகாகவும் பிறவிப்பிணியிலிருந்து விடுவிப்போம் என்று நல்வாக்கு அருளியவாறு தெட்சணம் நோக்கி எழுந்தருளினார். தெட்சணத்தில் வந்து தவம் இருப்பதற்கு சிறந்த இடம் எது என்பதை தேர்ந்து எடுத்து ,அங்கு வாழுகின்ற மக்களினுடைய சிறப்பையும் கண்டு மகிழுந்த வைகுண்டர் முனிவரைப் பார்த்துக் கூறுகின்றார்.

இப்போது இந்த மாநகரில் வாழும் ராஜன் அறிய வென்று அதாவது இந்த உலகை ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மன்னவன் அறியும்படியாக அறிவு ஒன்று எழுதி அனுப்ப வேண்டும் என்று ஒரு திருவாசகம் எழுத பணிகின்றார். அதாவது திருவிதாங்கூர் சமஸ்தானத்தை ஆட்சி புரிந்து கொண்டிருக்கின்ற அந்த கலிநீச

மன்னன் அறியும் படியாக இந்த நிரூபத்தை எழுத வேண்டும் என்றுக் கூறுகின்றார். அதன்படி திருவாசகம் எழுதப்படுகின்றது.

**வினா விடை** :

1. வைகுண்டர் எங்கிருந்து தன்னுடைய நாலு வகையான சொரூபத்தையும் நடத்திக் காட்டுவதாக கூறுகின்றார்?
தெட்சணத்தில்

2. வைகுண்டர் வியாசரிடம் தவம் இருப்பதற்கு உகந்த பூமி எது என்று கேட்டதற்கு வியாசர்புரிய பதில் யாது?
தெட்சணா பூமி சிறந்தது என்று கூறினார்.

3. தெட்சணாபூமி தவம் இருப்பதற்கு சிறந்ததாக இருப்பதற்குரிய காரணம் யாது?
தெட்சணாப் பூமியின் இயற்கை அமைப்பும் அங்கு இருக்கக்கூடிய கால சூழ்நிலைகளும் இறையருளும்

4. தெட்சணாப்பூமியில் வந்து தவம் செய்து தவத்தை நிறைவேற்றியவர்கள் யார்?
அர்ச்சுனன், பராசர முனிவர், சைவ முனிமார்கள் மேலும் பலர்.

5. தெட்சணாபூமி எந்த நாட்டிற்கு இணையாக சொல்லப்படுகிறது?
அரநாடு ஆகிய கயிலைக்கு இணையாக சொல்லப்படுகின்றது.

6. தெட்சிணா பூமியின் சிறப்பு என்ன ?
எதிர் எதிர் குணம் கொண்டவர்கள் ஒன்றாக இருக்கும் சிறப்பு தெட்சணாப் பூமியில் இருக்கின்றது.

7. தெட்சிணா பூமியில் ஒற்றுமையாக பாவித்து இருந்தது எது?
பசுவும் புலியும்

8. தெட்சிணா பூமியின் இயற்கை வளம் எவ்வாறு இருக்கிறது?
எந்நேரமும் கசுவாகிய நீரூற்று பெருக்கெடுத்து ஓடுகின்ற விதத்தில் இருக்கின்றது.

9. பாவ வினைகள் தீருவதற்கு ஏற்ற பூமி எது?
தெட்சணா பூமி

10. தீராத வினையை தீர்த்து வைக்கக்கூடிய பூமி எது?
தெட்சனா பூமி

11. பாரம்பரிய சேடன் பாவித்து இருக்கக்கூடிய பூமி எது?
தெட்சணா பூமி

12. திருநாடு ஈசர் தினம் உறையும் நகர் என்று சொல்லப்படுகின்ற பூமி யாது?
தெட்சணா பூமி

13. நீராளமான நிராதபமான நாடு யாது?
தெட்சணா பூமி

14. இன்பம் வளருகின்ற பூமி எது?
தெட்சணா பூமி

15. சிவபெருமானும் பார்வதி தேவியும் முனிவருடைய தவத்தை பார்ப்பதற்காக எவ்வாறு சென்றனர்?
பசுவாகவும் கன்றாகவும்

16. முனிவர் தவம் இருக்கும் தலத்தில் கடுவாயாக வந்து கன்றை பிடித்துக் கொண்டு சென்றவர் யார்?
எமன்

17. கடுவாயாக வந்த எமன் கன்றை பிடித்துக் எங்கு கொண்டு விட்டார்?
கயிலையங் கிரியில்

18. தவ நிலையில் இருந்த முனிவரை சோதிப்பதற்காக கடுவாயும் கன்றுமாக சென்ற சிவபெருமான் உணர்த்திய நீதி யாது?
தவ நிலையில் இருந்தாலும் உயிரை காப்பாற்றுவதை விட தவம் பெரிதானது இல்லை என்பது ஆகும்.

19. தவம் குளறுபடியான அந்த முனிவருடைய தவத்தை நிறைவேற்றுவதற்கு சிவபெருமான் சொன்ன உபாயம் யாது?
தெட்சணா பூமியில் சென்று சில காலம் இரந்து குடித்து தவத்தை நிறைவேற்ற வேண்டும் என்றுக் கூறினார்.

**திருவாசகம் - 3**

வாலராமச்சந்திர சூரிய நாராயணர் தாமே
வைகுண்டமாய்த் தோன்றி, தர்மம் நித்திச்சு,
காணிக்கை கைக்கூலி காவடி என்றே
திருச்சம்பதி முதல் வேண்ட அவசியமில்லையென்று
நிறுத்தலாக்கியே, உகஞ்சோதித்து ஒரு குடைக்குள்ளான
ஆயிரத்தெட் டாமாண்டு மாசியில்
கடற்கரையாண்டி நாராயணம் பண்டாரமென நாமமுங்கூறி,
எளிய கோலமெனப் பாவிச்சு தெச்சணம்
பள்ளிகொண்டிருந்து, தர்மமாகத் தாரணி யாபேர்க்கும்
தண்ணீ ரினாலே சஞ்சலநோய் கர்மம் வற்மம்
வாதை கோதை பயங்களையும் பிறவி
நாசமும் பொய்வினை சஞ்சாரமும்,
பீடை கோடை வாடை தீர்க்கவும்,
பிள்ளையில்லாத பேர்க்குப் பிள்ளை கொடுக்கவும்,
கண்ணில்லாதபேர்க்குக் கண் கொடுக்கவும்,
தனமில்லாத பேர்க்குத் தனங்கொடுக்கவும்,
சாம்பசதாசிவ சாமி மூவரும்
சற்குணமாகியே தன்னாலொரு வேசமாகிச் சமைந்து,
சாதி உயர்கொண்ட சத்திமாதர் வழியிலே
சகலகுண நாராயண தீரசம்பன்னர் சாதி
வைகுண்டமாய்ப் பிறந்திருக்கிறார்,
இனி நன்றாய்த் தெரியுமே.
ஆனதினால் பூமியிலே அடிபிடி அநியாயம்
இறை தெண்டம் கைக்கூலி அவகடம் பொய்ப்புரட்டு
அவர் செவியில் கேட்க வொண்ணாதென்றும்,
மகாகோடி தர்ம பாக்கியசாலியாய்ப் பூமியிலே
அதிகப் பாசமாய் விரித்து அவரருகிற் சூழ
அலங்கார தர்மமணியாய் நிறுத்தி அந்தரவீடு
லாடந்திறந்து அதன்வழி அரனடனம் திருநடனம்
ஆடல்பாடல் அங்ஙனே கண்ணோக்கி சகலதும்
பார்த்தாராய்ந்து இருப்பதால் அவரவர் நினைவிலிருக்கிற
தெல்லாம் அவருக்குத் தெரியாம லிருக்கிறதல்லவே
அதுகண்டு பதறி ஆரானாலும் அவரிட்டிருக்கிற
சட்டம்போல் நடந்து கொள்வாராகவும்.
அங்ஙனே நடக்கிலென்னு வருகில் அவர்
நிச்சித்திருக்கிற தேதியில் நடக்கும் படியேவரும்

அன்பாகிய மனுக்களுக்கு அனுகூலம்
1008 ஆமாண்டு மாசியில் தெச்சணம்
பள்ளிகொண்ட அய்யா நாராயண அய்யா வைகுண்டமாய்
தர்மம் நித்திச்சு எழுதின அறிவென்று
மாமுனி எழுதி அவனியறியும்படி அயச்சான்.
ஆயிது வல்லாமல் அய்யா நாராயண அய்யா
தர்மம் நித்திச்சுத் தவசிருக்கிற படியினாலே,
இன்றுமுதல் அவர் நிச்சித்திருக்கிற நாள்வரையும்
பூசை புனக்காரம் சேவித்தல் அர்ச்சனை
ஆராடு நீராடு தீபரணை சாந்தி
காளாஞ்சி கைவிளக்குக் காவடி காணிக்கை
தெருமுகூர்த்தம் கோபுரமுகூர்த்தம் திருநாள் முகூர்த்தம்
தேரோட்ட முகூர்த்தம் திருக்கொடி முகூர்த்தம்
கொடிமர முகூர்த்தம் குருமுகூர்த்தம் குரவை
குளாங்கூட்டம் கொலுவாரபாரம் ஆயுதம் அம்பு
அச்சுநடை ஆனைநடை அலங்காரம் மஞ்சணைக்
குளிநீராடல் இதுமுதலுள்ள நன்மை சுபசோபனம்
வரையும் அவர்க்கானதல்லவே, ஆனதினால் நீங்கள்
இதுவெல்லாம் இதுநாளைக்ககம் வீணில் செலவிடாமலும்
விறுதாவில் நரகில் விழாமலுமிருக்கக்
கடவுளிது நாராயண வைகுண்டசாமி
திருவாக்குபதேசக் கருணையினால் மாமுனி எழுதி
அயச்ச வாசகம் என்று எவரும் அறியவும்

விருத்தம்

என்றிந்த விவர மெல்லாம் எழுதியே உலகில் விட்டு
நன்றிந்த ஆழ்ச்சை வெள்ளி நற்கதி ருதிக்கும் வேளை
பண்டிந்த மூலந் தன்னில் பஞ்சமி நேரந் தன்னே
குண்டத்தின் அரசு கோமான குவலய மதிலே வந்தார்

**விளக்கம்:**

மேற்படி விவரங்களை எல்லாம் எழுதி உலகறிய செய்துவிட்டு வெள்ளிக்கிழமை அதிகாலை சூரியன் உதயத்தில் வளர்பிறை பஞ்சமி திதியில் வைகுண்டத்தின் அதிபதியான மகாபார நாராயணரே நல்ல வைகுண்டமாய் மணவைப் பதியில் எழுந்தருளினார். இவ்வாறு தேவர்களும் மூவர்களும் ஆரவாரத்துடன் வந்து பார்த்து நிற்க வீரநாராயணர் மெய்ஞானம் மிகுந்த தெட்சணத்தில் மாமருந்து என்று சொல்லக்கூடிய மாமர சோலையிலே மாமரத்தின் அடியில் மணவை பதிமுகமாகிய மெய்ஞானம் பொருந்துகின்ற மாது கன்னி அம்மை பகவதியாள் வீற்றிருக்கின்ற புண்ணிய பூமியில் அர்ஜுனன் பாசுபரம் பெறுவதற்காக சிவனை நோக்கி தவம் இருந்த தாமரைப்பதில் பள்ளிகொண்டார் என்று தேவர்கள் எல்லோரும் முழங்கி குரவையிட , எட்டு திசையும் வைகுண்டர் அவதாரம் எடுத்து தெட்சணத்தில் வந்து பள்ளிகொண்டார் என்றச் செய்தி உலகமெல்லாம் பறந்திடவே, மும்மூர்த்திகளும் அதிசயமாக ஞானநிலையில் இருந்து ஆரபாரத்துடனே வந்து பார்த்து நின்றார்கள்.

வைகுண்டநாதன் தெட்சணத்தில் பள்ளிக் கொண்டார் என்றச் செய்தி உலகமெல்லாம் பரந்திடும் படியாக வைகுண்டர் சொரூபம் ஒன்றை எடுத்தார். அதன்படி வைகுண்டர் அவதாரம் எடுத்து தெட்சணத்தில் வந்து இருந்த செய்தி உலகமெல்லாம் எட்டு திசையும் பரவியது..

நடை

நாதன் குருநாதன் நாரா யணநாதன்
மாதவனுந் தெச்சணத்தில் மாமருந்து மாவடியில்
மணவைப் பதிமுகத்தில் மாதுகன்னிப் பார்வையிலும்
இணையானப் பஞ்சவரில் ஏற்ற அரிச்சுனனும்
மணமான நாதன் மகாபரனைத் தானாடி
வணங்குந் தவத்தால் வந்ததா மரைப்பதியில்
தெச்சணா மூலை தென்வாரி யற்றமதில்
மிச்சமுள்ள தேவர் முழங்கிக் குரவையிடத்
தேவர் திசையெட்டும் செயசெய எனநெருங்க

மூவ ரதிசயமாய் மோடுவழி தாள்திறந்து
ஆரபா ரத்துடனே அவர்கள்வந்து பார்த்துநிற்க
வீரநா ராயணரும் வித்தாரத் தெச்சணத்தில்
பள்ளிகொண்டா ரென்று நாமம் பரந்திடவே
துள்ளியே சொரூபம் சுற்றினா ரம்மானை
வைகுண்ட மென்று மனுவோ ரறிந்திடவே
மெய்கொண்ட நாதன் மேவிநின்றார் தெச்சணத்தில்
யாம மிகக்கூறி அதிகத்திசை எட்டிலுள்ள
ஓமப் பசாசுகளை ஒதுங்கவுப தேசித்தார்
மேல்நடப்பை யெல்லாம் வித்தார நாரணரும்
தூல்நடப் பாகத் துறந்துதுறந் தேபடித்தார்
கண்டவர்க ளெல்லாம் கருத்தோ டறியாமல்
வண்டப் புலப்பமென வாக்குரைத் தேபோனார்
பத்துமா தம்வரையும் பார்நடப் புள்ளதையும்
முற்று மொருகுடைக்குள் உலகாள்வ தும்படித்தார்
எல்லா நடப்பும் இவர்படித்த தின்பிறகு
வல்லாண்மை யான வைகுண்டப் பெம்மானும்
உகஞ்சோ திக்க உற்றார்கா ணம்மானை
தவமே தவமெனவே தானிருந்து வையகத்தில்
பொறுதி சதமாய்ப் புண்ணியனார் தானிருந்து
உறுதியுட னையா உகஞ்சோ திக்கலுற்றார்
நாரா யணரும் நல்லவை குண்டமெனப்
பேரா னதுநிறைந்து புண்ணியனார் தெச்சணத்தில்
மனுநிறமாய் வந்து மனுவைச்சோ தித்தெடுக்கத்
தனுவை யடக்கித் தவசிருக்கா ரம்மானை

**விளக்கம்:**

இவ்வாறு தெட்சணத்தில் பள்ளி கொண்ட வைகுண்டர் முதல் காரியமாக இந்த உலகில் இருக்கின்ற பசாசுகளை எல்லாம் எரிக்க வேண்டும் என்று மனதில் எண்ணினார். மேலும் அசுர சக்திகளாகிய கலிமாய எண்ணங்களையும் மக்களுடைய மனதிலிருந்து அகற்ற வேண்டும் என்று எண்ணினார். அதன்படி தன்னை நாடி வந்த மக்களிடம் ஓமப் பசாசுகளையும்,கலிமாய எண்ணங்களையும் ஒதுக்க வேண்டிய முறைகளை எல்லாம் உபதேசமாகக் கூறினார். மேலும் அடுத்து நடக்க இருக்கும் உலக நடப்புகளை எல்லாம் சொல்லி ஒவ்வொன்றாக பாடிக்கொண்டே இருந்தார்.

இவ்வாறு வெளிப்படையாக ஒளிவு மறைவு இன்றி கலியுகம் அழியும் செய்திகளை எல்லாம் எடுத்துக் கூறிக் கொண்டே இருந்தார். ஆனால் அவர் கூறுவதை யாரும் மனதில் ஏற்றுக் கொள்ளாமல் ஏதோ வண்ட புலப்பமாக புலம்புகிறார் என்று கூறினார்கள். இவ்வாறு பத்து மாத காலமாக இந்த உலகில் நடக்கக்கூடிய நடப்புகளை எல்லாம் எடுத்துக்கூறினார். அதன் பின் வைகுண்ட மே ஒரு குடைக்குள் இந்த உலகை ஆள்வதையும் எடுத்து கூறினார்.

பத்து ஆண்டு காலமாக பார் நடப்புகளை எல்லாம் எடுத்து கூறிய வைகுண்டர், அடுத்ததாக தந்தையாகிய நாராயண மூர்த்தி சொன்ன உபதேசத்தின் படி ஆறு ஆண்டு கால தவத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணுகின்றார். அதன்படி இந்த வைகுண்டர் யுகம் சோதிக்க வேண்டும் என்று மனதில் எண்ணினார். மேலும் தவம் இருப்பதற்குரிய வழிகளையும் செயல் படுத்த எண்ணினார். அதன்படி மனுநிறமாக வந்து மனுவை சோதித்து எடுக்க தனுவை அடக்கி தவமிருந்தார். அதாவது இந்த உலகில் மனுசொரூபத்திலேயே கலியும் இறை சக்தியும் இருக்கின்றது. ஆகவே மக்களுக்கு இறை ஞானத்தை புகட்டுகின்ற பொருட்டாக தன்னை ஒரு மனுசொரூபமாக இந்த உலகில் அவதாரம் எடுத்து வந்திருக்கின்றார். வைகுண்டர் மனுக்களைச் சோதித்து நல்லோர்களை தேர்ந்து எடுப்பதற்காகவும் தெட்சணம் எழுந்தருளியிருக்கின்றார் என்பதை மக்கள் உணரும்படியாக செய்கின்றார்.

ஸ்ரீமத் நாராயணரே நல்ல வைகுண்டரென தெட்சணம் எழுந்தருளி தன் இயல்பான ஒளி உடலை தன் மாயையால் மறைத்து விட்டு மக்களை சோதித்து எடுப்பதற்காக மனநிறம் காட்டி தவசி இருந்தார். மேலும் மனு நிறம் காட்டியது மக்களை உய்விப்பதற்காகவே அன்றி வேறு எந்த காரணத்திற்கும் இல்லை என்பதை உணர வேண்டும். இறைவன் தன்னை மனிதனாக காட்சியளிப்பது என்பது அவன் நம் மீது கொண்ட கருணையின் விளைவு ஆகும். அவர் நம் முன்னே விஸ்வரூப தரிசனம் தந்தால் அதை தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி மனோபாலம் நம்மிடமில்லை. அதனாலேயே பகவான் இவ்வுலகில் அவ்வப்போது நம் இயல்புக்கு தக்கவாறு மனித வடிவில் வந்து லீலைகள் புரிகின்றார்.

அவன் மனித வடிவில் வரும்போது தான் நாம் அவன் மீது அன்பு காட்டி வழிபட இயலும். ஆனால் அந்த வடிவத்தை பார்த்து இவனும் மனிதன் தானே என்று என்னை அலட்சியம் செய்து விடக்கூடாது. அவருடைய அசாதாரண சக்தியை உணர்ந்து கொள்ளாமல் விட்டுவிடக்கூடாது. பக்தர்களுக்கு அருள வேண்டிய சந்தர்ப்பம் நேரமும் வரும்போது அந்த மகாசக்தி ஆழிப்பேரலை போன்று தன்னைத்தானே வெளிப்படுத்தி அருள் புரிகின்றார்.

மனித பிறப்பின் மகத்துவத்தை வெளிப்படுத்தவும் தன் பக்தர்களை மகிழ்விப்பதற்காக பகவான் தன் அவதாரத்தின் போது மனு சொரூபம் காட்டுகின்றார். மேலும் அழிவற்றதும் ஈடு இல்லாததுமான இறைவனுடைய பரமபத சொரூபத்தை அறியாதவர்கள் அறிவிலைகளாவார்கள். என்னுடைய மேன்மையை அறியாமல் மனித உருவில் உள்ளவன் என்று என்னை அவமதிக்கிறார்கள் என்று பகவான் கீதையில் கூறுகிறார். இறைவனின் அவதாரம் பற்றி சந்தேகம் கொள்ளும் இரு புத்தி உடையோர் அவரது லீலைகளால் உண்டாகும் ஆனந்த ஆனந்தத்தை அனுபவிக்கும் பெரிய பேறினை இழந்தவர்கள் ஆவார்கள். இங்கு மக்களிடம் இருக்கும் மாய்கையை அழித்து இறைஞானத்தை உணரவைப்பதர்காகவே மனு சொரூபம் எடுத்துள்ளார்.

நாராயணரே வைகுண்டமாக இந்த உலகில் இருக்கின்ற மக்களை எல்லாம் ஜீவ நிலையில் இருந்து உயர்த்தி பரப்பிரம்மத்தோடு ஐக்கிய ப்படுத்துகின்ற அந்த நிலையை உணர செய்வதற்காக தாமே மனித ரூபம் கொண்டு இந்த உலகில் வந்தார். அவ்வாறு மனித ரூபம் கொண்டு வந்தவர் தான் மக்களின் மீது உள்ள கருணையால் அவர்களே போன்றே வடிவத்தை காட்டி அவ் வடிவத்தின் பின் நின்று பிறவிப்பிணியை அறுக்க திருவுளம் கொண்டார். அவர் காட்டிய அந்த மனித வடிவிலும் கூட ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு கடந்து தன்னுடைய ஆன்மா இருபத்து ஐந்தாவது தத்துவமான ஜீவநிலையை கடந்து பரமாத்மாவோடு ஐக்கியமாகுகின்ற நற்பேறு அருளவே மனு சொரூபம் எடுத்து இருக்கின்றார்.

அதாவது பஞ்சபூத சக்திகளால் உருவாக்கப்பட்ட இந்த உடலானது மண், நீர், நெருப்பு ,காற்று, ஆகாயம் அந்த ஐந்தும், மெய்,வாய் கண், மூக்கு, செவி என்ற ஞானந்திரங்கள் ஐந்தும், சத்தம், ஸ்பரிசம்,ரூபம், ரசம் கந்தம் என்ற தன் மாத்திரைகள் ஐந்தும், வாக்கு, பாதம், பாணி,

பாயுரு, உபத்தம் என்ற கர்மேந்திரங்கள் ஐந்தும் ,மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்று அந்த கரணங்கள் நான்கும் ஆன்ம தத்துவங்களாம். பிரகிருதியிருந்து தோன்றுகின்ற இந்த ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும் கொண்டது உயிர். இது சத்வ, ராஜோ, தமோ என முக்குணங்களை உடையது.

இருபத்து நான்கு தத்துவ நிலையைத் தாண்டி இருபத்து ஐந்தாவது தத்துவமான கர்மவினைகள் எதுவும் நெருங்காத பெருநிலையில் உள்ள சுத்த ஆன்மாவை தான் என உணர்தலே தன்னை அறிதலாகும். அதற்கு மேல் வாக்கும் மனமும் நெருங்காத பரம்பொருள் நிலை. இந்த நிலையை தான் பகவான் வைகுண்டரின் உண்மையான அவதார நிலை என்பதை நாம் உணர வேண்டும். இவ்வாறு இருபத்து நான்கு தத்துவங்களையும் கடந்து இருபத்து ஐந்தாவது நிலையை ஒவ்வொரு ஜீவாத்மா களும் அடைவதற்காக வேண்டி இங்கே மனு அவதாரம் எடுத்து இந்த கலியுகத்தில் நாம் எப்படி வாழ்ந்தால் இந்த உன்னதமான பேரின்ப நிலையை அடைய முடியும் என்பதை நமக்கு ஞான உபதேசமாக தந்திருக்கிறார்.

அய்யா கூறிய ஞான உபதேசத்தைப் பின்பற்றி நாம் வாழும் போது நம்மை கர்ம வினையிலிருந்து விடுபடச் செய்து பேரின்ப வாழ்வை அருளுவதற்காகவே நாராயண மூர்த்தியே திருச்செந்தூர் திருப்பாற்கடல் மகரத்துள் இருந்து வைகுண்டம் என அவதாரம் எடுத்திருக்கின்றார்.

முப்பொருளும் ஒரு பொருளாக அவதாரம் எடுத்திருக்கின்ற அய்யா வைகுண்டர், இந்த நாட்டில் இருக்கின்ற கலிமாய்கை என்ற இருளை அகற்றுவதற்காகவும், அந்த கலிமாய இருளில் அகப்பட்டு இருக்கும் மக்களை துன்ப கடலிலிருந்து விடுவிக்க வேண்டியும் ஆறு ஆண்டுகால தவங்களை நிறைவேற்றி இதற்கு முந்தைய அவதாரங்களின் போது எப்படி அசுரர்களை எல்லாம் வதம் செய்து அழித்து அந்த யுக தர்மத்தை நிலைநாட்டினாரோ அதைவிட எல்லாவற்றையும் விட முதன்மையானதாக இந்த கலியை அழித்து மக்களுக்கு என்றும் சாகாத பேரின்ப வாழ்வை அருள்வதற்காக வேண்டி எல்லாவற்றுக்கும் தலைவனாக பரபிரம்மாக வைகுண்ட இங்கே அவதாரம் எடுத்திருக்கின்றார்.

முப்பெரும் ஒரு பொருளாய் வந்திருக்கின்ற வைகுண்டர் சான்றோர் மக்களை தற்காத்து அவர்களுக்கு தர்மக வாழ்வு அருள வேண்டும்

என்ற நோக்கில் தான் ஆறாண்டு கால தவத்தை மேற்கொள்வதற்கு தயாரானார். அப்படி தவம் இருக்கின்ற போது தன்னுடைய நினைவெல்லாம் ஒரே நினைவில் பரபிரம்ம நிலையில் வைத்து சாதி வேற்றுமைகளை களைந்து இந்த உடலில் இருக்கின்ற உணர்வுகளை எல்லாம் கடந்து ஆன்ம விடுதலை பெற வேண்டும் என்று ஆன்மா விடுதலை பெறுவதற்குரிய வழிகளை மக்களுக்கு காட்டுவதற்காகவும் தன் நிலைக்கு மக்களை உயர்த்த வேண்டும் என்பதற்காகவும், ஆணவம், கன்மம்,மாயை அழுக்குகளை நீக்கி , கருணை மனதில் நினைவாக கொண்டு ஆதி பராபரத்தின் கருணையை அனைத்துயிர்களும் பெற வேண்டும் என்பதை நினைத்து வைகுண்டர் தவம் புரிவதற்கு தயாரானார்.

## **வினா விடை** :

1. 1008 ஆம் ஆண்டு மாசியில் கடற்கரை ஆண்டி பண்டாரமாக வந்தவர் யார்?
   அய்யா நாராயணமூர்த்தி

2. வால இராமச்சந்திர சூரிய நாராயணர் என்பவர் யார்?
   நாராயண மூர்த்தி

3. வால இராமச்சந்திர சூரிய நாராயணர் வைகுண்டமாக அவதாரம் எடுத்த பிறகு நிறுத்தல் செய்ததை எவை?
   காணிக்கை, கைக்கூலி, காவடி ஆராட்டு, நீராட்டு, கை விளக்கு, பூசை,புனக்காரம், சேவித்தல், சுற்றல், அர்ச்சனை, தீபரணை, சாந்தி, காளாஞ்சி, கைவிளக்கு காவடி காணிக்கை, திருமுகூர்த்தம் கோபுரம் முகூர்த்தம், திருநாள் முகூர்த்தம், தேரோட்டம் முகூர்த்தம், திருக்கொடி முகூர்த்தம், குரு முகூர்த்தம் குரவை முகூர்த்தம், குலாம் கூட்டம், கொலு ஆரவாரம் ஆயுதம், அம்பு, அச்சு நடை, ஆனை நடை, அலங்காரம் மஞ்சனை குழி நீராடல் முதலியன.

4. அய்யா நாராயணமூர்த்தி வைகுண்ட அவதாரம் எடுத்த பிற்பாடு முந்தைய அவதார வழிபாட்டு முறைகளை ஏன் வேண்டாம் என்று கூறினார்?
   வைகுண்ட அவதாரத்தில் தர்மத்தால் கலியை அழிக்க வந்திருக்கின்ற காரணத்தினால் முந்தைய வழிபாட்டு முறைகள் தேவை இல்லை என்றுக் கூறினார்.

5. இந்த கலியுகத்தில் முந்தைய வழிபாட்டு முறைகள் தேவை இல்லை என்று கூறி இருக்கின்றார் அப்படி இருக்க நாம் அதை பின்பற்றினால் கலி அழிக்க முடியுமா?
முடியாது

6. கலியுகத்தில் வைகுண்ட பண்டார கோலமாக அவதாரம் எடுத்திருப்பதனுடைய நோக்கம் என்ன?
இந்த உலகில் உள்ள மக்களினுடைய சஞ்சலன் நோய் கர்மம் வர்மம் வாதை கோதை பயங்களையும் பிறவி நாசம் பொய் வினை சஞ்சாரம் பீடை கோடை வாடை தீர்க்கவும் பிள்ளை இல்லாத பேருக்கு பிள்ளை கொடுக்கவும் கண்ணில்லாபேருக்கு கண் கொடுக்கவும் தனம் இல்லாத பேருக்கு தனம் கொடுக்கவும், மக்களுக்கு தர்மயுக வாழ்வு அருளவும் ஆகும்.

7. வைகுண்டருடைய செவியில் கேட்கக் கூடாதவை எவை?
அவகடம் பொய் புரட்டு இறைதண்டம் கைக்கூலி அடிபிடி அநியாயம்.

8. தர்மயுகத்தினுடைய காட்சியை பார்க்கின்ற பாக்கியம் பெற வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?
அந்தர வீடு லாட வீடு திறக்க பட வேண்டும்.

9. அந்தர வீடு லாட வீடு என்பது என்ன?
மாய்கை அறுத்து தன்னுள் இறைவனை காணும் நிலை.

10. ஐயா வைகுண்டர் தெட்சணத்தில் வந்து அமர்ந்த நாள் எது?
வெள்ளி கிழமை காலை மூல நட்சத்திரத்தில் பஞ்சமி திதியில் ஆகும்.

11. நாம் உழைத்து சம்பாதித்த செல்வத்தை எதற்காக வீணுக்கு செலவிடக்கூடாது என்று கூறினார்?
காணிக்கை, கைக்கூலி, காவடி ஆராட்டு, நீராட்டு, கை விளக்கு, பூசை,புனக்காரம், சேவித்தல், சுற்றல், அர்ச்சனை, தீபரணை, சாந்தி, காளாஞ்சி, கைவிளக்கு காவடி காணிக்கை, திருமுகூர்த்தம் கோபுரம் முகூர்த்தம், திருநாள் முகூர்த்தம், தேரோட்டம் முகூர்த்தம், திருக்கொடி முகூர்த்தம், குரு முகூர்த்தம் குரவை முகூர்த்தம், குலாம் கூட்டம், கொலு ஆரவாரம் ஆயுதம், அம்பு, அச்சு நடை, ஆனை நடை,

அலங்காரம் மஞ்சனை குழி நீராடல் முதலியனவற்றிற்காக செலவிடக்கூடாது என்றார்.

12. வைகுண்ட தெட்சணத்தில் வந்தவுடன் எவை ஒதுங்க வேண்டும் என்று உபதேசித்தார்.?
ஓம பிசாசுகளை

13. அய்யா வைகுண்டர் வண்ட புலப்பமாக எத்தனை மாதங்கள் உலக நடப்புகளைக் கூறினார்?
பத்து மாதம்

14. வைகுண்டர் பத்து மாதம் காலமாக உலக நடப்புகளை கூறிய பின் செய்தது என்ன?
யுகம் சோதித்தார்

15. வைகுண்டர் மனு நிறமாக அவதாரம் எடுத்ததனுடைய நோக்கம் என்ன?
மனுவை சோதித்து எடுப்பதற்காக

16. தலைமுறை வினைகள் என்பது என்ன?
கர்ம வினைகள்

அய்யா வைகுண்டர் திருத்தவம்

விருத்தம்

உலகினில் மனுவாய்த் தோன்றி ஓர்இரு பதுநாலுக் கப்பால்
தலைமுறை வினைகள் போக்கிச் சடலத்துள் ளூற லோட்டி
மலைசெந்து ரலையி னுள்ளே மகரத்துள் ளிருந்து பெற்று
அலைகடற் கரை நாரா யணரெனப் புவியில் வந்தார்

வந்தந்த நாட்டி லுள்ள வன்குற்ற மதனைக் கேட்க
நந்திகோன் விபூதி சாற்றி நாடிய தவங்க ளேற்றி
முந்தநாள் மூவர்க் கெல்லாம் முதன்மையாய்ச் சாதித் தேற்றி
சந்ததஞ் சாகா விஞ்சைத் தலைவனாய்ச் சமைய வென்றே

நீதிய ரோமம் வீசி நினைவொன்றைக் கருணை வாசி

சாதிக ளுரைக ளாற்றிச் சடத்துற வாசை யற்று
வாதியாங் கார மற்று மலசல மதங்க ளற்று
ஆதியைக் கருணை நாட்டி அவர்தவம் புரிந்தா ரையா

ஆசையாம் பாச மற்று அனுதாரக் குளாங்க ளற்று
மாசதாம் வினைக ளற்று வாக்கலங் கார மற்று
நீசமாம் கலியை யற்று நீணிலத் தாசை யற்று
ஓசையாம் வெளியைத் தாண்டி ஒருவனைக்கண் டுகந்தாரையா

கண்ட வர்ப்பா லேற்று கண்சுழி முனையில் நாட்டிப்
பண்டவர் செகலில் பெற்ற படிமுறை தவறா நாட்டிக்
கொண்டவர் லோகந் தன்னைக் குமியவோர் தலத்தி லாக்கி
இரண்டது மறிய வென்றே இவர்தவம் செய்ய லுற்றார்

மனுதவ தாரங் கொண்டு வந்தவர் பிறக்க லுற்றார்
தனுமனு வோர்க ளெல்லாம் தழைத்துநீ டூழி வாழ்ந்து
மனுதர்மப் புவியைக் கண்டு மாள்வரா வாழ்வு வாழ்ந்து
துணிவுடன் மனதி லேற்றி சூரியத்தவசு நின்றார்

முற்பிதிர் வழிக ளெல்லாம் முதன்மைபோ லாக வென்றும்
கற்பினைப் படியே தோன்றிக் கலியுக மதிலே வந்த
அற்புத மடவா ரோடும் ஐவர்தம் குலங்க ளோடும்
செப்பியச் சாதி யெல்லாம் செயல்பெறத் தவசி யானார்

இத்தவ மதிலீ தெல்லாம் இயல்புடன் வசமே யாகக்
குற்றமே செய்வோ னீசக் கொடுகலி வழிகள் சாகக்
கர்த்தனார் கர்த்த னாகக் கலியுகத் தீர்வை யாக
உற்றவை குண்ட சுவாமி ஒருகுடைக் கரசும் பெற்றார்

**விளக்கம்:**

வைகுண்டர் தவம் இருக்கின்ற போது சுற்றம் நட்பு என்ற ஆசா பாசங்கள் இல்லாதவராக ஆணவம், கன்மம், மாயை என்னும் அழுக்குகள் அற்றவராக வாக்கு அலங்காரம் மற்றவராகவும், பேச்சாற்ற மௌன நிலை உடையவராக காம, குரோதங்கள், மதம்,மாச்சரியம், லோபம், மோகம் ஆகிய கலிமாசு எண்ணம் அணுகாதவாறு இந்த உலகியல் ஆசைகள் சற்றும் இல்லாதவராக ஓசையாம் வெளியா கிய சர்வதுவுமான பரப்பிரமத்தோடு ஒன்றிய

வண்ணம் இருந்து தவத்தை புரிந்தார். அதாவது அவருடைய இயல்பு நிலையான அந்த பரபிரம்ம நிலையில் இருந்து தவத்தை மேற்கொண்டு மக்கள் கலிமாயையிலிருந்து விடுபடுவதற்குரிய வழியைக் காட்டினார்

பரபிரம்ம நிலையில் இருந்த வைகுண்டர் மனுநிறம் காட்டி மண்ணுலகம் வந்தமையால் பாற்கடலில் பெற்ற விஞ்சையின்படி அணு அளவு கூட விலகாமல் பார்வையை சுழுமுனையில் நிறுத்தி, ஞான ஒளி பிரவாகம் என்னும் பால் ஏற்று பிரபஞ்சம் முழுவதையும் தம் கட்டுப்பாட்டுக்குள் உள்ளாக்கி இரண்டதம் அறியவென்று தவம் செயலுற்றார். இங்கு இரண்டதம் என்பது பிறப்பாகி மரணம் இல்லாத பெருவாழ்வும், சாகும் பிறப்பாகிய பிறவி தளையும் குறிக்கும். இவ்வாறு இறப்பு பிறப்பு என்னும் தளையிலிருந்து உயிர்களை விடுவித்து மரணம் இல்லாத பெருவாழ்வாகிய பேரின்ப நிலையை அடைவதற்கு வழி காட்டுவதற்காகவும், மக்களின் மனதில் இருக்கும் நன்மை தீமைகளை அறிந்து நல்லவர்களை தேர்ந்தெடுத்து நல்வாழ்வு அருளவும் தீயவர்களை அழித்து நரகில் தள்ள வேண்டும் என்று எண்ணி தவத்தை மேற்கொண்டார்.

பரபிரம்மமாக எங்கும் நிறைந்து ஏகமயமாக இருக்கின்ற வைகுண்டர், இந்த உலக மக்கள் கண்காணும்படியாக மனு உருவம் காட்டி தெட்சணத்தில் எழுந்தருளினார். எதற்காக என்றால் தனு மனுவோர்கள் ஆன வெள்ளை உள்ளம் உடைய மக்கள் வனு தர்ம புவியாகிய தர்மயுக வாழ்வைப் பெற்று மரணம் இல்லாத பெருவாழ்வு வாழ வேண்டும் என்பதற்காக சூரிய தவசு நின்றார். சூரிய தவசி என்பது பிறர் நலம் கருதி செய்யப்படும் தவசு எனப்படும். தேவர்களை கலியுலகில் மனுவாக பிறவிச் செய்யும்போது அவர்களிடம் அய்யா, **"என் மக்கள் ஏழும் இயல்கலியில் பட்டுழைந்து வன்மக்கலியதனால் மாறி மிக செய்ததெல்லாம் நான் பொறுத்து உங்களுக்கு நானே தவசு பண்ணி மக்கள் ஏழு பேர் வம்சங்கள் உள்ளதெல்லாம் ஒக்க ஒன்று போல உகந்தெடுத்து உண்மையுடன் நாடாள வைப்பேன், தாடாண்மையான சக்தி உமை தன்னாணை**" என்று சொல்லி அனுப்பியபடி அவர்களை தன் இயல்பு நிலைக்கு உயர்த்துவதற்காக வேண்டி சூரிய தவசிருந்தார்.

"கலியுகத்தை முடிப்பதற்கு காரணமாக தவசிருந்தேன்" என்னும் திருவாக்கையும் "ஊசி முனையதிலே உங்களுக்காய் தவசி

இருந்தேன்" என்னும் திருவாக்கையும் இங்கு நினைவு கூறுவோம். சான்றோர் மக்களை தற்காத்து அவர்களை கலி என்ன மாயயிருளில் இருந்து விடுவித்து தர்மயுக வாழ்வை அருள்வதற்காக வேண்டி வைகுண்டர் தவம் மேற்கொண்டார் என்பது இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

அய்யா வைகுண்டருடைய தவத்தின் நோக்கம் என்னவென்றால், அனைத்து ஜீவராசிகளும் தன்னுடைய இயல்பு நிலையை பெற்று பரப்பிரம்மத்தோடு ஐக்கியமாக வேண்டும் என்பதற்காகவேதான். இந்த கலியுகத்தில் கலியை அழிப்பதற்காக மேலுலக வாசிகளை எல்லாம் பூவுலகில் பிறவி செய்திருக்கின்றார். அவ்வாறு பிறவி செய்திருக்கின்ற மக்கள் எல்லோரும் மீண்டும் தன்னுடைய இயல்பு நிலையை பெற்று பர பிரம்மதோடு ஐக்கியமாக வேண்டும் என்பதற்காக சப்தமாதர்களின் வழியில் வந்த சான்றோர் குல மக்களையும், ஐவர் குலமாகிய பஞ்சபாண்டவர்களாய் துவாபர யுகத்தில் இருந்தவர்கள் இப்போது கலியுகத்தில் அய்யாவின் தொண்டர்களாக இருக்கின்ற சான்றோர் குல மக்களையும், எல்லா சாதியினரும் நான்கு விதமான பிறப்பு ஏழு விதமான தோற்றமுடைய எண்பத்து நான்கு லட்சம் பேதா பேத உயிரினங்கள் அனைத்தும் தன்னுடைய இயல்பு நிலை பெற வேண்டும் என்று வைகுண்டர் தவம் இருந்தார்.

மேலும் "**எல்லாருக்கும் ஒன்றுப் போல் ஈசன் நான் இருக்கிறேன்**" என்னும் திருவாக்கிற்கு இணங்க தெய்வம் வேண்டியவர் வேண்டாதவர் என்று இல்லாமல் எல்லோரையும் ஒன்றுப்போல் தனக்குள் ஐக்கியப்படுத்த வேண்டும் என்றும் தன்னை அடுத்து வரும் யாவருக்கும் எப்போதும் கருணை காட்ட தயாராக காத்து இருக்கின்றார். இறைவனை நெருங்கி கொண்ட எல்லா சாதி மக்களும் நிலை பெற வேண்டும் என்பதற்காக தவசி இருந்தார். ஆகவே உலக இன்பங்களை நோக்கிச் செல்லாமல் பரபிரம்மத்தோடு ஐக்கியமாகி பிறவி பிணியில் இருந்து விடுபட வேண்டும்.

தவத்தினுடைய நோக்கம் என்னவென்றால் அனைத்து உயிர்களும் தன் இயல்பு நிலையை அடைந்து, மரணம் இல்லாத பெருவாழ்வு வாழ வேண்டும் என்பதற்காகவே ஆகும். மேலும் குற்றமாகிய தவறுச் செய்வதையே நோக்கமாக கொண்டு வாழ்ந்து சான்றோர் குல மக்களைத் துன்புறுத்தும் நீசக்குலங்களையும், குற்றம்

செய்வதையே தன் இயல்பாகக் கொண்ட அசுர சக்திகளையும் அழிந்து போக வேண்டும் என்றும், இந்த கலி உலகத்தை அழித்து நல்லவர்களை தெளிந்தெடுத்து தன் கருணையின் காரணமாக அவர்களுக்கு நல்வாழ்வு அளித்து ஒரு குடைக்குள் இந்த உலகை அரசாளவும், தீமைகளை அழித்து நரகில் தள்ளவும், இவ்வையகம் செப்பிய சாதியாகிய சான்றோர் மக்களை காப்பதற்காக தவம் இருக்கின்றார்.

## **வினா விடை** :

1. "உலகில் மனுவாய் தோன்றி ஒரு இருபது நாலுக்கு அப்பால்" இதில் கூறப்பட்டுள்ள ஒரு இருபது நாலுக்கு அப்பால் என்பது எதைக் குறிக்கிறது?
ஆன்ம தத்துவங்களைக் கடந்த பர நிலை ஆகும்.
அதாவது மண், நீர், நெருப்பு, காற்று ஆகாயம் என்ற பஞ்சபூதங்கள் ஐந்து
மெய்,வாய் கண், மூக்கு,செவி என்ற ஞானேந்திரியங்கள் ஐந்து
சத்தம் ஸ்பரிசம், ரூபம், ரசம் ஸ்கந்தம் என்ற தன் மாத்திரைகள் ஐந்து
வாக்கு, பாதம், பாணி, பயுரு உபத்தம் என்ற கருமேந்திரங்கள் ஐந்து
மனம், சித்தம், புத்தி ,யகங்காரம் என்று அந்த கரணங்கள் நான்கு என 24 ஆண்மை தத்துவங்களை கடந்து 25 ஆவது கர்மவினை நெருங்காத பெருநிலையை குறிப்பதாகும்.

2. "ஆசையாம் பாசமற்று அனுதார குளாங்கள் அற்று மாச தாம் வினைகள் அற்று வாக்கலங்காரமற்று நீசமாம் கலியற்று நீணிலத் தாசையற்று ஓசையாம் வெளியே தாண்டி ஒருவரை கண்டுகந்தார் அய்யா" இதில் கூறப்பட்டுள்ள தீவினைகள் எவை எவை?
ஆசை பாசம் அனுதார குளாங்கள் மாசு என்ற வினை வாக்கு என்ற ஆணவம் கலி நீசம் என்ற ஆறு அகப்பகைகள் மேலும் உலகத்து ஆசைகள் .

3. "ஆசையாம் பாசமற்று அனுதார குளாங்கள் அற்று மாச தாம் வினைகள் அற்று வாக்கலங்காரமற்று நீசமாம் கலியற்று நீணிலத் தாசையற்று ஓசையாம் வெளியே தாண்டி ஒருவரை கண்டுகந்தார் அய்யா" இதில் கூறப்பட்டுள்ள ஓசையாம் வெளி என்பது எதைக் குறிக்கிறது?

வெட்ட வெளியாகிய பரப்பிரம்ம நிலை.

4. “இரண்டதும் அறிய வென்றே இவர் தவம் செயலுற்றார்” இதில் கூறப்பட்டுள்ள இரண்டதும் என்பது எதைக் குறிக்கிறது?
நன்மை  தீமை இறப்பு பிறப்பு என்ற செயல்களைக் குறிக்கிறது.

5. வைகுண்டர் எத்தகைய தவத்தை மேற்கொண்டார்?
சூரிய தவத்தை மேற்கொண்டார்.

6. வைகுண்டருடைய தவத்தினுடைய நோக்கம் என்ன?
முற்பிதிர் வழிகள் எல்லாம் முதன்மைப் போல் ஆக வேண்டும் என்பதாகும்.

7. முற்பிதிர் வழிகள் யார்?
வானம் சூழ்ந்த வையகத்தில் வாழும் தேவர்கள் ( சப்த கன்னியர்களின் மூலம் பெற்றெடுக்கப்பட்ட மேலோக சான்றோர்கள்)

8. மாது கன்னி பார்வையிலும் இதில் கூறப்பட்டுள்ள மாது கன்னி என்பது யாரைக் குறிக்கிறது?
குமரி பகவதி தேவியை

9. வைகுண்டம் என்று யார் அறிவதற்காக அய்யா தெட்சணத்தில் வந்தார்?
உலக மக்களாகிய மனுவோர் அறிவதற்காக

10. வைகுண்டர் தெட்சணத்தில் வந்து நாட்டிலுள்ள எத்தகைய குற்றத்தை கேட்டறிந்தார்?
வன்குற்றம்

11. அய்யாவை கண்டுகந்தவர் என்று யாரைக் குறிப்பிடுகிறார்?
தனக்குள்ளே மூலப் பொருளாக இருக்கும் பரம் பொருளை.

12. குன்றா கடலில் கொண்ட வழிப்படியே என்பது எதைக் குறிப்பிடுகிறது?
மகர அறையில் பெற்ற விஞ்சை உபதேசங்களை

13. கூட்டு கிளியை குழந்தை வடிவாக தவம் இருந்தது யார்?
ஈசர்.

14. ஆறுமுகமான ஆண் பிள்ளையை யாரை சரமறுக்கப் பிறவிச் செய்யப்பட்டது?
சூதன் என வந்த சூரர்களை

15. யார் தவம் எல்லாம் அய்யா வைகுண்டரின் தவத்திற்கு ஒப்பாகது?
ஈசர் உமையவள் சீதை பார்த்தன்

16. பொல்லாதவரும் அகில ஞானத்தை எவ்வாறு கேட்டால் நன்மை கிடைக்கும்?
பொருந்தி அதாவது மன ஒருமை நாட்டோடு கேட்டால் நன்மை கிடைக்கும்.

_______________&________________

திங்கள் பதம்

அஞ்சுதலைபோல்முகமும் ஆயிரங்கை காலுமாகப்
பிஞ்சுமலை போல் கூட்டி பிறப்பித்து நானுமிங்கே
செப்பரிய தோப்பதிலே சீதை வென்று நிற்பிச்சியிருக்க
எப்ப நான் புறப்படுவேன் யென்னுடைய பத்தன்மாரே

செப்பறிய திருமாலும் அங்கிருக்க
தென்பரியதோப்பதிலே செப்பமுடன் வைகுண்டம்
ஆனைப் படி திட்டிச்சிருந்த அறிவுள்ள பண்டாரம்
பத்தன்மாரே வெகுநாளாய் வேலை செய்யும் பிள்ளைகளே

முன்னிருந்த யுகமதிலே தன்னியத்தால் பால்தந்தேன்
என்னையறியாத பேர்கள் இருப்பாரே கலியுகத்தில்
வங்காள அரண்மனையார் வாறாரேகலியழிக்க
என்மகளே திருநெல்வேலி எல்லாரும் ஒருமுகமாய்

சொல்லரியபுத்தினைத் தெரியும்படி சொல்லிவிடு
வெகுநாள் கலியழிக்கவிரும்புகிறேன் கருவூலமே
சொற்பெரிய தோப்பதிலே சீதையுங்கள் அம்மையவள்
மற்பெரிய ராசனிடம் மற்பிடித்து நிற்கிறாளே

மகிழ்ந்திருந்து விளையாட வாறீரோ யென்மக்களே
திரும்பிநீங்கள் வரவேண்டாம் தெய்வசுனை அங்குவுண்டு
செங்கமாரி நோயுமில்லை தீனமில்லை பத்தன்மாரே
கவிழ்ந்திருந்து பதியரசன் கட்டிலின் மேலிருக்க

பாற்கடலில் பள்ளிகொண்டு பகுத்துவிடைவாங்கி
பஞ்சவேர உங்களுக்குப் பழிபாவம் செய்யவில்லை
திரும்பிநீங்கள் சிரித்தாக்கால் தீனமுண்டு உங்களுக்கு
கடலதிலே கெரடிமரமும் கல்லறையும் பொன்கணமும்

பொக்கணமும் புலித்தோலும் வாழைக்காய் கேட்கவில்லை
கற்பனையாய் பெற்றிருந்தபடியாலே வீற்றிருந்தேன்
சொற்பெரிய கற்பனையாய் பத்திரத்தாள்பெற்றபிள்ளை
கைலாச பணிவிடையுண்டு கலியுகத்தில் வேலையில்லை

நிறைவேலை செய்தாலும் நீதங்கேட்க மனிதரில்லை
கடலதிலே ஒருகிழவி அவதாரக்கிழவி தானும்
அமைத்துவந்தார் உங்களுக்காய் அம்மையென்ற லட்சுமியைக்
கண்டுதணிந்தவர்க்குக் கைலாசம் இங்கேயுண்டு

மாப்புக்கேட்க மக்களுண்டு மகாதேவன் அருளாலே
ஆயிரத்தெட்டு மாசியிலே அதிகப்பேறு பெற்றுவந்தேன்
என்னாலேஒருஞாயம் எண்ணாமல்செய்யவில்லை
எண்ணாமல்மாப்பு செய்து இரணியணைச் சங்கரித்தேன்

பின்குடுமி முடிந்தவர்கள் பூமியில்இருக்கமாட்டார்
அய்யோ பிள்ளைகளே அறிவுள்ள என்மகனே
சொல்லரிய வெயலதிலே சுடுமணலில் தானிருத்தி
சொல்லரிய கல்லேற்றி வேறுபொடியில தள்ளிவைத்தான்

இந்த அநியாயம் கேட்க ஈசுரனார் விடையும்பெற்று
பள்ளியிலேசென்றிருந்து பாடிவரும் பிள்ளைகளே
அன்றுசிரிப்பீர்களோ அதிகத்தலம் காட்டித்தாறேன்
நட்சத்திரமுதிரும் நல்வானமிடிந்துவிழும்

என்னயைறியாதபேர்கள் எரிந்துசரிந்துபோவார்
பத்தினிதான் பெற்றபிள்ளை படும்பாடு கேட்கவில்லை
கற்பித்துபெற்ற கந்தன்படும்பாடு அறியவில்லை
சொற்பெரிய திருமாலைச் சோதனைக்கு அனுப்பிவைத்தேன்

கந்தனைஅடித்தவரைப் புழுங்கிடங்கில் தள்ளிடுவேன்
ஊருணி கிடங்கெல்லாம் ஊற்றுமிகப் பெருகுதடா
சிறீலங்கை மாறியது செந்நெல் விளையுதடா
தீமெழுகநாளேச்சு சொல்லித்தாரேன் தெரியும்படி
ஆண்டிபெற்ற பிள்ளைகள்தான் அரசாட்சி ஆகுதடா
பசுவின்பால் குடித்ததுவும் பத்தினிவயிற்றில் பிறந்ததும்
பன்றிவயிறு தானொரிந்து பன்றிநெய்யாய்ப் போகுதடா

சொற்பெரிய கவுந்தலத்தில் சிலவாழ்வு யிடிந்துவிழும்

நீபெரிது நான்பொதுவடிவெடுப்பேன் பழிக்குலத்தில்
பலவேசம்போட்டதுண்டால் பத்தன்மார் அறியமாட்டான்
எடுத்தான் ஒருகோலம் இறங்கிவந்தேன் கைலாசம்
முப்புரக்கோட்டையிலே மூன்றுவேசம் போட்டுவந்தேன்

அப்பாவியென்னை யுந்தான் அறியாமல் அடித்தானே
இந்தக்கலியுகமதிலே இருக்கவொட்டான் என்னையுந்தான்
இத்தனைக்கு கலிமுறுகி அநியாயம் அதிகமாச்சே
பலவிதமாய்க்பக்தன்மாரேபாடி ஆடிபரத்திவிடவந்தேனடா

சொற்பெரியபத்திரத்தாள் கற்பனையாய் வளர்த்தபிள்ளை
இதுவரைநான்பொறுத்தேன் இனிபொறுக்கமாட்டேனடா
உங்கள்வருத்தம்கண்டு ஒருமருந்துகொண்டுவந்தேன்
தெய்வீரேஉங்களுக்காய் சிறுபிள்ளையாய் நானிருந்தேன்

அப்பனொருபண்டாரம் அதிகசுகம் கொண்டுவந்தார்
ஏடுயெறிந்துவிட்டேன் கையெழுந்திருந்து போவென்
கல்மடமும்திருப்பதியும் கடலதிலேஅங்கிருக்க
எப்படியும்நானிருப்பேன் யென்னுடையதம்பிமாரே

ஒருசாமநேரத்திலே ஊழியென்றகாற்றுவரும்
மற்புடையபிள்ளைகளே வருவேன் நான்எழுப்புதற்கு
என்னை அறியாதவன் உன்னால் தவம்வேணுமென்பான்
எப்படியும்கும்பிடுவான் புளுக்குழியில்தள்ளிடுவேன்

கோத்திரத்தில் உள்ளவர்க்கு கூடுமட்டும்புத்திசொன்னேன்
கேளாதபேர்களுக்கு நானென்செய்வேன்ப்பா
மஞ்சள்நீர் பாலாறாய் வருகுதப்பா என்மகனே
கஞ்சனையறுத்தமுனி கடல்நீர்குடித்துவிட்டேன்

அப்படியே குடித்தவர்க்கு ஆண்டிவந்துகுடியிருப்பேன்
தத்தெடுத்த பிள்ளையில்லைதிட்டிக்காமல் பெற்றபிள்ளை
அப்போநீயரசாள அதிகபிள்ளை யீன்றெத்தேன்
விருதுக்கோடி பெற்றபிள்ளைவிருப்பமுள்ளபிள்ளைதான்

என்னுடைய மந்திரியெல்லோருமொரு முகமாய்
அலைவாய் கடலதிலே வருவதற் காயழைக்கிறாரே
ஆடுகிடாக் கோழிபன்றி அறுத்துபலி கேட்கவில்லை
பொங்கரிசி கோழிமுட்டை பொறித்தகறிகேட்கவில்லை
உருகச்சுட்ட பணியாரம் அவலருண்டை கேட்கவில்லை
கருகச்சுட்டமுருக்குகளும் கடையல்பால் கேட்கவில்லை
உருக்கெடுத்த மடப்பதியில் திரிக்கொழுத்திவைக்கவில்லை
ஒருகாசும்கேட்கவில்லை உமையவளே அறிவாயோ

என்னையொன்றுசொல்லதே இறையவனும் அறியலையோ
வெகுநாளாய்வந்திருந்து வேண்டும்புத்தி சொன்னேன்நான்
ஒன்றும் அறியாமல் விழுகிறானே தீயதிலே
சொல்லிவிட்டேன் கேட்கவில்லை என்னுடைய நம்பிமாரே

அறட்டி மடக்கிக்கொண்டு முடுக்கிகொண்டிருக்கிறானே
தவமிருக்கும் இடமதிலே வலமிடமா றாட்டம்வைத்தான்
பொய்ரதத்தை ஓட்டிவைத்தான் பூலோகம் தான்நடுங்க
பஞ்சவரே வெகுநாளாய் வருத்திநான் தீர்த்துவிட்டேன்

குட்டம்குறைநோவு கொடியதீனம் தீர்த்துவிட்டேன்
கண்குருடு கால்நொண்டி கர்மமுதல் தீர்த்துவிட்டேன்
தெச்சணா பூமியிலே தென்குமரி நன்னாட்டில்
வெகுநாளாய் வந்திருந்து மக்களுக்கு புத்திசொன்னேன்ங்

எத்தனையோ வெகுநாளா யியருந்துபுத்தி சொன்னேன்
அப்பனில்லா பிள்ளையது அதிகபிள்ளை யானதுதான்
செப்பரிய தாய்க்கிழவி சேர்ந்தாளே யெடுப்பதற்கு
இடுக்கமில்லை யினிமேலும் வெண்ணெயுண்டு நீளுதடா

தெப்பக்குள மிங்கமுண்டு திருமால் கற்பிச்சியிருக்கு
பிராமண வேசம்பாட பத்தன்மாரே நீங்களுண்டு
பொன்னாலே பூனூலும் தங்கத்தாலே சாலுவையும்
கடுக்கண்திருக் காணியில்லை கலியுகத்தில் வேலையில்லை

பொன்னரும்பு வேலைசெய்யப் பூமியில்தட்டானுமில்லை
பொன்னரிய கன்னபெற்ற பிள்ளைகள் வந்ததுண்டால்
குறுணிப்பொன்னிடுவதற்கு கொடுத்துவைத்திருக்குதப்பா

பட்டமர சாளக்கோடிமக்க ளுண்டு பாவனையாய்நான்
கொடுப்பேன்

எல்லார்க்கு மொருப்போல ஈசன்நான் யிருக்கிறேன்
சொற்பெரிய ராச்சியத்தில் சீமைகாட்டி ஆளலாமே
குதிரைகட்ட லாயமுண்டு கோடிச்சீமைகட்டலாமே
அதிகமுள்ள ராச்சியத்தில் அமுதேற்றுத்கொள்ளலாமே

கண்ணாடி பார்த்தப்பட்டு கடியதுகியில் ஆடையுண்டு
குளிர்கால ஓட்டமுண்டு கொடிவிருதுக் கட்டமுண்டு
தாசியாட்டமுண்டு சான்றோர்பார்க்கத் தம்பிரான்கற்பித்தேன்
ஆனைமேல் ஏறிநீங்கள் அற்றகுற்றம் பார்ப்பதுண்டு

சீதனம் விட்டுத்தாறேன் தெய்வேந்திரன் அங்குண்டு
கலியுகத்தில் வேலையில்லை கண்மணியே உங்களுக்கு
ஆலங்காய்நெல்லிவிளையும் அரிசிசிறு தானியமுண்டு
அமுததேற்றங்கொள்ளாலேமே ஆசாரம் அங்கேயுண்

கோவங்காய் பாகற்காய் கொழுந்துவரை அங்கேயுண்டு
சத்தியவாக்காய்ச்சொல்லுகிறேன் தம்பிரான்கற்பனையாய்
தலைவாசலானதிலே தலைதூக்கி மயிர்பிடித்து
கற்புடையராசன்வந்து கண்ணாடி வைத்துபப் பார்த்தான்

என்பேரில் குற்றமில்லை இழுத்துப்புதைக்க பிள்ளையில்லை
அப்படியேபிள்ளகைளே அணைத்தார்பால்கோட்டையிலே
இரண்டாம்முடிதரிக்க நீராவிக்கரைகளுண்டு
சங்குசக்கரமுண்டு தம்பிமாரே உங்களக்குக்

கன்னியிலேவந்திருந்து மேல்நோக்க நாமந்தருவேன்
சித்திரத்தாலதிகமுள்ள தோழருமங்கேவுண்டு
பஞ்சவரே உங்களுக்கு வஞ்சகமாய் சொல்லவில்லை
மாயவலைக்குள்ளிருந்து நடுஞாயம்தீர்த்துவாறேன்

திட்டித்தநாள்முதலாய்ச் சிலகாலம் தவசிபண்ணி
பால்காவடிவேண்டாமென்று பண்டார மிங்குவந்தேன்
ஒன்றுநான்கேட்கவில்லை உனக்குத்தெரியும்தாயே

சின்னம்சிறு மதலையாகத் தோப்பதிலே தவசிருந்தேன்

பிச்சிப்பூ அச்சுமாலை பொரியவல் கேட்கவில்லை
நல்லெண்ணெய் பிண்ணாக்கு ராசாவும் கேட்கவில்லை
தெய்வகன்னி பெற்றபிள்ளை செடிதோறும் அலைகிறாரே
பேய் எச்சி தின்றுஅவர் பேய்போல் அலைகிறாரே

நானானேன் தானானேன் தந்தேநன்னம் தந்தேநன்னம்
நாகம்போலே உள்ளபேயை நல்லதீயாலெரித்தேன்
மந்திரம் மாற்றிவைத்தேன் மாறானதைச் சாபமிட்டேன்
கருத்துள்ள ஈசுவரியேக் கண்டுகொண்டு பார்க்கவேணும்

கழுத்திலே கல்லேற்றிக் கைதாப்பாள் போடுகிறானே
பழிக்கோ நாங்கள் பெற்றபிள்ளை படும்பாடுகேட்கலையோ
கம்புவெட்டி அடிக்கிறானே கல்லேற்றி அடிக்கிறானே
அரியரசன் தவசுபண்ணி தெய்வகன்னி பெற்றமக்கள்

பொறுத்திருங் கோமக்காள் பூலோகம் ஆள்வீர்களே
குடுக்கவட்டைச் சிரட்டைகொண்டு வந்துயிருந்தேனடா
சூதாடிப்படைபொருது திறம்பார்க்க வரவில்லையப்பா
அரியரசன் தவசுபண்ணி அவர்பெற்ற பிள்ளையுண்டு
பொன்னரசி ராச்சியத்தில் அரசாளப் பிள்ளையுண்டு
மன்மதன்சீமையிலே வாள்வீச்சுக் காரருண்டு
கூலிக்காரர் மக்களில்லை கோடிவரிசை பெற்றமக்கள்
வற்றிய குளத்துக்குள்ளே முத்துக்கெண்டைப் பிடிக்க
பிள்ளையில்லை

அம்மா அம்மா தாய்க்கிழவி அதிமுள்ள பிள்ளையுண்டு
நாட்டுச்சீமையிலே வகையெடுக்கப் பிள்ளையில்லை
என்னுடைய தம்பிமாரே இலங்காபுரி ஆள்வாயோ
ஊசிமுனையதிலே உங்களுக்காய்த் தவமிருந்தேன்

காசியிலே ராசர்மகன் வாழும்தேசம் தாறேன்நான்
நட்டமா நான்இட்டவேலி நாள்தோறும் வாழ்ந்திருக்கும்
பால்வருணன் என்மகன்தான் பஞ்சவரும் என்மகன்தான்
நான்பெற்ற என்மகன்தான் ராச்சியத்தை ஆள்வானே

வாசமுடையபெருஞ்சுனையில் தெய்வஉயிர்மீன்பிடிக்கவந்தேன்
ஊற்றால்தான் போட்டதுண்டால் உயிர்த்தேர்ந்து மீன்பிடிப்பேன்
பழிபாவம் செய்திடுவேன் பார்த்திருங்கோ கொஞ்சநேரத்திலே
செடிகலைத்துவேட்டையாடி தெளிந்தமுயல்பிடிக்கவந்தேன்

அதிகமுள்ள வெடிகள்கொண்டு அமைத்துவைத்து கட்டிடுவேன்
இளங்கொடிகால் வைத்து எடுத்துக்காட்டவந்தேனப்பா
என்னுடைய பிள்ளைகளே இரக்கமுண்டு பத்தனமாரே
கடுவாய்ப்புலிகள்சிங்கம் கடக்கநின்று சிரிக்குதப்பா

ஒளித்திருந்தேன் வெகுநாளாய் ஓடிவந்தேன் எடுப்பதற்கு
நான்பெற்ற பிள்ளைகள்தான் ஆலிலைபோல் வாடுதப்பா
பொல்லாதபாவிகள்தான் துயரப்படுத்துகிறார்
கண்மணியே ராசாவே கலியழிக்க வாருமப்பா

வலிமையில்லை பெலனுமில்லை வரிசையுள்ள பிள்ளைகட்கு
அய்யோ தாயாரே ஒளவையாரே கிழவியம்மா
கஞ்சனை அறுப்பதற்கு கனவரிசை கொண்டுவந்தேன்
முத்தலத்தோர்கூடிருந்து தெப்பகுளம்காட்டுவேன்நான்

பொன்மலை ஆளலாமே முத்துப்பதித்த வைகுண்டம்
அங்கேயுண்டு
ஊசிகள்தான் போட்டப்பவளக் கோட்டை அங்கேயுண்டு
எப்படியும்கற்பனையால்; இங்கேவந் தெடுக்கலாம்
உருள்வண்டி போட்டதரும் வெண்சாமரை வீசலாமே

முத்துப்பதித்தத்தோரும் பவளத்தால்சாவடியும் மண்டபமும்
கல்பதித்தவிளக்குகளும் கண்ணடங்கா செல்வமுண்டு
நடனமாடும் சாலையெலாம் நல்லதெய்வார் கூட்டமப்பா
தஙகக்குதிரையுண்டுதர்மராசர் அரசாட்சிக்கொடிகள்கட்டி
பால்கொடுத்து தாராட்டி பஞ்சணைமேல் கிடத்திடுவான்
பஞ்சணைமெத்தையில் படுத்துறங்கும் நாளாச்சு
காலுக்கு வீரகண்டை கைரண்டுக்கும் தங்கமுண்டு
குகையாள பிறந்தவளே யென்குழந்தாய் எழுந்திருடா

அதிகமுள்ள நீசனும்தர்ன மற்பிடித்து அடிக்கிறானே
படையெடுக்க வாமகனே மானமறுக்கம் பொறுக்கலையோ

மண்டைமயிர் பறியசுமந்து ஒருகாசு கொண்டுவந்தான்
வாடாப்பயலேயென்று ஒருகாசும் பறித்துக்கொண்டான்

இந்தராசன் சீமையாள வந்துபிறந்தீர்களா
கூட்டோடேதாயெழுப்பி கோகுலமே தாயாரே
வேலாயுதம்எடுத்து வேடமகன் அளுகிறான்
கலியுகத்தை முடிப்பதற்குக் காரணமாய்தவசியிருந்தேன்

கண்ணிரெண்டும் இரத்தமாகக் காச்சல்வந்து பிடிக்குதப்பா
கட்டுவேன் நான்சுருட்டி காட்டித்தாறேன் கண்மணியே
தாரபடி பால்கொடுக்கத் தாயாரும் வாறேன் நான்
பாருலகில் திருச்சம்பதி பண்டாரம் அங்கிருந்து

சோதிடங்கள் சொல்வதற்கு தொடர்ந்துவந்தேன் கண்மணியே
ஊமைபோல் தானிருந்து உருண்டோடிப் போறானே
வெகுநாளாப் பஞ்சவர்தான் ஆவலாதி வைக்கிறாரே
கயிலைக்கு வடபுறத்தில் கனத்ததிட்டுப் பாறையிலே

ஓமக்குழி வளருதப்பா உங்களுக்காய்த் தவசிருந்தேன்
தீயராயப் போகவேண்டாம் தீயதிலே யிறங்கவேண்டாம்
கூட்டோடே கைலாசம் உங்களுக்கு காத்துவைத்தேன்
நின்றால் குடித்தால் தூக்கம்வைக்க நீதியில்லை

தென்னமரம்புன்னைநிழல் தெளிந்திருக்க நீதியில்லை
கண்மணிராசாவே காருமிந்த பிள்ளைகளை
அதிகமுள்ள தெய்வகன்னிமக்களை ஆராய்ந்தெடுநீ
தென்னம்காவுள் சிலஓலை அறியச்சொன்னாள்

தும்படுத்து ஆயாமல்சுமந்து கொண்டுபோகச்சொன்னான்
அத்தனைக்கும் போட்டவனை அடித்தானே ஆனைகாலோடே
ஐவராசன் சீமைதன்னை தாருமென்று அவன்கேட்டான்
கொஞ்சநாள்கூலிக்காக காருமென்று நான்கொடுத்தேன்

நான்கொடுத்து நாட்டையவன் நாள்தோறும் அண்டிருந்தான்
சுருக்கிளனீர் வெட்டச்சொன்னான்
கண்மணியேசுமக்கச்சொன்னான்
கொண்டங்கே போட்டாலும்ட கூடதிலே அடைக்கச்சொன்னேன்

அழுதுமுறையிட்டேன் ஆனாலும் கேட்கவில்லை
பாக்குவெற்றிலை கொண்டுவா பயலே உன்னைவிடுவேன்
தம்பிபடும் பாட்டைத் தாயாரே பார்க்கலையோ
கம்புகொண்டுதானளந்து கண்மணியேவெட்டச் சொன்னேன்
பறிக்கநான் வந்தேனடா பத்தினியும் கூடவந்தாள்

உடலழிந்து விழுகுதடா ஊட்டோடே வேகுதடா
கூட்டோடே வேகுதடா குருநிதி ஆற்றலாலே
பொறுதியென்ற தீயாலே பூலோகம் அழக்கிறேனடா
பதினெட்டு துர்க்கையாலே பாரழகு லோகமெல்லாம்

வடகடலும் அழக்கிறதே வானம் இடியுதடா
பூமிவெடிக்கிறதே மலைகள் இளகுதடா
சுழல்காற்றுவருகதப்பா தேசம்விட்டு ஜனம்ஓடுதடா
மண்ணறைக் குள்ளிருக்கும் மாயாண்டி வெளிவருவேன்

அப்புவியை அரசாளவரும் போது
சம்பூர்ணத்தேவரைத்தானெழுப்ப அய்யாவும்
உம்பர்தனை வதைத்த வையகத்தில் வரும்போது
அன்பான மக்கள் தனைஅருள்புரிந்து அய்யாவும்
மாரிபொழயவைத்து மக்கள் பஞ்சம்தீர்த்து

ஆழிபெருகி அவனியெங்கும் அய்யாவும்
தரணியில்வந்து தயவுசெய்து என்னசொல்வார்
வள்ளியாற்றுக்கு மேற்கு வாரியால் தானழியும்
கோட்டாறு அங்கே கொள்ளையினாலழீப்போம்

சுசீந்திரம்ட ஆறுடைந்து சுத்தகதி ஆகுதங்கே
ஆறுடைத்துத்தேரும் அன்புடனே தெற்குதர
தாமரைகுளம்பதியும் தண்ணீராய் போகுமங்கே
கழிக்கரையைத் தானழித்துக் கடற்கரையில்முழித்து

கன்னபெற்ற பிள்ளையுழும் கருத்தாகவேகூடி
கூடிஅய்யா குரபரா றாயணமுனியும்
தெற்குவடக்காய் திருப்பதியும் தோணுமென்றார்
ஈரேழுகாதம் இருக்கதுகாண் துவாரகையும்
வடக்குவாசல் துலங்குதுகாண் அம்பலமும் அம்பலத்தில்

நாரணரும் அரசிருக்க வாறோங்காண் வாறோமென்று
வாக்குரைத்தார் மக்களுக்கு அய்யா.

**விளக்கம்:**

அஞ்சுதலைபோல்முகமும் ஆயிரங்கை காலுமாகப் பார்ப்பவர்கள் அஞ்சு நடுங்கி ஓடும்படியான அதிபயங்கரமான உருவத்தில் கலீநீசனை பிறப்பித்து நானும் அங்கே சொல்லால் விளக்க முடியாத பெருமைமிக்க பூவண்டன் தோப்பில் என்று நிலைத்திருக்கும் யோகமாய் ஆகிய அன்னை மஹாலட்சுமியுடன் ஒப்பற்ற ஒரு பொருளான வைகுண்ட மாபொருளாய் நிலைத்திருக்க எப்படி நான் புறப்படுவேன் என்னுடைய பக்தர்களே! என்றும் நான் உங்களோடு இருப்பேன்.

ஆணைப்படை போன்ற வலிமை மிக்க பக்தர்களை உருவாக்கிய ஞானேஸ்வரனாகிய பெரிய பரம்பொருளாகிய நான் முன் யுகத்தில் உங்களுக்கு சங்கில் நான் பாலூட்டினேன். என்னை அறியாதவர்கள் இந்த கலியுகத்தில் இருக்க மாட்டார்கள். வங்கக்கடலாகிய பால் கடலில் பாம்பணை மேல் பள்ளிக்கொண்டிருக்கும் பரந்தாமனே கலியறுக்க வருகிறார். என் மகனே திருநெல்வேலி பண்டாரமாகிய நீயும் உன்னை சார்ந்தவர்களும் எல்லோரும் ஒரு மனதாக ஒத்திருந்து நான் சொன்ன மேன்மை மிக்க அறிவுரைகளை மக்கள் அறியும் படி சொல்லிவிடுங்கள். வெகுநாட்களாக கலியழிக்க விரும்புகிறேன் கருவூலமே, ஞான பொக்கிஷமே.

சொல்லால் விளக்க முடியாத பெருமைமிக்க பூவண்டன் தோப்பில் உங்கள் அன்னை சீதை எல்லாம் வல்ல பரப்பிரமத்திடம் இந்த பொல்லாத கலியை அழைத்து மக்களை காத்தருளும் படி போராடி நிற்கிறாள். உங்களை இந்த பொல்லாத கலியிலிருந்து விடுவித்து தர்ம யுகத்திற்கு அழைத்து செல்கிறேன் வருகிறீர்களா? மகிழ்ச்சியாக நீங்கள் அங்கே விளையாடலாம். அங்கே தெய்வ சுனை உண்டு. அங்கு செங்கன்மாரி என்றுச் சொல்லக்கூடிய காமாலை நோய்களோ வேறு எந்த நொம்பலங்களோ அங்கு கிடையாது.

பால் கடல் வாசனாகிய நான் கலியழிக்க வரம் பெற்று தெட்சணம் எழுந்தருளி, கலிநீசனுக்கு நான் யார் என்பதை காட்டாமல் மிக மிக

எளிய மனிதனைப் போல தோப்புப்பதி வடக்கு வாசல் திருத்தலத்தில் கட்டிலின் மேல் கவிழ்ந்தபடி வீற்றிருந்தேன். பஞ்சவரே சீடர்களை உங்களுக்கு நான் எந்த குறையும் வைக்கவில்லை. என்னை நீங்கள் நம்பாவிட்டால் அஞ்ஞானம் உங்களைப் பற்றிக்கொள்ளும். பாற்கடல் வாசனான நான் உங்களிடம் கல்லாலான கோவிலோ, கொடிமரமோ, பொன் பணமோ, பொக்கணமோ, புலித்தோலோ, பூமாலையோ, முற்றிய தேங்காயோ, வாழைக்கனியோ கேட்கவில்லை. கலியழித்து வா என்று எனக்கு கட்டளையிட்டபடியால் நான் இங்கு வந்து இருக்கிறேன்.
சொல்லுதற்குரிய விதியின் பயனால் காளி தேவியினால் அருமையாக வளர்க்கப்பட்ட பிள்ளைகளே உங்களுக்கு கைலாச பணிவிடை உண்டு. கலியுகத்தில் உங்களுக்கு வேலையில்லை

. இந்த கலியுகத்தில் எப்படித்தான் நீங்கள் நிறைவாக வேலை செய்தாலும் நீ தங்கள் கேட்க நாதியில்லை. உங்களுக்காக அவதரிக்கும் தலைவியாக அம்மை என்ற மகாலட்சுமியை கடலிலே அமைத்து வைத்தார். இதனை உணர்ந்து அவதார திருமேனி தாயாக கண்டு பணிந்தவர்களுக்கு கைலாசம் இங்கே உண்டு. மகாதேவன் அருளால் தாங்கள் தவறை உணர்ந்து அய்யா நாங்கள் அறிந்தறியாமல் செய்வதெல்லாம் அய்யா பொறுக்கணும் என்று வாயில் அடித்து மன்னிப்பு கேட்ட மக்களும் உண்டு. ஆயிரத்தெட்டு மாசியில் மக்களுக்காக அதிக வரம் பெற்று வந்தேன். நானாக ஒரு நீதியை சிந்திக்காமல் வழங்கவில்லை. இரணியனை அவன் செய்த கொடுமையினால் அவனை சங்கரித்தேன். பின் குடுமி அதாவது உச்சி கொண்டை முடிந்த ரிசிகளும் ஞானிகளும் இந்த கலி பூமியில் இருக்க மாட்டார்கள்.

கடுமையான உச்சி வெயிலில் சுமக்க முடியாத பெரிய கல்லை தலையில் ஏற்றி தீங்கான சுடுமணலில் நிறுத்தி கொடுமை செய்தான். இந்த அநியாயம் கேட்க ஈசரிடம் உத்தரவு பெற்று இங்கு வந்திருக்கின்றேன். நமது பள்ளியாகிய கோவில்களில் சென்றிருந்து உகப்பாட்டு உச்சிப்பாட்டு பாடிவரும் என் பக்தர்களே! உங்களுக்கு புகழ் மிக்க அந்த தர்மயுகம் வாழ்வை அருளுவதற்கு வந்திருக்கின்றேன். அந்த தர்மயுகத்தின் சிறப்பை நான் காட்டி தருகின்றேன். அப்போது உங்களுக்கு மகிழ்ச்சி தானே! நீங்கள் எண்ண ஓட்டம் இல்லாத பேரின்ப பெருநிலையை அடைவீர்கள்.

என்னை அறியாதவர்கள் இறைநாட்டுமில்லாத அதர்மிகள் எல்லாம் எரிந்து கரிந்து போவார்கள். கையிலையில் சிவனுக்கு பணிவிடை செய்து வந்த சப்தமாதர்கள் பெற்ற சான்றோர்கள் படும்பாட்டை கேட்க நாதியில்லை. கலியழிக்க திட்டமிட்டு பெற்ற பிள்ளையையும் அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கும் கந்தனான வைகுண்ட மாப்பொருள் படும் பாட்டை யாரும் அறியவில்லை. புகழ் பெரிய பெருமாளை வைகுண்டமாய் கலி சோதனைக்கு அனுப்பி வைத்தேன். அனைவருக்கும் பற்றுக்கோடாய் இருக்கும் கந்தனான வைகுண்ட மாப்பொருளை அடித்தவரை நரகத்தில் தள்ளி விடுவேன்.

ஊறணி என்று கசிவு நிலமானது செல்வ செழிப்பை உருவாக்கும். அதுபோல கருணை உள்ளம் கொண்டவர்கள் நெஞ்சில் ஈரம் உடையவர்கள் இறையருளை பெறுவார்கள். அவர்களுக்கு திருமகளினுடைய அருள் எப்போதும் பரிபூரணமாக கிடைக்கும். தீய எண்ணம் உடையவர்கள் அழிகின்ற நாள் நெருங்கி வருகிறது. கலிநீசர்கள் அக்கினியால் அழியும் நாள் நெருங்கி விட்டது. ஆண்டிபெற்ற பிள்ளைகளாகிய சான்றோர் மக்கள் ஆட்சி செய்கின்ற நாள் அடுத்து வருகிறது. சப்தமாதர்களான பத்தினிகள் வயிற்றில் பிறந்து தேவேந்திரனுடைய பசுவினுடைய பால் குடித்து வளர்ந்த சான்றோர்களின் பெருமை கண்டு பொறாமை பிடித்தவர்கள் வயிறு எரிந்து இறந்து போவார்கள். பன்றி என்பது அசுத்தத்திற்கு இலக்கணமானது. அழுக்கான புத்தி உடையவர்களும் பொறாமைக்காரர்களும் தங்களுடைய குணநலங்களாலே அழிந்து போவார்கள். எதிர்மறை சிந்தனைகளால் சிலரது வாழ்வானது அழிந்து போகும். நீ பெரிது நான் பெரிது என்று வீரம் பேசி சண்டையிடும் குவத்தில் பிறந்தவர்கள் அந்த குலத்தை அழித்து விடுவார்கள். அது மட்டுமல்ல அந்த குலத்தை அழிப்பதற்காக அந்த குலத்திலே நான் வடிவெடுப்பேன். நான் என்னை காட்டாமல் வேறு பல வேடங்களை அணிந்து இருந்திருப்பதால் பக்தர்களும் என்னை அறிய மாட்டார்கள். வைகுண்ட மாப்பொருளாய் ஒப்பற்ற ஒரு கோலம் எடுத்து கைலாசத்திலிருந்து நான் இறங்கி வந்திருக்கின்றேன். என்னுடைய சூட்சமத்தை யாரும் அறிந்து கொள்ள மாட்டார்கள்.

முப்புரக்கோட்டையிலே மூன்று வேஷம் போட்டு வந்தேன். முப்புராதிகள் ஆன பாவிகள் என்னை அறியாமல் என்னை

அடித்தனர். இந்த கலியுகத்தில் என்னை கலிநீசர்கள் அறிந்து கொள்ளவில்லை. அந்த அளவுக்கு கலியானது முற்றிவிட்டது.இதனால் அநியாயம் அதிகமாகிவிட்டது. ஆகையால் பலவிதமாக பாடி ஆடி அவர்களை நான் அழிக்க வந்திருக்கின்றேன்.

சொல்லால் விளக்க முடியாத பெருமைமிக்க பத்திரமாகாளியம்மன் விதிப்படி பூத்தானமாய் வளர்த்த பிள்ளைகளை கலிநீசர்கள் படுத்தும் பாட்டை இதுவரையிலும் நான் பொறுத்துக் கொண்டேன். ஆனால் இனி பொறுத்துக் கொள்ள மாட்டேன். உங்களுடைய துயரம் கண்டு நான் பிறவிப் பணியில் இருந்து உங்களை விடுவிப்பதற்காக மகா மந்திரமாகிய மருந்து கொண்டு வந்திருக்கின்றேன். (அயா சிவசிவ அரகரா என்ற மகா மந்திரம்) நீங்கள் ஏற்று அதன்படி தினந்தோறும் உச்சரிப்பீர்களேயானால் இந்த பிறவி பிணையிலிருந்து விடுபடுவீர்கள். தேவர்களே உங்களுக்காக கள்ளம் கபடமற்ற பச்சிளம் குழந்தையாக பூவண்டம் தோப்பிலே நான் இருந்தேன்.

உங்கள் அப்பனாகிய இந்த பண்டாரம் உங்களுக்கு அதிக சுகம் தருவதற்காக அமுதநிலையைக் கொண்டு வந்திருக்கின்றேன். பிறவாமை என்ற நிலையை அருளுவேன். அதற்கு வழிக்காட்டும் எண்ணம் இல்லாத வாழ்வை உங்களுக்கு அருளி பிறவிப் பணியில் இருந்து விடுபட செய்வேன். ஆனால் அதை உணர்ந்து கொள்ளாதவர்களுடைய சரீரம் அனலாய் கொதிக்கிறது. இனி இங்கிருக்க இயலாது. எழுந்திருந்து நான் போய்விடுவேன். இரத்தின கற்களால் ஆன அழகிய திருப்பதி துவாரகையில் இருப்பினும் நான் உங்களோடு இருக்கின்றேன். எதற்காக உங்களை நான் ஏற்று உங்களுக்கு நல்லருள் பாலிப்பதற்காகவே தான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு சாம வேளையில் ஊழியென்ற காற்று வரும். அதனால் பல அழிவுகள் வரும். அப்போது மனத்தின்மையுடைய பக்தர்களே உங்களை எழுப்புவதற்கு நான் வருவேன்.

நான் எவ்வளவு புத்திசொல்லியும் என்னை அறியாதவன் முடமடைந்த முழு நீச புத்தியினால் என்னை கண்டு கொள்ளாமல் இருந்தவன். ஒரு நாள் நன்மை வேண்டும் என்று வந்திருப்பான். அவன் எப்படியாவது நன்மை பெற வேண்டும் என்று என்னை பணிந்து கும்பிடுவான். ஆனால் அவனை நான் நரகில் தள்ளி விடுவேன். ஆனால் என்னுடைய கோத்திரத்தில் தர்மகுலத்தில் வந்த தேவகுலத்தை சார்ந்தவர்களுக்கு என்னால் ஆக மட்டும் புத்தி

சொன்னேன். ஆனால் அதிலும் கேளாத பேர்களுக்கு நான் என்ன செய் வேனப்பா? திருமஞ்சண நீர் ஒருவருக்கு பயன் இன்றி பாலாறாய் வருகிறது. கம்சன் என்ற ஆணவ அரக்கனை அழித்து அமுதம் அருந்தி விட்டேன். இப்படியே ஆணவத்தை அழித்து அமுதம் அருந்தியவர்களிடம் ஆண்டியாகிய நான் வந்து குடியிருப்பேன். யார் யார் தன்னுடைய மனதில் இருந்த ஆணவ அழுக்குகளாக இருந்த அகப்பகைகளை எல்லாம் நீக்குகிறார்களோ அவர்கள் மனதில் நான் வந்து குடியிருப்பேன்.

நீங்கள் தத்தெடுத்த பிள்ளைகள் இல்லை. இந்த உலகத்தையே தன் உள ஆக்கலாலும் நிலைப்படுத்துதலாலும் காத்தலாலும் நீக்கலுமாகிய முத்தொழில்களையும் செய்கின்ற திருமால் பெற்ற பிள்ளைகள். இப்பொழுது உங்களை இந்த உலகை ஆளக்கூடிய தகுதியை உடைய மேன்மை மிக்க பிள்ளைகளாக பெற்றெடுத்து வைத்திருக்கின்றேன். விருதுகொடி வம்சத்தில் பிறந்த எனக்கு மிகவும் விருப்பமுள்ள பிள்ளைகள் நீங்கள். என்னுடைய மந்திரிகள் எல்லோரும் ஒருமுகமாக பிறவி பெருங்கடலில் என்ற அலைவாயில் கரையில் வருவதற்கு அழைக்கின்றார்கள். அதாவது பிறவி பெருங்கடலை விட்டு விடுபடுவதற்காக அழைக்கின்றார்கள். ஆடுகிடாய் கோழி பன்றி இவைகளை அறுத்து பலி செய்யும் படி நான் கேட்கவில்லை. கோழி முட்டை ,பொரித்த கறி பொங்கல் வைத்து தர நான் கேட்கவில்லை. உருகசுட்ட பணியாரம் அவல் உருண்டை கேட்க வில்லை. கருக சுட்ட முறுக்குகளும் கடையல் பாலாகிய வற்றக் காச்சி உறையிட்ட பால் கேட்கவில்லை. நான் கொடுத்த கிடைத்தற்கரிய சிறப்பு மிக்க மானிட உடலில் ஆன்ம ஜோதியை ஒளிர செய்யவில்லையே!. நான் ஒருகாசம் கேட்கவில்லையே. உமையவளே அறிவாயோ! என்னை ஒன்றும் சொல்லாதே இறைவனும் அறியலையோ. வெகு நாளாய் வந்திருந்து புத்தி சொன்னேன் நான். எதையும் கண்டு கொள்ளாமல் அதர்மம் செயல்களை செய்து அந்த தீயில் கருகுகிறானே. எத்தனையோ சொல்லியும் கேட்கவில்லையே என்னுடைய பிள்ளைகளே! முடுமுடுக்கம் செய்து வன்முறையில் ஈடுபடுகிறானே!.

நான் தவம் இருக்கும் இடத்திலே வலமிடம் மாறாட்டம் செய்து வைத்து இருக்கிறார்கள். அதாவது கலைமுனி ஞானமுனிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை மறைத்து உண்மைக்கு புறம்பாக மாறுபட்டதை சொல்லி என் மக்களை ஏமாற்றுகிறார்கள். பூலோக

மக்கள் அதிர்ச்சி அடையும் படி பொய் கதையை சொல்லி பொய்ரதத்தை ஓட்டி வைத்தான். என்னுடைய சீசர்களை நீங்கள் ஒன்றும் செய்யாதீர்கள். நான் இங்கு வெகு நாளாய் காத்திருந்து எல்லோரையும் வருத்தி அவர்களின் துன்பங்களை தீர்த்து வைத்தேன்.

குற்றம் குறை நோவான குஷ்டநோய் முதல் கொடிய நோய்களையும் குணப்படுத்தினேன். கண் குருடு, கால்நொண்டி மற்றும் அனைத்து கர்மவினை நோய்களையும் தீர்த்து வைத்து தெட்சணா பூமியில் தென்குமரி நன் நாட்டில் நான் வந்திருந்து வெகுநாளாய் புத்தி சொன்னேன். எத்தனையோ முறை திரும்பத் திரும்ப என்னால் ஆகும் மட்டும் புத்தி சொன்னேன். கலிநீசர்களால் அப்பன் அம்மை இல்லா பிள்ளை என கொடுமைப்படுத்தப்பட்ட மேன்மை மிக்க பிள்ளைகளை அம்மை உமையாள் வந்து அணைத்து கொண்டாள். இனிமேல் அவர்களுக்கு துன்பமில்லை அவர்களுடைய வெள்ளை உள்ளத்தை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு திருவருள் கிடைக்கும் படி அருள் புரியப்பட்டது. திருமால் நியமித்தபடி உங்களுக்கு தெப்பக்குளம் அங்கே இருக்கிறது . பிராமண வேஷம் போட அதாவது கோவில்களில் பணிவிடை காரணங்களாக (அர்ச்சராக ) பணி செய்ய பக்தர்களாகிய உங்களுக்கு உரிமை உண்டு.

பொன்னொளியினாலான பூ நூலும் தங்கச் சரிகை இட்ட சாலுவையும் கடுக்கண் திருக்காணியும் அணிந்து கலியுகத்தில் வேலை செய்ய உங்களுக்கு வேலை இல்லை. பொன்னரும்பு வேலை செய்யப் பூமியில் தட்டானும் இல்லை. பொன்னொளிப் போன்ற அழகுடைய சப்தமாதர்கள் பெற்ற பிள்ளைகள் தர்மயுகத்தில் வந்தால் பொன் ஆபரணங்கள் அணிவதற்கு தயாராக வைத்திருக்கின்றேன். அங்கு தங்கி இளைப்பாறுவதற்கான அழகான மஞ்சமும் உண்டு. அருள் பாலிக்க நான் இருக்கிறேன். பட்டம் அரசாள ஏராளம் மக்கள் உண்டு. அவர்களுக்கு தெளிவாக அத்தாட்சியுடன் கூட உரிமையை நான் கொடுப்பேன். எல்லோருக்கும் ஒரு போலே பாரபட்சம் இன்றி அருள்பாலிக்க ஈசன் நான் இருக்கின்றேன். மேன்மை மிக்க தர்ம ராஜ்யத்தில் சீமை கட்டி ஆளலாம். அங்கு குதிரை கட்ட லாயம் உண்டு. ஏராளமாக சிறந்த அபூர்வமான குதிரைகளை கட்டலாம். மேன்மைமிக்க அந்த ராஜ்யத்தில் அமுதருந்தி வாழலாம். அணிவதற்கு நல்ல மேன்மையாக பட்டாடைகள் உண்டு. மிகுந்த செல்வ செழிப்புடன்

வெற்றிக்கொடி கட்டி வாழலாம். சான்றோர் பார்க்கும் மேன்மையான நடனங்கள் உண்டு. இவையெல்லாம் தம்பிரான் அருள் ஆகும். ஆணி மேல் ஏறி நீங்கள் குற்றம் குறைகளை கண்காணிக்கலாம். இத்தனை பவசுகளும் உங்களுக்கு சீதனமாக தருகிறேன். இந்திர பதவியும் அங்கு உண்டு.

என் கண்மணிகளே உங்களுக்கு கலியுகத்தில் வேலையில்லை. அங்கே உங்களுக்கு தேவையான நெல் மணிகளும் சிறு தானியங்களும், ஏராளமாக விளையும் கோவக்காய் பாகற்காய் கொழுந்து வகைகளும் அங்கே உண்டு. தம்பிரான் அருளால் சத்தியவாக்காய் சொல்லுகிறேன். தலைவாசல் ஆனதிலே தலை துவற்றி மயிர் முடித்து கற்புடைய ராசனாகிய தர்மத்தின் தலைவன் வந்து சிறிது பெரிதாக காட்டும் பூத கண்ணாடி வைத்து பார்த்தான். எதற்காக என்றால் தர்ம யுகத்தை ஆளும் தகுதி யாரிடமும் இருக்கிறது என்பதை சோதித்து தெளிவதற்கு ஆகும்.

மேலும் அங்கு பிறப்பு இறப்பு இன்மையால் எடுத்து புதைக்க எவரும் இல்லை. அதாவது புதைப்பதற்கு அவசியம் இல்லை என்பதாகும். அந்த அளவுக்கு உங்களை நான் பாதுகாத்து வைத்துக் கொண்டு இருக்கிறேன். திருமால் இரண்டாவது முடியாகிய முக்தி நிலையை தரிக்க உங்களுக்கு நீராவி கரைகளும் உண்டு. சங்கு சக்கரமும் உண்டு. கன்னி திருத்தென் திசையில் வந்திருந்து உங்களுக்கு மேல் முடி அருளுவேன். மேலும் என்றும் பதினாறு என்னும் அமுத நிலை அருளுவேன். மேன்மை மிக்க தோழர்களும் அங்கே உண்டு. பஞ்சவரே சீடர்களே உங்களுக்கு வஞ்சகமாய் செல்லவில்லை எதையும் மறைக்காமல் வெளிப்படையாகவே சொல்லுகிறேன். இந்த அஞ்ஞான உலகில் வந்திருந்து உங்களுக்கு நான் நடுநியாயம் தீர்த்து வைக்க வாரேன். இவ்வுலகில் அவதரித்த நாள் முதலாய் பால்காவடி முதலான எந்த சிறப்புகளும் வேண்டாம் என்று பண்டாரமாகிய நான் இங்கு வந்திருக்கிறேன்.

சின்னஞ்சிறு மதலையாக அதாவது எந்தவிதமான மன அழுக்குகளும் இல்லாத ஒரு நிலையில் தெட்சணத்தில் வந்து நான் தவசு இருந்தேன். தவசு இருக்கும் போது எந்த உலக சிறப்புகளையும் விரும்பவில்லை. பிச்சு மாலை, அச்சு மாலையாகிய அருகுமாலை, பொரி,அவல், நல்லெண்ணெய் புண்ணாக்கு ஆகிய எதையும் நான் கேட்கவில்லை. தெய்வமாதர்கள் பெற்ற பிள்ளைகளாகிய

சான்றோர்கள் கலிநீசர்களால் காடு காடுகளாய் விரட்டப்பட்டு மனம் பேதலித்து பயத்தினால் அற்ப பேய் பிசாசுகளை வணங்கி திரியிறார்களே! இந்த பேய்களுக்கு பயந்து பேய் எச்சி தின்று பேய் போல அலைகிறார்களே! நானே அனைத்துமாய் ஆனேன். அனைத்தின் உள்ளும் புறமும் நிறைந்துள்ளேன். எனவே நீங்கள் உங்களை என்னிடம் முழுமையாக தந்து விடுங்கள்.

அதாவது என்னை சரணடையுங்கள். உங்களை நான் காத்தருளுவேன். நாகம் போலே உள்ள பேய்களை நல்ல தீயால் ஞானக்கினியால் எரித்துவிடுவேன். மந்திரம், கழிவு, சூனியம் மாறண வித்தை ஆகியவற்றை சாபத்தால் அழித்து விடுவேன். ஆகவே இவற்றிற்கெல்லாம் பயந்து நீங்கள் அலைய வேண்டாம். மக்கள் மீது கருணை உள்ள ஈஸ்வரியே அவர்களைக் காத்தருள வேண்டும் என்று வணங்குகிறேன்.

சுமக்க இயலாத பெரிய கல்லைத் தலையில் ஏற்றிக் கட்டி வைத்து அடிக்கிறானே நீசன். கலிநீசன் அவர்கள் தலையில் கல்லேற்றி கம்பு கொண்டு அடிக்கிறானே. இப்படி வீண்பழி சுமத்தி அடைகிறானே. அவர்களின் அழுகுரல் உனக்குக் கேட்கலையா? அரியரசனாகிய திருமாலின் தவத்தால் தெய்வமார்கள் பெற்ற பிள்ளைகளே, நீங்கள் பொறுத்து இருங்கோ பூலோகம் ஆள வைப்பேன்.

குடுக்கவட்டைச் சிரட்டையாகிய சுரைக்கோடு கொண்டு வந்து இருந்தேனடா. வஞ்சித்தும் போர்ப்படையுடன் போரிட்டும் திறம் பார்க்க நான் வரவில்லை. அரியரசனாகிய திருமால் தவம் இருந்து பெற்ற பிள்ளைகளை பொன்னரசு இராச்சியத்தில் மகிழ்ந்திருக்க செய்திடுவேன். இந்த மன்மதன் சீமையாகிய காமன் ஆட்சி செய்யும் இந்த பூமியில் வாளைச் சுழற்றிச் சண்டையிடுவோர் உண்டு. என் பிள்ளைகள் இந்த கலிநீசர்களுக்குக் கூலி வேலை செய்ய வரவில்லை. அவர்கள் மேன்மை மிக்க வரம் பெற்றவர்கள். வற்றிய குளத்துக்குள்ளே மீன்பிடிக்க வரவில்லை. அம்மா ஆதி சக்தியே இவர்கள் மேன்மை மிக்கவர்கள். இந்த நாட்டு சீமையிலே வகை எடுக்க வரவில்லை. என்னுடைய பிள்ளைகளே நீங்கள் பரமபதத்தில் மகிழ்ந்திருப்பீர்கள். சகஸ்ரா ஒளி நிலையிலிருந்து உங்களுக்காய் தவமிருந்தேன். காசி இராசர் மகனான முருகன் வாழும் தேசமாகிய பரமபதம் நான் வருவேன். நான் நிலைப்படுத்தி இடம் என்றும் நிலைத்திருக்கும். நான் பெற்ற என் மக்கள் சான்றோர்கள் தான் தர்ம

இராச்சியத்தை ஆள்வார்கள். மேன்மை மிக்க பெருஞ்சுனையில் ஊற்றால் என்று சொல்லக் கூடிய வலைப் போட்டு மீன்களை பிடிப்பது போல் நல்லவர்களாகிய தர்மிகளை தேர்ந்தெடுக்க வந்திருக்கின்றேன். அதர்மிகளுக்குப் பழிபாவம் செய்திடுவேன். இன்னும் சில காலம் பொருத்திருந்து பாருங்கள்.

செடிக்கலைத்து வேட்டையாடி தெளிந்த முயல் பிடிக்க வந்திருக்கின்றேன். அதாவது மக்களுடைய மனங்களில் இருக்கின்ற புதர்களை எல்லாம் அதாவது தீய எண்ணங்களாக இருக்கின்ற செடிகளை எல்லாம் நீக்கி அவர்களுடைய மனதை தெளிய வைத்து தூய்மையாக்கி நல்லவர்களை தேர்ந்தெடுக்க வந்திருக்கின்றேன். நீசர்களை பகை கொண்டு அழித்து விடுவேன் . சிறிது காலம் பொறுத்திருந்து பாருங்கள். அதிவேகம் உள்ள வெடிகளால் சுட்டு வீழ்த்துவேன்.

மென்மையான இளம் கொடியாகிய நல்லவர்களை தாங்கி தாங்கிப் பிடிக்க வந்திருக்கின்றேன். என்னுடைய பக்தன் மாரே இரக்கம் உள்ள பிள்ளைகளே, கடுவாய் , புலி, சிங்கம் போன்ற கொலைகார பாவிகள் தூரத்தே நின்று சிரிக்கின்றார்கள். வெகு நாளாய் ஒழிந்து இருந்து பார்த்து ஓடி வந்தேன் எடுப்பதற்கு. நான் பெற்ற பிள்ளைகள் ஆலிலை போல் வாடுகின்றார்கள். பொல்லாத பாவிகள் தான் துயர படுத்துகிறார்கள். கண்ணுள் மணியானவரே இந்த உலகாளும் ராசாவே கலி அழிக்க வாருமப்பா. கலி நீசர்களை எதிர்த்து நிற்க இந்த நேர்மை உள்ள பிள்ளைகளுக்கு மன வலிமையும் இல்லை உடல் பலமும் இல்லை.

என் தாயாரே ஆதிசக்தி கமிஷனை போன்ற எண்ணம் உடையவர்களை அழிப்பதற்காக கனவரங்களைப் பெற்று வந்தேன். முத்தலத்தோரான ஞானிகள் எல்லோருடனும் கூடி இருந்து தெப்பக்குளம் காட்டுவேனான். முத்து பதித்த வைகுண்டம் எனும் பரமபதத்தில் உள்ள மகாமேரு பருவதத்தை நீங்கள் ஆளலாம். ஊசிகள் தான் போட்ட மிகச் சிறப்பாக அமைக்கப்பட்ட பவளக்கோட்டை அங்கே உண்டு. இறை அருளால் எப்படியும் நீங்கள் அதை ஆளலாம். உருண்டோடும் சக்கரம் பொருத்தப்பட்ட தேரும் முத்து பதித்த தேரும் வெஞ்சாமரை வீசுதலும், பவளத்தாலான ஆபரணமும், மண்டபமும், நவரத்தின கல் பதித்த விளக்குகளுமான ஏராளமான செல்வங்கள் அங்கே உண்டு.

நடமாடும் சாலை எல்லாம் நல்ல தெய்வார் கூட்டம் அங்கு இருக்கிறது. தங்க குதிரையாகிய நல்ல உயர்ந்த சாதி குதிரைகள் அங்கு இருக்கின்றது. தர்மத் தலைவரான பரப்பிரம்மம் தர்மக்கொடிக் கட்டி அரசாள்வார். உங்களை பால் கொடுத்து தாலாட்டி பஞ்சணை மெத்தையில் எடுத்து படுக்க நான் செய்திடுவேன். பஞ்சணை மெத்தையில் படுத்துரங்கக்கூடிய நாள் நெருங்கிவிட்டது. கால்களுக்கு வீர தண்டையும், கைகளுக்கு தங்க வளையல்களும் உண்டு. குகையாளப் பிறந்தவர்களே எழுந்திருங்கள். பேரின்பம் அனுபவிக்க பிறந்தவர்கள் நீங்கள். என் குழந்தைகளே விழித்துக் கொள்ளுங்கள். கலிமாய எண்ணங்களை மாற்றி மாற்றி ஞானத்தை பெற்றுக் கொள்ளுங்கள். ஆட்சி அதிகாரத்தால் ஆணவம் தலைக்கேறிய கலிநீசர்கள் உங்களை அநியாயமாக மல்லு கட்டி அடிக்கிறார்களே. இதைப் பொறுத்துக் கொண்டு இருக்க முடியவில்லையே. இப்பாருலகை அழிக்க படைப்பொருதி வா மகனே. நீ மேன்மை மிக்கவன். நீ படும்பாட்டை பொறுக்க முடியவில்லை. மண்டை மயிர் பறிய மண் சுமந்து அரும்பாடு பட்டு கொண்டு வந்த காசையும் வாடா பயலே அதட்டிக் பறித்துக் கொள்ளுகின்றான். இந்த நீசன் சீமையாளவா நீங்கள் வந்து பிறந்தீர்கள்? நீங்கள் தர்மப்பதியாள பிறந்தவர்கள். இந்த தெய்வ குலத்தின் தாயாரே இவர்களை கூட்டோடு தானெனுப்பி இந்த உலகை ஆளவைக்க வேண்டும். தீயவர்களை அழிப்பதற்காக வேலாயுதம் எடுத்து வந்த கோலனெடு மாலவனின் மகன் ஆளுகிறான்.

கலியுகத்தை முடிப்பதற்கு காரணமாய் தவசி இருந்தேன். அதனால் கண்கள் ரத்தமாக சிவக்க உடல் காய்ச்சலாக வேகிறது. உங்கள் கண்காண அக்கலி நீசர்களை நான் சுருட்டி கட்டி அழிப்பேன். அன்பான சான்றோர் மக்களுக்கு பிறவாமை என்னும் பேரின்ப வாழ்வை அருளுவேன்.

திருச்செம்பதி பண்டாரமாகிய நான் இப்பாருலகில் நிகழ்வதை உரைப்பதற்காக தொடர்ந்து வந்தேன் கண்மணிகளே. வெகு நாளை கலிநீசன் கொடுமைகளைப் பார்த்து இருந்து இங்கு வந்து ஊமைபோலே இருக்கின்றேன். நான் பொறுமையாக இருக்கின்ற போது அந்த கலிநீசன் தன்னால் அழிவான். துன்பம் தாங்க முடியாத பஞ்சபாண்டவர்களாகிய சீடர்கள் பல ஆவலாதி வைக்கின்றார்கள். கைலைக்கு வடபுறமுள்ள கனத்த திட்டு பாறையில் ஓமகுண்டம்

கலியலுக்க வளர்த்து உங்களுக்காய் கலியழிக்க தவசி இருக்கின்றேன். நீங்கள் தீப்பாய்ந்து, தீயதிலே இறங்கி உடலை விட வேண்டாம். கூட்டோடு கைலாசம் உங்களுக்காய் காத்து வைத்துள்ளேன். இங்கே உண்டு உறங்க நீதி இல்லை. நிழல் பாங்கான இடத்தில் ஒதுங்கி இருக்கவும் நீதியில்லை. கண்ணுள் மணி ஆனவரே காரும் இந்த பிள்ளைகளை மேன்மை மிக்க தெய்வமாதர்களின் பிள்ளைகளை. மேன்மை மிக்கத் தெய்வமாதர்களின் பிள்ளைகளைத் தேர்ந்தெடுக்க வாரும். என் கண்மணிகளை தென்னந்தோப்பில் கூட்டி சென்று மரத்திலேறி சில பச்சை ஓலைகளை வெட்டச் சொன்னான். அப்படியே முழுமையாக வெட்டி அவற்றைச் சுமந்து கொண்டு போகச் சொன்னான். அப்படியே கொண்டு போய் போட்டவனை ஆனைகட்டும் தறியில் கட்டி வைத்து அடித்தான்.

பஞ்ச பாண்டவர்கள் ஆண்ட பூமியைத் தாரும் என்று கலிநீசன் கேட்டான். சில காலம் கூலிக்காக காரும் என்று நான் கொடுத்தேன். நான் கொடுத்த நாட்டை அவன் நாள்தோறும் ஆண்டு இருந்தான். தென்னை மரத்தில் ஏறி கருக்கிள நீர் வெட்ட சொன்னான். என் கண்மணிகளை சுமக்க சொன்னான். கொண்டு போய் சேர்த்ததும் கூடதிலே அடைக்கச் சொன்னான். குற்றம் குறைகள் சொல்லி சான்றோர் மக்களை அடித்தான். அழுது முறையிட்டாலும் கேட்கவில்லை. வெற்றிலை பாக்கு கொண்டு வந்து மன்னிப்புக்கேள் பயலே உன்னை நான் விடுவேன் என்றான். கம்பு கொண்டு பூமியை அளந்து இவ்வளவு இடத்தையும் வெட்டிப் புழுதையாக்கு என்றான். தம்பி படும் பாட்டை தாயாரே நீ கேட்கவில்லையோ? இவ்வாறு சான்றோர் மக்களை பல விதமாக கொடுமைப்படுத்தினான். அவன் பட்டம் பறிக்க வந்தேன். என் தர்மபத்தினியும் கூட வந்தாள். கலிநீசா! நீ உன் உடலழிந்து வீட்டோடு இருந்து கரிந்து போவாய். உன் பட்டம் அகங்காரம் எல்லாம் பறிக்கப்படும். குருநீதி ஆகிய தர்ம நீதியால் உன் சுற்றமும் நட்பும் அழிக்கப்படும். என் பொறுமை எனும் தீயாலே பூலோகம் அழியும். பதினெட்டு துர்கையாலே உலகம் எல்லாம் பாழாகும். வடதிசை கடாலும் அழிவு வரும். வானத் திடிகளாலும் அழிவு வரும். பூமி கண்டதுண்டமாய் வெடிக்கும். மலைகள் இளகும். சூறாவளி காற்றாலும் அழிவு வரும். தேசம் விட்டு தேசம் ஜனங்கள் ஓடிவிடும்.

அப்போது ஒவ்வொரு வர் உள்ளிலும் ஜோதியாக இருக்கும் மாயாண்டி ஆகிய நான் வெளிப்படுவேன். வம்பர்களை வதைத்து வேரோடு அழிப்பேன். நண்பர்களை காத்து இரட்சிப்பேன். மாரி பொழிய செய்து ஆழி பெருக வைத்து அன்பான மக்களுக்கு அருள் செய்தோம். தாரணியில் வந்து சொல்வதாவது, வள்ளியாத்துக்கு மேற்கே வாரியால் அழியும். கோட்டாறு கொள்ளை நோயால் அழியும். சுசீந்திரமும் அதன் சுற்றுப்பகுதிகளும் ஆறு உடைத்து நீரினால் அழியும். சுசீந்திரத்தில் உள்ள தேரு தெற்கே வரும். தாமரை குளம் பதியும் தண்ணீருக்குள் மூழ்கும் கடற்கரையும் அழியும் சப்தமாதர்கள் பெற்ற பிள்ளைகள் ஏழும் இன வழியும் கருத்தாகவே கூடி வாழும் போது அய்யா குருபர நாராயண ரே அவர்களுக்கு காட்சி அளித்து அருள் பாலிப்பார். அப்போது தெற்கு வடக்காய் துவாரகையும் துலங்கும். ஈரேழு காதம் இருக்குது தான் துவாரகையும். வடக்கு வாசல் துலங்குகிறது. திரு அம்பலத்தில் நாராயணரும் அரசிருக்க வாறே நான் என்று மக்களுக்கு வாக்குரைத்தார்.